# வெளிச்சம்

புரட்டாதி 1993

25/=

## இரண்டாம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ்

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. V. SIVAGURUNATHAN

**Stockist For: Reckitt & Colman Of Ceylon Ltd**

**V. M. SANMUGAM & BRO**
*No. 85, Hospital Road,*
*Jaffna.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



…தரிசன நூலகம்
மாநகராட்சி மன்று
12-10-1993
யாழ்ப்பாணம்

புலிவீரர்
"புதிய புறநானூறு" எழுதும்
ஒவ்வொரு தடவையும்
பூமிஒருதரம் புல்லரித்துக் கொள்ளும்
விழிகளைத்திறந்து வியப்பைக் காட்டும்.
போராடிய பல தேசங்கள்
இன்று......
'பூஞ்சனம்' பிடித்துக் கிடக்கின்றன.
அகிலமே 'அரோகரா' சொல்ல
ஓடிய "போராட்டத் தேர்கள்"
அச்சாணி உடைந்து அசையாதிருக்கின்றன.
இங்கு மட்டும்
பிள்ளைத்தோல் உரியாத
பிஞ்சுப் பாதங்களுக்குக் கீழே
பூமி சிலிர்த்துக் கொண்டு சிரிக்கிறது.
எங்கள் பிள்ளைகள்
பள்ளிப் புத்தகம் சுமக்கும் கைகளில்
படைக்கலன் தூக்கியது
அடுத்த தலைமுறைக்கான 'அக்கினி யாகம்'
வேதவித்துக்கள் 'பத்ததி' வாசிக்க
எங்கள் தலைவன்
விடுதலை நெருப்புக்கு
நெய் சொரிந்து கொண்டிருக்கின்றான்.
'குண்டத்தில் மூண்ட தீ'
"குறிக்கோள் வரம்" கிட்டும்வரை
அணையாது.

—மாலிகா—

யாழ்ப்பாணம் பொது நூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிச்சம்

புரட்டாதி 1993

இதழ் — 18

அன்பார்ந்த தமிழீழ மக்களே!

வெளிச்சத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு மலரை உங்கள் கைகளிலே தரும்போது நெஞ்சம் ஆனந்தத்தில் ஆர்ப்பரிக்கின்றது. குழந்தைபோல் குதூகலிக்கவேண்டும்போல இருக்கின்றது. நூற்றாண்டுகள் கண்ட தினசரிகள்கூட இருக்கின்றனவே, அவைகளெல்லாம் அமைதியாகத் தம் பணியைத் தொடரும் போது இரண்டாண்டுகள் மட்டும் வெளிவந்ததற்காக 'வெளிச்சம்' 'குதிக்கும் குதிப்பைப்பார்' என்றுயாரும் நினைத்துக்கொள்ளலாம். என்னசெய்வது எங்களின் நிலை அப்படி. வசதிகள் வரிசையாக நிற்கும் பெரிய சஞ்சிகைகளுக்கு இரண்டாண்டுகள் என்பது சின்னவிடயம்தான். வெளிச்சத்துக்கு இது வியத்தகுசாதனை. ஏன் தெரியுமா? தமிழீழத்தில் பத்திரிகைகளுக்கான சகல மூலப்பொருட்களுக்கும் சிறிலங்கா அரசு தடைவிதித்திருக்கின்றது.

மின்சாரமற்ற இருளில், கோடடித்த பின்னர் அனுமதிக்கும் தரமற்ற தாள்களில் உள்ளூரில் உற்பத்தியாகும் அச்சுமையினால் வெளிச்சத்தை ஒப்பனை செய்து வெளியிடுகின்றோம். இதற்காக விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும், வெளிச்சம் ஆசிரியர் குழுவும் உழைக்கும் உழைப்பு இருக்கிறதே; அது சக்திக்கு மீறிய உழைப்பு. அந்த உழைப்பால் ஏற்படும் அலுப்பும், அசதியும் வெளிச்சம் உங்கள் கைகளில் இருக்கக் காணும் போதில் பஞ்சாய்ப் பறந்து போய்விடுகின்றது.

விடுதலைக்காக வெளிச்சம் தன்னால் முடிந்தளவு போராடுகின்றது. படைப்பாளிகளின் வீட்டுப்படலைகளைத் தினமும் தட்டி 'எழுதித்தாருங்கள்' என்று இரக்கின்றோம். 'விளம்பரம் தாருங்கள்' என்று கடைகடையாகப் படியேறி யாசிக்கின்றோம். ஓவியங்கள் வரைவதற்கு ஒன்றுக்குப் பத்துத்தடவைகள் அலைகின்றோம். அச்சகத்துக்கு தங்கள் உடற்சக்திக்கு மேலாக ஆசிரியர் குழுவினர் சைக்கிள் உழக்குகின்றனர். விற்பனைக்காக வெளிச்சத்தைக் கொடுத்துவிட்டுப் பணத்தைப் பெற்றுக்கொள்ள எவ்வளவு பாடுபடுகின்றோம். இத்தனையையும் மீறிக்கொண்டுதான் இரண்டு ஆண்டுகள் 'வெளிச்சம்' வெளிவந்திருக்கிறதே என்று குதூகலித்துக் குதிப்பதில் நியாயமற்றுப்போய்விடுமா?

இதுவரை இப்படியாயினும் 'வெளிச்சம்' வெளிவந்திருக்கிறது என்றால் அதற்குரியவர்கள் பலர். எமது தேசியத்தலைவரின் ஆசிகள் எமக்குப்பக்கபலமாக நிற்கின்றது. இன்னும் எமது இயக்கத்தின் ஏனைய பிரிவுகளின் ஒத்துழைப்பு, எம்மோடு இணைந்துதரும் ஆதரவு, உண்மையான விடுதலை நேசிப்போடு விளம்பரம் தந்துதவும் வியாபார நிறுவனங்கள், ஓவியர்கள், அச்சக ஊழியர்கள், வாங்கிப்படிக்கும் வாசகர்களாகிய நீங்கள், இப்படிப் பலதரப்பட்டவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பிலும், ஒத்துழைப்பிலுமே 'வெளிச்சம்' வெளிவருகின்றது. எல்லோருக்கும் நன்றிகள்.

எல்லாம் இருக்கட்டும்.

மீண்டும் எம் மண்ணிலே யுத்த மேகங்கள் கவிகின்றன. குண்டு வீச்சுக்கள், எறிகணை வீச்சுக்கள், படையினரை உற்சாகப்படுத்தும் பேச்சுக்கள், 'ஆறுமாத காலத்துக்குள் புலிகளை அடக்கிவிடுவோம்' என்ற ஆணவ அறிக்கைகள்—வழமைபோல போருக்கான அறிகுறிகள் தெரிகின்றன.

முந்திய எங்கள் பரம்பரையென்றால், இந்நேரம் வேலெங்கே? வாளெங்கே? வெற்றிக்கொடியெங்கே? தேரெங்கே? என்று தேடியிருப்பார்கள்.

தாயும் மனைவியும் கொற்றவைக்கு முன்னால் கூத்தாடிவிட்டு நெற்றியிலே திலகமிட்டு வழியனுப்பியிருப்பார்கள்.

வெற்றி அல்லது வீரச்சாவு என்று தமிழன் களம் நோக்கிப் புறப்பட்டிருப்பான்.

தமிழீழத்தில் போர்செய்வதற்கு எதிரி தன் நாட்டில் படை திரட்டுகின்றான்.

பல்லாயிரம் கோடி பணத்தில் படைக்கலன் சேர்க்கின்றான். தமிழனே! நீ மட்டும் உறங்கிக்கிடப்பது அழகல்ல. இது மானத்துக்கு மகுடம் சூட்டும் நேரம். வீரத்துக்கு விலை கொடுக்கும் காலம். 'பிரபாகரனின் காலம் பொற்காலம்' என்று அடுத்த தலைமுறை அறியட்டும்; 'தலைவன் தமிழீழம் எடுத்தான்' என்று இனிவரும் காலம் எடுத்துரைக்கட்டும்.

தமிழனின் நாடி நரம்புகளில் ஓடுவதெல்லாம் வீரத்தின் குருதி.
தமிழன் நெஞ்சில் எரிவதெல்லாம் மானத்தின் நெருப்பு.
இந்தத் தடவை எதிரிக்குநல்லபாடம் புகட்டுவோம்.
தமிழன் வெற்றி பெற்ற வரலாறு விளங்கட்டும்.
இனிப் போருக்கான சங்கு முழங்கட்டும்.


□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்த பாசங்களுக்கு அப்பாற்பட்ட நீதியை நிலைநாட்டுவோம்

“தனிப்பட்ட உணர்வுகளுக்கும், பந்த பாச உறவுகளுக்கும் இடமளியாது, நேர்மையுடன் பிரச்சினைகளை அணுகி, சத்தியத்தின் அடிப்படையில் மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும். இலட்சியப் போராளிகளாகிய உங்களிடமிருந்து தமக்கு நீதியும் நியாயமும் கிடைக்குமென மக்கள் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள். எமது மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் நீங்கள் நேர்மையுடனும் கண்ணியத்துடனும் செயற்பட்டு சமூக நீதியை நிலைநாட்ட வேண்டும்.

இன்றைய தினம் எமது இயக்கத்தின் போராட்ட வரலாற்றில் ஒரு முக்கிய தினமாகும். இன்றைய தினத்தில் தமிழீழ நீதித்துறைக்கு அத்திவாரமிடப்பட்ட ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாக இந்த சத்தியப் பிரமாண வைபவம் நடைபெற்றிருக்கிறது. முன்பு பஞ்சாயத்து முறையில் கிராமிய இணக்கசபைகளை நிறுவி மக்களின் பிணக்குகளைத் தீர்த்துவைக்க எமது இயக்கம் முயன்றது. இன்று நீதித்துறையில் பயிற்சி பெற்ற போராளிகள் நீதியாளர்களாகவும், சட்டவாளர்களாகவும் உருவாக்கப்பட்டு செம்மையான முறையில் நீதி நிர்வாகத்துறை கட்டி எழுப்பப்படுகிறது. ஒரு சுதந்திரம் பெற்ற, இறைமையுடைய நாட்டின் அரச நிர்வாக அலகுபோல எமது நீதித்துறை உருவாக்கப்படுகிறது. இது எமது போராட்டத்தின் பாரிய வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் போராளிகளாக இருந்து நீதியாளர்களாக மாறியிருக்கிறீர்கள். எந்த இலட்சியப் பற்றுடன் இயக்கத்தில் இணைந்து செயற்பட்டீர்களோ அதேபோன்ற தியாக உணர்வுடன், பொறுப்புணர்வுடன், பயம் கலந்த எச்சரிக்கை உணர்வுடன் நீங்கள் உங்களது கடமையை செய்யவேண்டும். கற்றது கைமண் அளவு, கற்காதது உலகளவு என்பார்கள். இந்த உண்மையின் அடிப்படையில் நீங்கள் உலக அனுபவத்திலிருந்து நிறையக் கற்றுக்கொள்ள முயலவேண்டும். அனுபவம் மூலமாகவே நீங்கள் நிறைந்த அறிவைப் பெற்றுக்கொள்ளலாம்.

போராளிகள் நீதியாளர்களாகவும் சட்டவாளர்களாகவும் பொறுப்பை ஏற்றால் தமது பிரச்சினைகளை நேர்மையாக அணுகி, சரியான முறையில் நீதி வழங்குவார்கள் என எமது மக்கள் எதிர்பார்க்கிறார்கள். போராளிகள் ஒரு உன்னத குறிக்கோளுக்காக தமது உயிரையும் துறக்க தயாராகவுள்ள இலட்சியவாதிகள் என்பதை எமது மக்கள் அறிவார்கள். எனவே போராளிகளாகிய நீங்கள் நீதிநிர்வாகத்தை பொறுப்பேற்கும் பொழுது மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் நீங்கள் நேர்மையுடனும், பொறுப்புணர்வுடனும் செயலாற்றுவீர்கள் என நம்புகிறேன்.

மக்களின் நாளாந்த பிரச்சினைகள், மனித உறவுப் பிரச்சினைகள், முரண்பாடுகள் ஆகியன உங்களுக்கு சிறிய பிரச்சினைகள் போன்று அர்த்தமற்றதாகத் தெரியும். ஆனால் மக்களுக்கு அவர்களது பிரச்சினைகள் பூதாகரமாகத் தென்படும். ஆகவே மக்களின் உணர்வுகளைப் புரிந்து அவர்களின் முரண்பாடுகளைக் களைந்து அவர்களுக்கு நீதி வழங்குவதை உங்கள் கடமையாகக் கொள்ளவேண்டும். நேர்மையாகவும், உண்மையாகவும் செயற்படுவதில் பல சிக்கல்கள் இருக்கத்தான் செய்யும். சில சமயங்களில் விமர்சனங்களுக்கும், சர்ச்சைகளுக்கும் ஆளாகவேண்டியும் ஏற்படலாம். ஆனால் எப்பொழுதும் நேர்மை தவறாது, சத்தியத்தின் வழியில் நீங்களும் உங்களது கடமையைச் செய்யவேண்டும். அதற்கான உறுதியும், துணிவும் உங்களிடம் இருக்க வேண்டும்.''

*[தமிழீழ நீதியாளர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வின்போது தமிழீழ தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து]*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## போராட்டம்

அடேல் ஆன்

பூமியின் இதயத்திலிருந்து
ஒரு ஓலம் எழுகிறது.
கொடுந்துயரில் விதும்பி
எமது தேசம் அழுகிறது.
நாட்டின் உடல் சிதைந்த உதிரம்
நதியாக கரைபுரண்டு ஓடுகிறது.
நிலம் சிவந்து நடுங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிச்சம்

நெருப்பு விதைகள்
வாய்பிளந்து வெடிக்கிறது.
மண்ணின் மடியில்
புதுமுளைகள் தளிர்க்க
நம்பிக்கை பிறக்கிறது.

வெய்யிலில் வளர்ந்து
வெள்ளத்தில் நீராடி
புயலில் விளையாடி
தலைநிமிர்ந்தன தளிர்கள்.
தேசத்தின் அடிவானில்
உதிக்கும் சூரியனின்
இரத்தம் பெருக்கெடுக்க
புதிய வரலாறு
உதயம்பெற்றது.
பெருமைபெற்ற பழமை
உறுதிபெற்ற புதுமையாக
மறுபிறப்பு எடுத்தது.

சுதந்திர தீ
சுவாலையாக எரிந்து
பூமியைச் சுடுகிறது.
போராளிகளின் மூச்சு
எரிமலையாய் கொதிக்கிறது.
சாவின் கரங்களால்
தணிக்க முடியாத
நெருப்பு அலைகள்
வீறுகொண்டு எழுந்து
விடுதலை முரசுகொட்ட
எமது தேசம்
விழித்தது.

(ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ இதனைக் கவனியுங்கள்!

- காகிதாதிகள் (சகலதும்)
- அச்சக மை வகைகள் (தரமானவை)
- சயிக்கிள்
- சயிக்கிள் உதிரிப்பாகங்கள்
- பெயின்ற் வகைகள்
- பாடசாலை உபகரணங்கள்
- அலுவலகத் தேவைக்கான பொருட்கள்

எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ள

# புஸ்பா அன் கோ

மொத்த / சில்லறை வியாபாரிகள்

**இல. 293, மானிப்பாய் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழ்ப் பண்பாட்டின் உருவாக்கம்

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

உலகின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்ற தமிழர்கள், தங்கள் குழுமத்தனித்துவத்தைப் பற்றிய உணர்வு (பிரக்ஞை) வரும் பொழுதெல்லாம், பயன்படுத்தும் தொடர் "தமிழ்ப்பண்பாடு" என்பதாகும். இந்தத் "தமிழ்ப்பண்பாடு" என்பது தங்களை மற்றைய தமிழர்கள் - தமிழ்ப்பேசும்மக்கள் யாவருடனும் ஒன்றிணைக்கும் ஒரு அருஞ்செல்வப்பேறு என்று கருதுகிறார்கள்.

இந்தப் பேறுடைச்செல்வமானது (ஆங்கிலத்தில் இதனை *Heritage* என்பர்) மதவேறுபாடுகளைக் கடந்தது. கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், சைவர், வைஷ்ணவர் என்ற வேறுபாடு கிடையாது, தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட சகலரையும் உள்ளடக்கி நிற்கும்.

மதவேறுபாட்டுக்கிடையேயும் இந்த ஒருமைப்பாட்டினைக் கொண்டுவருகின்ற அந்தச் செல்வப்பேறுகள் யாவை?

முதலாவது — மொழி
அடுத்து — இலக்கியப் பாரம்பரியப்பேறு
அடுத்து — சில கலைகளின் பேறு
இசை, நாடகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையாவற்றுக்கும் அடிப்படையாகவுள்ளது { ஒரு குறிப்பிட்ட சமூக உறவுமுறை

{ இந்த உறவுமுறையானது ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பினைச் சுட்டுவதாகும்.

இந்த உறவுமுறை திராவிடமக்கள் சகலருக்கும் பொதுவான தாகக் கொள்ளப்படுவதாகும். திராவிட வகுமுறை உறவு முறைமை என்பர் (*Drabidian Classificatory Kinship*) என உலகமானிடவியலாளர் இதனைக்கூறுவர்.

தாய், தகப்பன், மகன், மகள் என்ற வகைபாட்டின் அடிப்படையில் சமூக உறவு முறையில் தொகுத்துக்கொள்ளல் இதன் பண்பாகும்.

தாய்
தாயின் தாய்
தாயின் தகப்பன்
தாயின் சகோதரர் — அம்மாவின் சகோதரர்
(அம்மா, அம்மாவின்
அம்மான் — மாமா)
சிறியதாய், பெரியதாய்
தகப்பனின் சகோதரர்
மாமி, சித்தப்பா, பெரியப்பா
மகன் — பெற்றமகன், பெறாமகன்
மகள் — பெற்றமகள், பெறாமகள்

இவர்களிடையேயுள்ள உறவுக்கோலம் — யார் யாரை மணம் முடிக்கலாம்; யார் யாரை எவ்வாறு அழைப்பது என்பது இவர்களை — இவர்களது மொழி

உடை
உணவு முறைமைகள்
அழகுபற்றிய கருதுகோள்கள்

என வரும் பலவற்றுடன் இணைத்து தமிழர்களாக வைத்திருக்கின்றது. இது ''மொழிப் பண்பாடு'' என்று கூறப்படும்.

இந்த ஒருமைப்பாடு நிலவுகின்றபொழுது, அது ஒரு பிரக்ஞை (உணர்வு) வடிவ மாகின்றது. இந்த உணர்வு ஒரு குழும உணர்வாகின்றது.

எனவேஇங்கு பண்பாடுஎன்பது சிலநடைமுறைகளினதும், வாழ்க்கை எடுகோள்களின தும் தொகுதியாகும். இந்த உணர்விற்கான தேவையும், இந்த உணர்வை வளர்ப் பனவும், இந்த உணர்வை அடுத்த தலைமுறையினருக்குக் கையளிப்பதற்கான உணர் வும் நடைமுறைகளும் ஒருங்கு இணையும்பொழுது பண்பாடு பற்றிய உணர்வு ஏற்படு கின்றது. பண்பாடு என்பது நம்மை நமக்கும் நம்மைப் பிறருக்கும் எடுத்துக்காட்டு கின்ற உயிர்ப்பு நிலையென றேமண்ட் வில்லியம்ஸ் கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பண்பாடு எவ்வாறு உருவாக்கப்பட்டது, அதன் வரலாற்றுக்கட்டங்கள் யாவை என்பது சுவாரசியமான ஒரு விடயமாகும்.

இதனை நாம் அறிந்துகொள்வதற்கான உந்துதல்கள் இரண்டு உள்ளன.

**ஒன்று** தமிழர்கள், உலகின் பல்வேறு நாடுகளில் அரசியற் குழும மாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர். குறிப்பாக தென்னாசிய, தென்கிழக்காசிய நாடுகளில் இது முக்கியமான ஒரு சமூக அரசி யல் யதார்த்தமாகும்.

**இரண்டாவது** இந்தியப்பண்பாட்டினுள், தமிழ்ப்பண்பாடு பெறும்இடம் பற்றிய சிரத்தை. இது முக்கியமானது. ஏனெனில்

1) இந்திய மரபினுள், அதன் தொடர்ச்சியை இன்னும் வழக்கு நிலையிலே காட்டி நிற்கும் நீண்ட வரலாற் றுத் தொடர்ச்சியுடையது, தமிழாகும். (வடமொழி இன்று வழக்கில் இல்லை; தமிழ் பயிலப்பட்ட நாள் முதல் இன்று வரை அழியாதிருக்கிறது. இதனால் இந்தியப் பண்பாட்டுக்கான தொடர்ச்சியைக் காட்டு கின்றது.)

2) தமிழ் ஒன்றுதான், அன்றுமுதல் இன்றுவரை ஏற்பட்டு வந்துள்ள மாற்றங்கள் யாவற்றையும் எழுத்தில் நிற்கும் இலக்கியத்தைக் கொண்டது. இத்தகைய கால நீட்சியும் தொடர்ச்சியுமுள்ள இலக்கியங்கள் மிக மிகச் சிலவே — கிரேக்கம், சீனம் போன்ற வற்றைக் கூறலாம்.

இந்தத் தமிழ் நிலை உணர்வுஇரண்டு வகைப்பட்ட உணர்வுகளினால் இன்று சமகாலத்தில் — பேணப்பட்டுவருகின்றது.

முதலாவது — தமிழர்கள் என்ற சமூக—அரசியல் நிலைஉணர்வு. இது 19ம் நூற் றாண்டு முதல், தமிழகத்தில் வளர்ந்து வந்துள்ள ஒன்றாகும். இந்த நிலையில் தமிழின் தனித்துவத்தை அது சமஸ்கிருதத்தி லிருந்து வேறுபட்டது, இந்திய மரபினுள் தனித்துவமானது, சமஸ்கிருதத்துக்கு முற்பட்டதும் கூட, எனும் உணர்வுகள் வளர்ந்து வந்துள்ளன.

இந்த வரலாற்றினைத் திராவிட இயக்க உணர்வு வரலாற்றிலே காணலாம். இந்தியா வுக்கு வந்த மேனாட்டவர்களின் புலமை அவதானிப்புகளினால் இந்த தனித்துவம் கண்டறியப்பட்டது. தமிழ் பேசும் மக்களால் வளர்த்தெடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கண்ணோட்டத்தில் இந்தப் பண்பாடானது சமஸ்கிருதத்துக்கு முந்தியன வும், சமஸ்கிருதம் அல்லாதனவுமாகிய அமிசங்களைக் கொண்டது. இந்தக் கண்ணோட்டத்தில் இதன் இலக்கியப்பேறு மிக அழுத்தம்பெறு குறிப்பாக

சங்க இலக்கியம்
திருக்குறள் — முக்கியமானவை.

ஆனால் இந்த நோக்கு இந்தப் பாரம்பரியத்தின் வேறுசில பேறுகளை அழுத்தாமல் விட்டுவிடுகிறது.

அவையாவன:- ஒரு மட்டத்தில்
கோபுரம்,
நடராஜர் திருமேனி
பக்தி இலக்கியம்
பண்ணிசை
(பக்தி இலக்கியம் கிறிஸ்தவத்துக்கும் உண்டு. இஸ்லாத்துக்கும் உண்டு)

மற்றையமட்டத்தில்
தெருக்கூத்து
ஒயிற்கும்மி
வாய்மொழிப் பாடல்கள் — கண்ணி
ஏசல்
சிந்து
அம்மானை
முதலியன உள்ளன.

இவற்றைத் தொகுத்து நோக்கும்பொழுது, தமிழ்ப்பண்பாட்டின் உருவாக்கத்தில் தொழிற்படுவனவற்றை இனங்கண்டறிந்து கொள்ளலாம்.

முதலாவது — மொழியைத் தமது வாழ்க்கையின் மையப்புள்ளியாகக் கொள்ளுதல் என்பது.

இது சங்ககாலம் முதலே காணப்படுகின்றது.

''தமிழ் முழுதறிந்த தன்மையன்'' தமிழகம் (தமிழல்லாத பிறபகுதியை ''மொழி பெயர் தேசம்'' என்பர்.)

''தமிழ் முழுமைத் தன்மை பொருப்பன்'' வடமொழி இலக்கிய மரபில் வராத ''அகம் புறம்'' இலக்கிய மரபையே ''தமிழ்'' என்றனர்.

''ஆரிய அரசன் பிருக தத்தனுக்குத்
தமிழ் கற்பிப்பான் வேண்டி''

''என்னுதலிற்றோ வெனின் தமிழ் நுதலிற்று''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமண, பௌத்த வழிவந்த அறநூல்கள் தமிழர்களின் அறக்கண்ணோட்டத்தில் அமைகின்றன. திருக்குறள் தமிழின் சின்னமாகக் காணப்படுகின்றது. பின்னர், வைதிக சமய எழுச்சி வந்த பொழுதும் தமிழ் இணைக்கப்பெற்றது.

சம்பந்தர் — ''தமிழோடிசை பாடல் மறந்தறியேன்''
என்பர்.

''வீரசோழிய ஆசிரியர் ஒரு பௌத்தர். அவர் தமிழ் அவலோகீஸ்வரரால் அகத்தியருக்குத் தரப்பட்டது'' என்பர்.

பின்னர் 14, 15ம் நூற்றாண்டுகளுக்குப் பின்னர், முருக வணக்கம் மேலோங்கிய பொழுது முருகனைப் பார்த்து,

''செந்தமிழால் வைதாரையும் இங்குவாழவைப்பான்''
என்றார் அருணகிரி.

கிறிஸ்தவம் வந்த நாள் முதல் தமிழிலேயே தனது மதத்தொடர்பைப் பேணுகிறது. தமிழகத்து இஸ்லாத்தில் அடிநிலை இறுக்கத்துக்குக் காரணம், அது அடிநிலை மக்கட் பண்பாட்டை தன்மயமாக்கிக் கொண்டு திருப்புகழ், ஏசல், படைப்போர் என்ற இலக்கிய வகைகளைக் கையாண்டமையாகும்.

இந்திய வரலாற்றின் அடிப்படையில் நோக்கும் பொழுது, அனைத்திந்திய வரலாற்றில், தமிழ் ஆளுமை என்பது எப்பொழுது மேற்கிளம்புகின்றது என்பது முக்கியமான ஒரு வினாவாகும்.

இது பற்றி ஆராய்ந்த றொமிலா தாப்பர் கி. பி. 7ம் நூற்றாண்டு முதல் 9ம் நூற்றாண்டு வரையுள்ள காலம்பற்றிக் குறிப்பிடும் பொழுது, ''இந்திய நாகரிகத்தின் வளர்ச்சிக்கு உதவப்போவதும், தமிழ் ஆளுமை எனப் பொதுப்படையாக எடுத்துக் கூறப்படுவதுமான பண்பாட்டமிசம், பல்லவர் காலத்தில் மேற்கிளம்புகிறது'' என்பர்.

பின்னர் சோழர்காலத்தைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது, அது ''தமிழ்ப் பண்பாட்டை இந்திய நாகரிகத்தினுள் படிகநிலைப்படுத்திற்று- அதாவது அதற்கு உருவும் பொருளும் அளித்தது'' என்பர்.

இவ்வாறு சமண, பௌத்த, சைவ, வைஷ்ணவ மதப் பிரிவுகளைக் கொண்டதாக விளங்கிய தமிழ், இஸ்லாத்தின் வருகையுடனும், கிறிஸ்தவத்தின் வருகையுடனும் இந்திய நாகரிக வட்டத்துக்கப்பாலான ஒரு பரிமாணத்தைப் பெற்றது. இந்த மதங்கள் செமிற்றிக் பிரிவைச் சார்ந்தவை. மறுபிறப்பில் நம்பிக்கையற்றவை. இஸ்லாம் ஏகதெய்வக் கொள்கையை வலியுறுத்துவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மதங்களின் அடிப்படை எண்ணக் கருக்களையும், மத உணர்வு முறைமைகளையும் அவற்றின் தனித்துவங்களுக்கு ஊறுவிளைக்காத முறையில் எடுத்துக்கூறும் ஆற்றல் தமிழில் வளர்த்தெடுக்கப்பெற்றது.

தமிழ்ப்பண்பாட்டுப் பொதுமையின் ஆற்றல்களில் இது ஒன்றென நிச்சயமாகக் கூறலாம்.

இருபதாம் நூற்றாண்டில், மேனாட்டுமயவாக்கத்தின் பொழுது இந்த அமிசங்கள் மீளக் கண்டுபிடிக்கப்பெற்றன, அந்த மீள் கண்டுபிடிப்பில் கிறிஸ்தவ பாதிரிமார்களின் பங்கு மிகக் கணிசமானது. அத்துடன் 19, 20ம் நூற்றாண்டுகளில் இந்திய அரசியலமைப்பினுள் தமிழ் பேசும் மாநிலம் அமைந்த முறைமையும் முக்கிய காரணிகளாகும்.

மேலும், தமிழ் மக்கள் உலகின் பல்வேறு நாடுகளுக்குக் குடிபெயர்ந்து அந்நாடுகளில் வாழத் தொடங்கிய பொழுது, தமது தனித்துவத்தைப் பேணவும், அதே வேளையில் தாம் வாழும் புதிய சூழலுக்குள் நின்று தமது சமூகத் தனித்துவத்தைப் பேணவும், தமிழ்ப்பண்பாடு ஒரு முக்கிய கருவியாயிற்று.

தமிழ்ப் பண்பாட்டின் தனித்துவங்களும், அந்தப் பண்பாட்டின் அடித்தளமாக அமைந்த மனிதாயதப் பண்புகளும் எழுத்து மொழியைப் பெற்று, வலியுறுத்தப் பட்டன.

இந்தப் பண்பாட்டின் உணர்வுப் பேணுகைக்கு வெகுசனத்தொடர்புச் சாதனங்கள் பெரும் பணியாற்றியுள்ளன. புதினப் பத்திரிகைகள், வானொலி, ஒளிபரப்பு (தெலிவிஷன்) ஆகியன மிகமிக முக்கியமானவை.

தமிழ்ப் பண்பாட்டின் உலகளாவிய பேணுகைக்கும், தொடர்ச்சிக்கும் இவை இன்று வாயில்களாக அமைகின்றன. □□


□●□

அழகு சாதனப்பொருட்கள்
சில்வர் பொருட்கள்
விற்பனையாளர்

**கமலேஸ்வரி ஸ்ரோர்ஸ்**

162, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதிர்ப்புச்சக்தி

**நம்பியாரூரன்**

தூத்தல் மழையுக்கை நிக்காதை எண்டு
        சொன்னாற் கேளாளாம்!
காய்ச்சல் தலையிடி எண்டு வந்தா
        கயிட்டப் படுகிறதார்?
தாய் செய்த முறைப்பாட்டைப் பொருட்படுத்தாது
தமயந்தி — என் மகள் — பூக்கொய்து கொண்டிருக்கிறாள்!
அவள் நிற்கும் திசையில்,
வேலிக்கப்பால்,
செல்வி,
களையெடுத்தபடி!
அவள் நனைவது பற்றி
மூக்கால் அழ ஆருமற்று!
செல்விக்கும் என் மகள் வயது தான்.
தமயந்திக்கு மழைபடக் கூடாது!
வெய்யில் சுடக் கூடாது!
''மதலையைப் பெறுநாள் துன்பம்
வளர்த்திடு நாளும் துன்பம்''
—பாடியவன் அநுபவசாலி.
மூத்தவன் முகுந்தன் பிறந்தபோது
வீடே அமர்க்களப் பட்டது!
பக்குவம் சொல்ல,
தூக்க, 'எடுக்க'
பலபேர்!
எந்தக் குறைபாடும் இருக்கக் கூடாதென்று
எத்தனை முன்னேற்பாடு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாலும்,
காலை வேளைகளில்
ஒரு தும்மல்!
காற்றுப்பட்டால் ஒரு கணகணப்பு!
எங்காவது போய்வந்தால்
வயிற்றுக்கோளாறு!
''எதிர்ப்புச்சக்தி இருந்தால்
அடிக்கடி நோய்பிடிக்காது!''
மருத்துவர் கருத்தை மதித்து,
ஜேர்மன் தயாரிப்பான Polyvisol ஐ,
ஊற்றுப் பேனைக்கு மைநிரப்புவது போல,
வேளை தவறாமல்,
அவள் வாய்க்குள் பிரயோகித்தும்
கடைசிவரை
எதிர்ப்புச்சக்தி வரமறுத்துவிட்டது!
முகுந்தன்
ஒருவாறு வளர்ந்து
ஜேர்மனிக்கே போய்விட்டான்!
இப்பொழுது எழுதுகிறான்,
பிறநாட்டவர்களுக்கு
அங்கு
பலர்த்த எதிர்ப்பாம்!
இவனுக்கோ
இன்னும்
எதிர்ப்புச்சக்தி வருவதாயில்லை!
பக்கத்து வீட்டுப் பாலன்—
உவள் செல்லியின் தமையன்—
பனாட்டுத்தின்று,
ஒடியற்கூழ் குடித்துவளர்ந்தவன்—
நோய்நொடி கிடையாது
Polyvisol உம் இல்லை,
புட்டிப்பாலும் இல்லை!
பனைமரம்போல,
ஆறடி இருப்பான்!
அண்டைக்குப் பார்க்கிறன்;
அளவெட்டியிலை
ஒரு பனைக்குப் பின்னால்
'கவர்' எடுத்தபடி!
ஜேர்மனியில் இருந்து ஊட்டம் பெற்றவன்
ஜேர்மனியோடை!
பனையில் இருந்து ஊட்டம் பெற்றவன்
பனையோடை!

□□

# போர்க்கால இலக்கியங்கள்

**செம்பியன் செல்வன்**




வீட்டு வாசலில் சைக் கிளைவிட்டு இறங் கிய போது, சில்லுக் குக் காற்றுப்போனது போலிருந்தது. வலது கைப் பெருவிரலால் பின் சில்லை அழுத்திப்பார்த்தார். காற்று இறங்கி இருந்தது.

'சீ! எத்தனை தரம் எண்டுதான் ஒட்டுறது? ஒரு ஒட்டுக்குப் பத்துப் பத்தாக கொட்டி அழுத துக்குப் பதிலாகப் புதிசாவே போட்டிருக்கலாம். எண்டா லும் ரயரும் ரியூப்பும் என்ன விலை விக்குது?... அந்த விலைக்கு விக்கிற ரயரும் ரியூப்பும் என்ன திறமோ?... அதுகளும் கொம்பனியால 'கொண்டெம்ப்' செய்தது களாகத்தான இங்க வரு குது .. கம்பிக்கட்டு விட்ட ரயர்களும், ஜொயிண்டால காற்றுப்போற ரியூப்புகளு மா... இப்பத்த சொலுசன், கொம்பவுண்ட் எல்லாம் முந்தி மாதிரியே கிடக்கு... எல்லாம் வெயிலுக்க உரு கிப் போகுது... சைக்கிள் பாட்ஸ் எண்டு என்னத்த வாங்கக் கிடக்குது?...... கிறீஸ் இல்லை .. போல்ஸ் இல்லை...... வால்வ்ரியூப் இல்லை...... இதெல்லாம் தடை செய்யப்பட்ட பொ ருட்களாம்...... பொடியள் ஆமியை 'அட்டாக்' பண்ண சைக்கிளைப் பாவிக்கின மாம்......

அவருக்கு எரிச்சலு டன் கூடிய சிரிப்பு வந்தது. 'நாளைக்கு வெள்ளனத் தோட அச்சகத்துக்குப் போக வேண்டும். அப்ப தான் அந்தப் புத்தகவேலை முடியும் எண்டு பாத்தா... சைக்கிள் எல்லாத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடுத்து விடும் போல இருக்கே?' மனதில் எழுந்த ஆத்திர ஆவேசத்துடன் சைக்கிளை வாசற்படி ஏற்றினார். சைக்கிள் சத்தம் வீட்டிற்குள் தகவல் பரிமாற்றம் செய்திருக்க வேண்டும். அவர் மனைவி ஓடிவந்தாள். அவர் முகத்தைப் பார்த்துவிட்டு 'என்னப்பா?' என்பது போல் தயக்கம்கொண்டுநின்றாள்.

'இதொரு இழவு...... சைக்கிளுக்கு காத்துப்போட்டுது. காலையில படுக்கையால எழுந்கோடன 'சைக்கிள் ஒட்ட' பஞ்சு வேலைக்குப் போறதுக்கு முந்திப் போய் விடவேணும் .... அப்பதான் நேரத்துக்கு 'பிறசு'க்குப் போகமுடியும்......'

'காரில போய் வந்த மனுஷன் இப்ப இந்தஓட்டச் சைக்கிளில உடம்பு முறிய உழக்கிறதே!' என்று உருகிநின்றாள்.

"நான் சொன்னாக் கேட்டாத் தானே? இப்படியெல்லாம் முறியவேண்டும் எண்டு என்ன தலை எழுத்தே?... பேசாம..." என்று அவள் ஆரம்பிக்கவும், அவள் என்ன சொல்லப் போகிறாள் என்பதனை ஊகித்தவராய் 'சரி சரி... நீ உன்ர புராணத்தை வாசலில நிண்டு ஆரம்பித்து விடாத.....' என்று உறுமினார்.

"இப்பத்த றோட்டுக்களெல்லாம் றோட்டுக்கள் போலவே கிடக்கு?... இதுகளில சைக்கிள் ஓட்டுறதெண்டா சும்மாவே?...... இவ்வளவு நாள் ரயர் ரியூப் நிண்டு பிடிச்சதே என்ர கெட்டித்தனத்தால தான் கண்டியோ? முந்தி பொமர் சகடை எண்டு வந்து வீசி வீடு... வாசல் டிரான்ஸ்போமர் றோட்டுக்களை அழிச்சாங்கள் ..... குண்டும் குழியுமாக்கினாங்கள்..... இப்ப புகாரா ...... சுப்பசோனிக்... எண்டு வந்து நகரத்தை நரகக்குழியாக்குகிறாங்கள்......"

அவர் "ஸ்ராண்டில்' சைக்கிளை நிற்பாட்டிவிட்டு 'கரியரிலிரு'ந்த கொப்பிக் கட்டுகளை அவிழ்த்தெடுத்தார். அவள் அவற்றை வாங்கிச் சென்று மேசையில் வைத்தாள்.

'இப்ப பேப்பருக்கே பஞ்சம் வந்திட்டுது. அச்சிடும் பேப்பர் முந்தி றீம் முந்நூறு நாநூறு எண்டு இருந்திச்சுது. இப்ப மூவாயிரம் நாலாயிரம் எண்டு ஏறிப் போச்சு ... அந்த விலைக்கும் சாமான் கிடைக்கிறது கஷ்டமாயிருக்கு .. இப்ப கொப்பித்தாளில தான் எதையெண்டாலும் அச்சடிக்க வேண்டியிருக்கு. பொடியள் காகிதத்தில குண்டு விமானம் செய்து வந்து தாக்குவாங்களெண்டோ அல்லது குண்டுகளே செய்து விடுவான்களெண்டோ பயந்து காகிதமும் தடை செய்யப்பட்ட பொருளாகிவிட்டது...'

கூறிக்கொண்டே அவர் வீட்டிற்குள் நுழைந்தார். அவரின் பின்னால் மனைவியும் சென்றாள். கூடம் மெல்லிய ஒளியில் தடம் காட்டியது. சுவாமி படங்களின் முன்னால் எரிந்து கொண்டிருந்த அகல் விளக்குகள் மெல்லிய ஒளியுடன் தேங்காய் நெய் மணத்தையும் பரப்பிக் கொண்டிருந்தன. விழிகளை சமயலறைப் பக்கம் திருப்பினார். அங்கு அடுப்பு நெருப்பு ஒளிகாட்டிக்கொண்டிருந்தது. அவள் அவருக்காக ஏதோ சூடாக தயாரித்துக் கொண்டிருக்க வேண்டும்.

"பிள்ளையள் எல்லாம் எங்கையப்பா?" அவர் மெல்ல வினாவினார்.

'அதுகள் இவ்வளவு நேரமும் 'அப்பா அப்பா' எண்டு கேட்டுக் கொண்டு கிடந்ததுகள். சாப்பிட்டுட்டு இப்பதான் படுத்ததுகள் ' என்ற போது மணி ஒன்பது அடித்தது.

'இண்டைக்கு நானும் வர நல்லாத்தான் செண்டு போச்சு. நாலைஞ்சு இடத்தில பேப்பர் கிடக்கு எண்டு அலைஞ்சு திரிஞ்சதில வர நேரம் போச்சு உந்தக் கொப்பியளைத்தான்வாங்க முடிஞ்சுது . முந்தி பத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினொரு மணிவரை கண் முழிச்சுப்படிச்ச பிள்ளை யள் ... இப்ப ஆறேழு மணிக்கே படுக்கையைப் போடுதுகள் ..... இதுகள் எங்க படிச்சு நல்லா வரப் போகுதுகள்?...'

'ஏனப்பா... அப்படிச் சொல்லுறீர்? அதுகள் என்ன பாடத்திலகுறை வாவே மாக்ஸ் எடுக்குது கள்?..., இப்ப நேரகாலத் தோட மண்ணெய் தட்டுப்பாட்டில... இரவுச் சமையல் முடியுது... பிறகு ஏன் ஆறி அவலாப் போக விடுவான் எண்டு கூப்பிட்டு நான்தான் சாப்பாட்டைக் குடுக்கிறன் ..... சாப்பிட் டுட்டுப் படிக்குதுகள்... மின் சாரவிளக்கில படிச்சது களின் கண் உந்த விளக்கில களைச்சுப் போய் விடுறது... அதுகள் பாவங்களப்பா...'

'பேசிக் கொண்டு நிண்டது போதும்... முதலில ஒரு விளக்குக் கொண்டு வாரும். கிணற்றடிக்கு போக ..'

அவள் அவசரமாக ஓடி விளக்கை எடுத்து வந்தாள். அவர் கை கால் முகம் கழுவி வந்து முகம் துடைத்து திருநீறு பூசி சாமிபடத் துக்கு முன் நின்று கண்மூடிக் கும்பிட்டு விட்டு பக்கத்திலி ருந்த ஈசிச் சேரை இழுத் துப் போட்டு 'முருகா!' என்றவாறு அதில் சரிந் தார். தெற்குப் பக்க சுவ ரோரக் கண்ணாடிஉடைந்து வெறும் சதுரமாகக் காட்சி யளித்த யன்னலூடாக காற்று சுகமாக வீசிற்று.

'சாப்பிடேல்லியேயப் பா!......' மனைவி கேட் டாள். 'கொஞ்சம் பொறு மப்பா!... எப்பன் ஆறியி ருந்து சாப்பிடுவம்......'— அவர் கொஞ்சம் கண்ணை மூடினார். நெற்றிப்பொட் டில் இதுவரை நிலவிய கொதிப்பு சற்று அடங்கி .. இதமாக...

'எப்படி இருந்த தொ ழில் .. வாழ்க்கை? .. எல் லாத்தையும் எப்படி இந்த அரசாங்கம் நாசமாக்கிப் போட்டுது... இருபத்தைந்து பேருக்கு மேலாக வேலை கொடுத்து 'கைடல்பேர்க் மிஷின், பிளேட்டிங் மிஷின்' என்று ஓடிக்கொண்டிருந்த அச்சகத்தை எப்படி நாசப் படுத்தினாங்கள்.....'

அவரால் அந்த நாளை மறக்கவே முடியவில்லை....

உச்சி வெயில். வெளியே கத்தரி வெயில் கனன்று கொண்டிருக்க ..... வேலை யாட்கள் பாதிப் பேர் மதிய உணவுக்குப் போய் விட .. அவர் தனக்கு வீட்டிலிருந்து வரும் சாப்பாட்டிற்காக காத்திருந்த வேளையில் தான் வாசலில் 'ஆமிட்ரக்' வந்து நிற்கிறது.

தொப்!... தொப்!... என்று ஆமிக்காரர்கள் குதிக் கிறார்கள். அவர்களைத் தொடர்ந்து சீருடையணி யாத ஆயுதபாணிகளாக சில இளைஞர்கள்......

'டேய்!... முதலாளி எங்க நிக்கிறான்? .....'— அந்த இளைஞர்கள் கேட் பது காதில் விழ, நெஞ்சம் 'படபட'க்கிறது. மனம் எதனையோ விபரீதமாக கற்பனை செய்யத் தொடங் குகிறது...

யாரோ அவரது அறை யைக் காட்டுகிறார்கள்.

அவருக்கு பிரக்ஞை தவறியதென, கனவுபோல் கண்களிலே திரையொன்று விரிகிறது.

'டேய்!... இந்த நோட் டீசு நீதான அடிச்சது?...' ஏதோவொன்றைக் காட்டு கிறார்கள். அவர் அதனை வாங்கிப் பார்க்கிறார். அவருக்குப் புரிந்து விடுகி றது. அவர் அச்சகத்தில் அடித்ததுதான். யாருக்கு அடித்துக் கொடுத்தது என் பதும் விளங்குகிறது. என் றோ எப்போதோ...... அடித்துக் கொடுத்தது...... ஆனால் அச்சகத்தின் பெய ரில்லை......

இவர் இல்லை எனத் தலையாட்டுகிறார். அவ்வ ளவு தான் 'பளார்!' முகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் ஒரு அறை விழுகிறது. அவருக்கு கண்முன்னால் பூச்சிகள் பறக்கின்றன. கரிக்கோட்டுச் சித்திரங்கள் கலைந்து போய் நடமாடு கின்றன.

நீ பொடியளுக்கு அச்சடித்துக் கொடுக்கிறவன்.... இது புலிகளின்ர அச்சகம் . இங்கிருந்து தான் எல்லா நோட்டீசும் வெளிக்கிடுது... உண்மையைச் சொல் ..

அவர் திடமாக மறுக்கிறார். வெளியில் சென்றிருந்த வேலையாட்கள் புத்திசாலித்தனமாக 'ட்றக்' கைக் கண்டதும் வெளியிலேயே மாறிவிட்டார்கள். அகப்பட்டது அவரும் நாலைந்து தொழிலாளரும் தான்.

அவர்கள் அச்சகத்தையே புரட்டி எடுக்கிறார்கள். நோட்டீசின் மூலப் பிரதியைத் தேடுகிறார்கள். கிடைக்கவில்லை...

திரும்பவும் அவரிடம் வருகிறார்கள்.

'டேய்... உண்மையைச் சொல்..... இல்லாட்டி உன்னை இதிலயே அடிச்சுக் கொண்டு போடுவம் ..'— வந்த ஆமி பார்த்துக் கொண்டிருக்க அவர்கள் ஊளையிடுகிறார்கள்.

அச்சாகிக் கிடக்கும் 'போம்' களைக் கலைக்கிறார்கள்... 'கலிப்புறாவ்' களை சிதறுகிறார்கள் .. மிசினில் ஓடிக்கொண்டிருந்த 'மற்றரை' வாசித்துப் பார்க்கிறார்கள்...... அங்கு சிவப்பு மட்டையில் 'பைன்ட்' ஆகிக்கொண்டிருந்த புத்தகத்தை — அது வணிகவியல் பாடப் புத்தகம் என்று புரியாமல் அதை ஆமியிடம் காட்டி புரட்சி .. இரத்தம் .. பயங்கரவாதப் புத்தகம் என்றெல்லாம் கதைக்க... ஒரு ஆமி பல்லை நறுமியபடி அவரை நோக்கி வருகிறான்...... மறுவிநாடி அவர் தரையில் புரள்கிறார். அவர் தலைமயிரைக் கொத்தாகப் பற்றி......

'இந்த அச்சு உன்ர பிறசில தான் இருக்கு ... நல்லா விசாரிச்சுப் போட்டுத்தான் வந்தனாங்கள் சொல் . இவங்கள் எங்க இருக்கிறாங்கள் .... ஆர் ஓடர் தந்தது... தந்தவனைக்காட்டு ..'— பொடியன்களைப் பற்றி புரியாதவர்கள் ஏதேதோ கேட்டுச் சித்திரவதை செய்கிறார்கள். கீழே விழுந்துகிடந்தவரை ஒருவன் மூலையில் சாத்திக் கிடந்த தும்புத்தடியால் பிரட்டி எடுக்கிறான்...

'உன்னை இங்கு வைச்சுக் கேட்டா நீ சொல்ல மாட்டாய்...அங்க கொண்டு போனாத்தான் சரியாப் பதில் சொல்லுவாய்...... எழும்படா ..' அவர் எழும்ப முயற்சிக்கிறார். முடியவில்லை...... 'எழும்படா, என்னடா பாசாங்கு செய்யிறாய்!' என்று ஒருவன் தும்புக்கட்டையை கையிடுக்கில் சொருகி நிமிர்த்துகிறான். அவர் வேதனையுடன் எழுந்து நிற்க, அவன் பலமாகத்தள்ளுகிறான். அவர் கால்பாவாமல் தடுமாறி கதவடியில் போய் முட்டிக் கொண்டு நிற்கிறார். அவரை அடித்துக் கொண்டே வாசல்வரை கொண்டு போகிறார்கள்... யாரோ ஒருவன் அவரைத் தூக்கி ட்ரக்கில் போட, கோட்டையை நோக்கி அது விரைகிறது.

கோட்டை.... பலாலி இராணுவமுகாம் என்று அவர்களது 'பிக்னிக் ஸ்பொட்' களிடையே அவரது சித்திரவதைகள் ..... வஞ்சகப்பேச்சுகள்... ஆசை வார்த்தைகள் என்று காலம் ஓட, இந்திய இராணுவம் மூட்டைகட்ட அவர் விடுதலையாகி வருகிறார்...

அன்றிலிருந்து அச்சகம் என்றாலே அவர் மனைவிக்கு அடிவயிற்றிலே நெருப்பு போல .. ஆனால்... அவரிலோ பலத்த மாற்றம் ...... அவர் ஒரு போதும் முதலாளியாக இருந்ததில்லை. தொழிலாளர்களுடன் தானும் ஒரு தொழிலாளியாக வேலைசெய்வதில் மிகுந்த சந்தோசம் கொள்பவர். அச்சகத்தின் சகல பிரிவு வேலைகளும் அவருக்கு அத்துபடி. ஒரு உந்நதமான தொழிலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளியே சிறந்தமுதலாளியாக இருக்க வேண்டும் என்று எண்ணுபவர். அச்சக வேலையில் நாள் தோறும் ஏதோவொரு படைப்பு புத்தம் புதிதாக வெளியே றும் போது, மகிழ்ச்சியின் களிப்பில் வியர்வைத்துளி கள் உலர்ந்து மணம்பரப் பும்.

இராணுவத்தினரின் சித்திரவதை முகாம்களும், அங்கு 'பொடியள்' படும் கஷ்டங்களும் போராட்டம் பற்றிய புதிய பார்வையை அவரிடம் எழுப்பியிருந்தன. அதில் அச்சகங்களின் முக்கி யத்துவம் என்ன என்பதும் அவருக்குப் புலனாகின. பொடியளை அவர் நெஞ்சம் நேசிக்கத் தொடங்கியது.

விடுதலையாகி வீடு வந்தால்...

வீட்டு நிலமை மோசமாகியிருந்தது... மனைவி யும் பிள்ளைகளும் 'அரை வாசி'யாய்ப் போயிருந்தார் கள்...... தலைவனில்லாத வீடு.. நல்ல தலைவனில் லாத நாடும் இப்படித்தா னாகும் என்று அவர் மன தில் ஏனோ பட்டது ... எட்ட விழுந்த குண்டுகள் கூட தன் வீட்டின் தாவார ஓடுகளையும் யன்னல் கண் ணாடிகளையும் உடைத் திருப்பதைக்கண்டார். கிணற்று நீர் குடிப்பதற்கு உதவாமலும், குளித்ததி னால் உடற்சருமத்தில் சொறிகளையும் உண்டாக் கியிருப்பதையும் பார்த்த போது வாய்விட்டே அலறி விட்டார்.

அச்சகத்தை ஓடோடிப் போய்ப்பார்த்தார். பலத்த சேதத்துக்கு ஆளாகியிருந் தது. பல எழுத்துக் கேஸ் களைக் காணவில்லை. 'ஹைடல் பேர்க்கில்' சில பாகங்களைக் காண வில்லை. 'ஸ்டிக்கர்', 'லெட்' எல்லாமே மாய மாக மறைந்திருந்தன. மின் சாரம் ஓடிய வயர்கள்...... பல்ப்.. மீற்றர் எல்லாம் அறுந்தும் உடைந்தும்...

அவரது இரத்தமே உறைந்துபோயிற்று.

'நான் சோர மாட் டேன். ஒரு போதும் சோர மாட்டேன்' என்று சொல் லிக் கொண்டார்.

அச்சகத்தை புதுப்பிக் கத் தொடங்கியதும் தான் எத்தனை 'வேலைப் பளு' காத்திருக்கிறது என்று பட்டது.

மின்சாரம் இல்லை. மோட்டர் வாங்கி இணைத் தார். எரிபொருளை அரசாங்கம் தடைசெய்தது. மண்ணெய்க்கும் தட்டுப் பாடு... பிளேட்டின் மிஷி னைக் காலால் அழுத்த லாம் என்றால் அச்சுத்தா ளைக் கண்டு இராணுவம் அச்சம் கொள்ளுகிறது. காகிதப் பஞ்சம்...

அவள் அவசரமாக உள்ளே இருந்து வருகி றாள்.

'இஞ்சருமப்பா!...'

அவர் விழிகளைத் திறந் தார். அவள் கையில் ஒரு வெளிநாட்டு விமானத் தபால். முகத்தில் ஒரு பரபரப்பு..

'ஓ!...'மேர்க்ஸ் குமண' கப்பல் இம்முறை தபால் பொதிகளையும் கொண்டு வந்துள்ளதாக நேற்று 'ஈழ நாத'த்தில் படித்தது நினை வுக்கு வந்தது ...... இவளுக் கும் கனடா மச்சாள் — தங்கச்சி கடிதம் போட்டி ருக்கிறாள் போல...'

அவர் விழிகளை மூடிக் கொண்டார்.

'என்னப்பா நித்தி ரையே... உங்கட தங்கச்சி யெல்லே கடிதம் போட்டி ருக்கிறாள்'

'என்னவாம்?...' கண் களைத் திறக்காமலே கேட் டார். ஏதோ எதிர் பார்த்து வந்தவளுக்கு ஏமாற்றமாக இருந்தது.

'என்னப்பா!... இப்படிக் கேக்கிறியள்... கடிதத்தைப் படிக்காமல் '

'என்னத்த எணை படிக் கிறது? நாலுமாசத்துக்கு முந்திப் போட்டதாயிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்...... அதில இருக்கிற புதினம் எல்லாம் பழசாப் போயிருக்கும்...... அதில வேறென்னத்த எழுதியிருக்கப் போறாள்... நாலுமாசத்துக்கு முந்தி அவளின்ர பேத்டே நடந்திருக்கும்... அந்தப்படங்களோட அண்ணை ஏன் அங்க கிடந்து கஷ்டப்படவேணும்... அவரையும் கூட்டிக் கொண்டு வா எண்டு எழுதியிருக்கிறாளே...'

அவளின் ஈரவிழிகள் அந்த இருளிலும் பளபளத்து வியப்பால் விரிவது அவருக்குத் தெரிந்தது.

'உங்களுக்கு எல்லாம் நக்கல் தான். இப்ப இங்க என்ன எங்களுக்குக் கொட்டிக்கிடக்கு? அச்சகமும் முந்திமாதிரிப்போல இல்லை அச்சடிக்க எழுத்தில்லை... மையில்லை ... காகிதமுமில்லை .. கரண்டுமில்லை .... வருமானமும் குறைவு... பொருட்களின் விலையோ நாலுமடங்கு .. பேசாம எல்லாத்தையும் விட்டிட்டு அங்க போனா நிம்மதியாச் சீவிக்கலாம் .'

'நீ என்ன யோசித்துத் தான் பேசுறியோ?.. நிலவுக் கஞ்சி பரதேசம் போனது போலத்தான் இருக்கு .... இங்கயெண்டாலும் உரிமைக்காகப் போராடலாம்... அங்க அப்படி முடியுமே.... ஆராருக்கோ உழைச்சுக் கொடுக்கவோ நாங்கள்? இப்படி உழைச்சு உழைச்சுக் கொடுக்கக் கொடுக்க அவங்கள் உயர்வடைகிறாங்கள்... நாங்கள் கீழகீழ போய்க் கொண்டிக்கிறம்...'

அவள் முகம் ஏமாற்றத்தால் சுருங்கியது.

அப்ப என்னப்பா சொல்லுறியள்?...

'என்னத்த சொல்லுறது? அங்க போய் என்ன செக்கியூறிற்றி வேலையே செய்யிறது... பெரிய பெரிய இங்கத்த நீதவான்கள் கூட அதைத்தான் செய்யினமாம்..... இங்க எங்கட மண்ணை அந்நியன் தீண்ட அதுக்கு ஆர் செக்கியூறிற்றி.. இந்தப் பொடியளோ? .. இங்க அரைவயிறெண்டாலும் மானமா சொந்த வீடு வாசல் தொழில் எண்டு சீவிக்கிறம் .. அங்க போய் இன்னும் அடிமைச் சீவியமே?... கள்ளர் போலப் போய் . கள்ளர்போல உழைத்து . கள்ளர் போல வாழ்ந்து .. இதில இன்னும் பெரிய வேதனை என்னண்டால் பெரியவை நாங்கள் தான் நாசமாப் போறமெண்டு எங்கட சந்ததியையுமெல்லே முகவரியில்லா அடிமைகளாக்கி விடுறம் ..'

அவர் ஈசிசேரை விட்டு எழுந்தார்.

'சரி சரிவந்து சாப்பாட்டைப்போடும். காலையில வெள்ளன எழும்ப வேணும்...?

அவள் முகம் சுண்டியவளாக நடந்தாள்.

அதிகாலையே எழுந்து போய் சைக்கிள் 'பஞ்சரை' ஓட்டி வீட்டிற்கு வந்த பொழுது வீடு இரண்டு பட்டுக் கொண்டிருந்தது. அவர் இரவு அச்சடிப்பதற்காக வாங்கி வந்திருந்த கொப்பிகளை 'உனக்கு எனக்கு' என்று குழந்தைகள் பங்கு போட்டு சண்டை பிடித்துக் கொண்டிருந்தன. அவள் சமையலறையில் வேலையாக இருந்தாள்.

அவருக்குக் கோபம் கண்ணை மறைத்தது. சைக்கிளை வேகமாக இழுத்து 'ஸ்ராண்டில்' நிறுத்தினார். அவரைக் கண்டதும் குழந்தைகள் தங்கள் சண்டையை மறந்து நியாயம் கேட்க அவரை நோக்கி ஓடிவந்தன.

'அப்பா எனக்கு தமிழுக்குக் கொப்பியில்ல ........ அண்ணா தரமாட்டானாம் ..'

'அப்பா.... டீச்சர் என்னட்ட கொப்பியில்ல எண்டு நேத்து அடிச்சவ .. நான் கொப்பியில்லாம பள்ளிக்குப் போக மாட்டன்...'

அவர் கோபம் குழந்தைகள் பிரச்சினையி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. அச்சுக்குக் கொடுக்க வேண்டிய தாள்கள் வீடு முழுவதும் சிதறி......

இரண்டு குழந்தைகளையும் பற்றி இழுத்து...

குழந்தைகளின் அலறலைக் கேட்டு அவள் ஓடி வந்தாள். குழந்தைகள் இரண்டும் 'அலக்க மலக்க' மல்லாந்து நிலத்தில் வீழ்ந்து கிடப்பதைக் கண்டதும் அவளால் தாள முடியவில்லை.

'என்ன செய்தனியள்?... என்ர குஞ்சுகளை என்ன செய்தனியள்.. புள்ளையளைக் கொல்லவா போறியள்...? அடிகிடி என்னென்னத்தில் பட்டுதோ தெரியேல்லியே!' என்றவாறு ஓடிச் சென்று குழந்தைகளைத் தூக்கினாள்.

அப்போதுதான் அவருக்குத் தான் செய்த வேலையின் கொடூரம் புலப்பட்டது. உள்ளுக்குள் வெட்கிப் போனார். ஆனாலும் சமாளிப்பதற்காக 'பார்.. அச்சுக்கு வாங்கிய கொப்பியளை? இதுகள், கசக்கி எறிஞ்சு போட்டுதுகள் ... இதுகளுக்கு கொஞ்சமும் மூளை இருக்கா?, என்று கத்தினார்.

''அதுகளுக்கு ஒழுங்கா கொப்பி புத்தகங்களை வாங்கிக் கொடுத்தா அதுகள் ஏன் உங்கடயள எடுக்குதுகள். பெரிய அச்சகம் நடத்துறாராம்.. புள்ளையள் படிக்க நாலு கொப்பி கட்டிக் கொண்டு வந்து குடுக்க வழியில்ல.. இங்கயே கிடந்து என்னையும் புள்ளையளையும் கொல்லத்தான் வழிபாக்கிறார்'' அவள் இரவு நினைவுகளுடன் புலம்பத்தொடங்கினாள்.

''சீ!... வீடு வர வர நரகமாகி வருகிறது''— என்றபடி கொப்பிகளை எடுத்து 'கரியரில்' கட்டினார். சைக்கிளை வெளியே எடுத்தார். குழந்தைகள் பயத்துடன் பார்த்தபடி நின்றார்கள். புலம்பிக் கொண்டு இருந்தவள் திடீரென நிறுத்தி விட்டு 'சாப்பிட்டுட்டுப் போங்களன்...'— என்று கூறவும் 'நீயும் உன்ர சாப்பாடும்' என்று பதிலுக்குக் கத்தி விட்டு, சைக்கிளில் ஏறி மிதிக்கலானார்.

அச்சக வாசலிலே அவர் இறங்கவும், அவர் வருகைக்காக காத்திருந்த ஒருவர் எழுந்து நின்றார்.

'என்ன கனகசபை எங்களை எல்லாம் மறந்தாச்சுப்போல... நாங்கள் பேப்பருக்கு எவ்வளவு அலையுறம் தெரியுமே? .'

'உங்களுக்குத் தெரியும் தான். மார்க்கட்டில சாமான் சூடு அதுதான்.. வாறதில்லை. இராத்திரி கொஞ்சம் கிளாலியால வந்திருக்கு... வேணுமெண்டால் சொல்லும்... விலை கொஞ்சம் சூடுதான். ஜேஒசிகாரன் கடுமையாநிக்கிறான் பேப்பர் விசயத்தில...... அதால வழியில கனலட்சங்கள் புரள வேண்டியிருக்கு... கிளாலியைக் கடந்து கொண்டு வாறதும் பெரிய 'றிஸ்கி' யாக் கிடக்கு... சாமான் படகுகளுக்கு சூடு விழுகுது...இதுகள் எல்லாத்துக்கும் தப்பித்தான் சாமான் வரவேண்டியிருக்கு என்ன சொல்லுறீர்.. வெளியில மூண்டரைக்குப் போகுது.. வாடிக்கையாள் மூண்டுக்கு எண்டால் அனுப்புறன்..'

அவருக்கு உள்ளூர மகிழ்ச்சி எழுந்தது. அந்தப் புத்தக வேலையை முடிச்சிடலாம்.

சரி.. சரி... விலையைப் பேந்து பேசுவம்...... ஒரு பத்து றீம் அனுப்பும்......

மண்ணெய்ப் புகையைக் கக்கியவாறு மோட்டர் ஓடத் தொடங்கியது. எட்டெட்டுப் பக்கங்களாகப்புத்தகம்அச்சேறலாயிற்று.அவர் ஆவலுடன் அதன் அருகில் போய் நின்று கொண்டார். அந்த மகிழ்ச்சி அச்சகக்காரனுக்கும் நூலை எழுதியவனுக்கும் தான்விளங்கும்... அந்த ஈரமையின் பளபளப்பு எவ்வளவு அலாதியானது..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள் போம்... — போமாக... அச்சிட்டு ஓட...

இதென்ன!...

'நிறுத்து... நிறுத்து...' பலமாகக்கத்தினார். அவசரமாக ஒரு பக்கத்தை எடுத்துப்பார்த்தார். தாளின் நடுவில் எதுவோ துளைத்தது போல் கிழிசல் .. யந்திரத்தில் கோளாறா?...

அவரும் மிஷின்மைன்டரும் பார்த்தார்கள்.

ஒரு பிழையும் தெரியவில்லை.

முதலில் ஓடிய பக்கங்களில் கிழிசல் காணப்படவில்லை. புதிதாகஇப்போது தான்... பத்திருபது தாள்கள்...

ஒரு வேளை பேப்பர் றீமில கிழிசல்கள் இருக்கோ?

எப்படி இருக்க முடியும். நாங்கள் தானே பக்கட் உடைச்சுப் போட்டது... .. எதற்கும் அடிக்க இருக்கும் பேப்பர்களைப் பாப்பம்...

அவர்கள் அந்த றீம் பேப்பரைப்பார்த்தார் க ள்.

அந்த றீமில் மத்திய பாகத்தில் பேப்பர்கள் வெடித்ததுபோல் கிழிசல் ..

அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

றீமுக்கு மூண்டு வாங்கிறாங்கள். ஆனால் கழிவுப் பேப்பர்கள்? வரட்டும்... வரட்டும்... காசு வாங்க ..

''கிழிஞ்ச பேப்பரைத் தனியா எடுத்துவை...... அவன் வந்தாக் காட்ட வேணும்... பதிலுக்கு நல்ல பேப்பர் வாங்குவம்.''

—மெஷின் மைன்டர் நடுவில் கிழிந்த தாள்களை சேகரிக்கத் தொடங்கியவன் ... திடீரென்று 'ஐயா!' என்று கத்தினான்,

'என்னடா!...... என்னடா!...' என்று அவர் அவன் அருகே ஓடினார். அவன் அந்தப் பொருளைச் சுட்டிக் காட்டினான்.

வெள்ளைத்தாளின் மத்தியில் அது பள பளத்துக் கொண்டிருந்தது.

அது - வெடித்த ரவைக் குண்டு. □□

அழகான பிரேம்களில் —மூக்குக்கண்ணாடிகளை
விரும்பிய அளவுகளில்
தெரிவுசெய்யலாம்.
வடபகுதியில் புகழ்பெற்ற
மூக்குக்கண்ணாடி விற்பனையாளர்:

**எரிக் கணேஸ்**
566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்த்து நும் அடிகள் வைம்மின்!

வி. பரந்தாமன்

ஈழமண் மேலே இன்றும்
இனியுமே ஒன்றி வாழும்
சால்புடைத் தமிழர் கேண்மின்!
தாயக எல்லை யாவும்
கால்வழி குருதி தோய
கடினமாய் வரைந்த பின்னர்
மேலுறப் படைய வேலி
மிடுக்குடன் அமைத்த தன்றே!

உயிருடல் உரமாய் இட்டே
உரிமையை விதைத்து மேலும்
வியரொடு செந்நீர் கண்ணீர்
வேண்டிய அளவில் பாய்ச்சிப்
பயிரது முளைக்க விட்டார்
பார்த்துநும் அடிகள் வைம்மின்!
செயிருறத் தீமை இங்கே
செய்திரோ பிழைக்க மாட்டீர்!

இங்குள பொருளொவ் வொன்றும்
இயன்றவா றுரைக்கக் கேளீர்!
எங்குல முன்னோர் தொட்டே
இற்றைநாள் வரையும் உள்ளோர்
தம்முடல் உழைப்பின் பேறாய்ச்
சமைத்தனர் அவற்றை நீங்கள்
தங்கமாய்ப் போற்றல் வேண்டும்
தாய்மண்ணை வணங்க வேண்டும்!

எத்தனை அவலம் செய்தார்
எதிரிகள் இந்த மண்ணில்?
மெத்தவும் குண்டு பெய்தார் -
விளைநிலம் வீடு வாசல்
வைத்துள உடைமை மற்றைக்
கலைகளும் மாள, மக்கள்
செத்தவர் ஊறுற் றோர்கள்
பித்தரே திலிகள் ஆனார்!



வேற்றவர் ஆட்சி தன்னில்
விளைந்திடும் தீமை உன்னி
ஆற்றலின் மிக்க மைந்தன்;
அடற்புலி அனைய கோமான்
கூற்றினுக் கொத்தோர் தம்மைக்
கொண்டொரு படையைக் கூட்டி
மாற்றலர் பகையை ஓட்ட
மறச்சமர் ஆடி நின்றான்!

அடிமையை ஏழ்மை தன்னை
அக்குலத் தாழ்ச்சி பேசும்
கொடுமையை விடுமின்! அன்பில்
கூடியே வாழ்மின்! ஈழ
விடுதலை வளர்க்க வந்த
வீரமார் தலைவன் தாளை -
அடுபுலி மறவர் தங்கள்
அடியிணை வாழ்த்து வீரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழ் மக்களின் நாட்டார் வழக்காற்றியல்

## ஆய்வு செய்யப்பட வேண்டிய கூறுகள்

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**

*தமிழீழ மக்களின் நாட்டார் வழக்காற்றியலிலே அவர்களுடைய பாடல்களும் கூத்துகளுந்தான் இதுவரை அறிஞர்களுடைய நுண்ணாய்வுக்குட்பட்டுவந்துள்ளன. நாட்டார் வழக்காற்றியல் பல கூறுகளைக் கொண்டன. அவையாவன: பாடல்கள், கூத்துகள், கதைப் பாடல்கள், கதைகள், விடுகதைகள், பழமொழிகள், இசைக்கருவிகள் இசைத்தல், கைவினைக்கலைப் பொருள் ஆகியன.*

எம்முடைய நாட்டார் பாடல்கள், கூத்துகள் தொடர்பாக அறுபதுகளிலிருந்து தொடர்ச்சியான ஆய்வுகள் நடைபெற்று வந்துள்ளன. வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம், பேராசிரியர் சு. வித்தியானந்தன், பண்டிதர் வீ. சீ. கந்தையா, பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் தொடக்க காலங்களில் இம்முயற்சியில் ஈடுபட்டோராவர். கொழும்பு வித்தியாலங்கார, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களிலே தமிழ் நாட்டார் வழக்காற்றியல் ஒரு பயில்நெறியாகத் தொடங்கியபொழுது புலமைசான்ற ஆய்வுகளும் நடைபெற வாய்ப்பு ஏற்பட்டது. இ. பாலசுந்தரம், சி. மௌனகுரு, காரை. சுந்தரம்பிள்ளை ஆகியோர் கலாநிதிப் பட்டத்துக்காக ஆய்வேடுகளை எழுதினார்கள். இம்மூவருமே நாட்டார் பாடல்கள், கூத்துக்கள், இசை நாடகங்கள் ஆகியவற்றிலேயே கவனஞ் செலுத்தினர். இவை தவிர்ந்த ஏனைய நாட்டார் வழக்காற்றியற் கூறுகளிலே இதுவரை யாரும் ஆழமான நோக்கினைச் செலுத்தவில்லை என்றே கூறவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடையேயுள்ள கதைப்பாடல்கள் யாவை? கண்ணகி வழக்குரை, கோவலன் கதை, வேலப்பணிக்கன் ஒப்பாரி, பன்றிப் பள்ளு, குருவிப்பள்ளு என்பன நாம் இது வரை அறிந்த கதைப்பாடல்களாகும். இவை தவிர வேறு கதைப்பாடல்கள் எம் மிடையே இருந்திருக்கவேண்டும். இவற்றைக் கிராமங்களிலுள்ள முதியோர்களை அணுகி அவர்களுடைய உதவிமூலம் சேகரிக்கவேண் டிய ஒரு பணி எமக்கு உள்ளது. இம்முயற் சியிலே ஈடுபடுகின்ற அதேவேளை, இது வரை கிடைத்த கதைப்பாடல்களைப் பகுப் பாய்வு செய்து அவற்றின் பொருள், அவை புலப்படுத்தும் சமூக, வரலாற்று, பண்பாட் டுச் செய்திகள் ஆகியனவற்றை அறியும் அதே வேளையில், அவற்றின் தற்காலப் பயன்பாட்டினைப் பற்றியும் எண்ணலாம். சிங்கள மொழியில் வழங்குகின்ற கோவலன் கதையினையும் பத்தினி வழிபாட்டையும் இணைத்து பேராசிரியர் கணநாத் ஒபய சேகர செய்த சமூக, பண்பாட்டு, மானிட வியல் ஆய்வு போன்று தமிழிலே கண்ணகி வழக்குரை, கோவலன் கதை பற்றி விரிவான ஆய்வு செய்யப்படவில்லை. ம. சற்குணம், கண்ணகி வழக்குரை பற்றி ஓரளவு ஆய்வு செய்துள்ளார். சரளா ராஜகோபாலன், சிலப்பதிகாரத்தையும் கண்ணகி வழக்குரை யையும் ஒப்பிட்டு அவற்றின் அமைப்பியல் பற்றி எழுதியுள்ளார் - (''சிலம்பும் கண்ணகி வழக்குரையும்-ஓர் ஒப்பீடு'' புலமை, 1984). சிலப்பதிகாரத்தையும் கோவலன் கதையை யும் ஒப்பிட்டு அவற்றின் அமைப்பியல் பற்றி நான் ஒரு கட்டுரை எழுதியுள்ளேன்- (''சிலப்பதிகாரமும் கோவலர் கதையும்'' வற்றாப்பளைக் கண்ணகையம்மன் கோயில் மலர், 1989). ஆனால் இவையெல்லாம் பாரிய அளவிலான ஆய்வு என்று கூறுதற் கில்லை. சிலப்பதிகாரம், கண்ணகி வழக் குரை, கோவலன்கதை ஆகிய மூன்றி னையும் ஒப்புநோக்கி, அவற்றைத் தமிழ் நாட்டுக் கோவிலன்கதை, கர்ணகா கதை ஆகியனவற்றுடனும் ஒப்பிட்டு ஆய்வு செய்ய வேண்டும். ஏனைய கதைப்பாடல்களையும் சமூக, பண்பாட்டு, மானிடவியற் பின்னணி யிலே பகுப்பாய்வு செய்யவேண்டிய தேவை யும் உண்டு.

எம்முடைய மண்ணுக்குச் சொந்தமான நாட்டார் கதைகள் பற்றியும் நாம் போது மான கவனஞ் செலுத்தவில்லை. எம் முடைய பாரம்பரிய நாட்டார் கதைகள் பல மேலைத்தேயத்தவருடைய ஆட்சியி னாலே மறைந்து போயிருக்கக்கூடிய வாய்ப்பு உண்டு. எனினும் வரலாறு, சமயம், பண் பாட்டுக் கூறுகள், பிறநாட்டவர் தொடர் பான பல்வேறு கதைகள் கிராமங்களி டையே மறைந்திருக்கின்றன. இவற்றை யெல்லாம் தேடிப்பிடித்துத் தொகுதிகளாக வெளிக்கொணரவேண்டியது நாம் முதற் கண் மேற்கொள்ளவேண்டிய முயற்சியாகும். எழுபதுகளில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமிழ் பயின்ற முதலாண்டு மாணவர்களை ''எங்கள் கிராமத்துக் கதை கள்'' என்ற பொருளிலே அறிக்கை தயா ரித்துச் சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டது. பல மாணவர்கள் அத்தகைய அறிக்கைக ளைச் சமர்ப்பித்தனர். இவை தமிழ்த் துறையிலே சேகரித்து வைக்கப்பட்டன. இந் திய இராணுவ நடவடிக்கையின்போது பல் கலைக் கழகக் கலைப்பீடக் கட்டிடம் அழி பாடுற்றபொழுது இவையும் அழிந்துபோய் விட்டன. எனினும், தொடர்ந்து இத்துறை யிலே புதிய முயற்சியை மேற்கொள்ளலாம். இவ்வாறு தொகுக்கப்படும் கதைகளைப் பின்னர் பகுப்பாய்வு செய்து அவற்றின் நாட்டாரியற் பண்புகள், சமூக, வரலாற் றுப் பண்பாட்டுச் செய்திகள் ஆகியன வற்றை அறிந்து கொள்ளமுடியும்.

எம்முடைய விடுகதைகள் அல்லது நொடிகள், பழமொழிகள் ஆகியனபற்றி வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம் போதிய கவனஞ் செலுத்தியுள்ளார். அவர் தன்னள விலே முயன்று அவற்றை ஓரளவு தொகுதி களாகவும் சேர்த்துத் தந்துள்ளார். இந்நாட் டாரியற் கூறுகள் பற்றியும் அறிஞர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவிர நாட்டஞ் செலுத்தவில்லை. விடுகதைகளும் பழமொழிகளும் ஊர்மக்களுடைய பட்டறிவினையும், எளிமையான கற்பனையினையும் புலப்படுத்தவல்லன. எடுத்துக்காட்டாக, வேளாண்மை தொடர்பான பழமொழிகளைக் கீழே தருகின்றேன்.

1. அகல உழுவதைவிட ஆழ உழு.

2. அறிவிலே விளையாதது எருவிலே விளையும்.

3. அறுக்கமாட்டாதவள் இடுப்பிலே ஐம்பத்தெட்டு அரிவாள்.

4. ஆடி அவரை தேடிப் போடு.

5. ஆட்டெரு அவ்வருடம் மாட்டெரு மறுவருடம்.

6. ஆற்று மண்ணுக்கு வேற்றுமண் உரம்.

7. வாழை நடுகில் தாழ நடு.

8. உழுகிற காலத்தில் ஊரைவிட்டுப் போகாதே.

9. சீனிக்கிழங்கு திண்ட பண்டியைச் செவி யறுத்தாலும் விடாது.

10. சூடுமிதிக்கிற மாட்டின் வாயைக் கட்டலாமா?

இப்பழமொழிகளூடாக வேளாண்மை செய்வோருடைய பட்டறிவு புலப்படுத்தப்படுவதைத் தெளிவாக நாம் காணமுடிகின்றது. இவ்வாறு நாட்டுமக்களுடைய உணவு, உடை, வீடு, உறவு, அறிவுரை ஆகியன தொடர்பாகப் பழமொழிகள் உண்டு. ஒவ்வொரு பழமொழியும் ஒவ்வோர் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும். இத்தகைய அனுபவங்களை அம்மக்கள் பெறுவதற்குரிய சமூக, பண்பாட்டு, பொருண்மிய, சமயச் சூழல் எவ்வாறிருந்தது என்பதை மீட்டுருவாக்கத்தின் மூலம் கண்டுகொள்ள முயற்சிக்கலாம். தமிழீழ மக்களின் பழமொழிகளை விரிவான ஆய்வுக்குட்படுத்தவேண்டும்.

தமிழ் மக்களுடைய விடுகதைகளைத் தொகுத்துத் தந்துள்ளார், வட்டுக்கோட்டை, மூ. இராமலிங்கம். விடுகதைகளில் பெரும்பாலும் முரண்பாடு அமைந்திருக்கும்; சில வேளைகளில் உருவகம் அமைந்திருக்கும். முரண்பாட்டை விளங்கி அதனை நேராக்கித் தெளிவடைதலும், உருவகத்தை நன்கு விளங்கிக்கொள்ளுதலும் ஆகியன விடுகதைகள் மூலமாக நடைபெறுகின்றன.

முத்துக்குமரனைப் பிடியுங்கள்
முதுகுத்தோலை உரியுங்கள்
பச்சை வெண்ணெய்யைப் பூசுங்கள்
பாங்கான கிணற்றில் தள்ளுங்கள்

என்பது ஒரு விடுகதையாகும். 'வெற்றிலை போடுதல்' இவ்விடுகதைக்குரிய மறுமொழியாகும். வெற்றிலையை முத்துக்குமரனாகவும், வெற்றிலையின் முதுகுப்புறக் காம்பை உரித்தல் முதுகுத் தோலை உரித்தலாகவும், சுண்ணாம்பு பூசுதலைப் பச்சைவெண்ணெய்யைப் பூசுவதாகவும், வாய்க்குள்ளே வைத்தல் கிணற்றிலே தள்ளுவதாகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த உருவகத்தை உடனடியாக விளங்கி மறுமொழி கூறாவிட்டாலும், சரியான மறுமொழியைக் கேட்டவுடன், அவ்வுருவகத்தை நாம் விளங்கிக்கொள்ளும் ஆற்றல் பெற்று மகிழ்ச்சியடைவோம். இவ்வாறு அமையும் விடுகதைகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டு நுண்ணாய்வுக்குட்படுத்தப்படவேண்டும்.

எம்முடைய கிராமிய இசைக்கருவிகளை மீட்கும் பணி இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. உடுக்கு, தாளம், மத்தளம், பறை ஆகியன இத்தகைய கருவிகளாகும். பறை முழக்குதல் பண்டைய கால முதல் எம்மிடையே இருந்து வரும் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமுயற்சியாகும். வருந்தத்தக்க வகையில் இது அமங்கலத்துக்கு மட்டுமான கருவியாக ஆக்கப்பட்டுவிட்டது. கரகம், காவடி ஆட்டங்களுக்கு இப்பறைமேளம் அணிசெய் கருவியாக அமைவதை நாம் இன்றும் காணுகின்றோம். பறை நெய்தற் பறையாகவும் குறிஞ்சிப்பறையாகவும் அமைந்திருந்த உண்மையினை நாம் மறந்துவிடக்கூடாது. 'பறைமேளக் கூத்து' எம்முடைய கிராமியக் கலைகளில் ஒன்றாக இருந்துவந்தது. இக்கூத்திலே பறையின் நுணுக்கமான ஒலிகளையும், பறைமுழக்குவோருடைய துரித ஆட்டங்களையும் காண்பவர் வியப்புடையாமல் இருக்கமுடியாது. இக்கலையும் மீட்டெடுக்கவேண்டியதொன்றாயுள்ளது.

கிராமிய வளத்தினை - அதாவது எம்முடைய மண்ணின் மூலவளத்தினை மட்டுமே உபயோகித்து எத்தனையோ கலைப்பொருட்களைப் படைக்கும் கலைஞர்கள் வாழ்ந்துவந்துள்ளனர். நாள்தோறும் பயன்பட்டுவந்த பெட்டி, பாய் ஆகியவற்றிலே செறிந்த அவர்களுடைய கைவண்ணம் வேறு பொருட்களுக்கும் பயன்படக்கூடியது. இத்தகைய கிராமியக்கலையும் நுணுகிய ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டியதொன்றாகும்.

முடிவாக, நாட்டார் பாடல்களும் நாட்டுக் கூத்தும் மட்டுந்தான் எம்முடைய நாட்டார் வழக்காற்றியற் கூறுகள் அல்ல. வளம்மிக்க எம்முடைய பண்பாட்டுப் பாரம்பரியத்தை விளக்கஞ்செய்யத்தக்க பல கூறுகள் உள. நாட்டார் கதைப் பாடல்கள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள், இசைக்கருவிகள், கைவினைப்பொருட்கள் ஆகிய கூறுகள் அறிஞர்களாலே மீட்டெடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்படவேண்டியன. நிகழ்காலப் பயன்பாட்டுக்கு அவை எவ்வெவ் வழிகளிலே உதவவல்லன என்பதையும் நன்கு தெளிவுறுத்தவேண்டும். ☐

பலசரக்குப் பொருட்களின்
சில்லறை வியாபாரம்

ஆ. க. கனகசபாபதி அன் சன்ஸ்
106, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண்டார வன்னியனின் குதிரை வரும் குளம்பொலி கேட்கிறது

புதுவை இரத்தினதுரை


தமிழனே!
காற்றில் அள்ளுண்டு
நேற்றுவந்த சப்பலிலிருந்தா
நீ இறங்கினாய்?
இல்லையே.
உனக்கும்
இந்த மண்ணுக்கும்
பிரிக்கமுடியாத உறவுண்டு.
இங்குள்ள முதிர்ந்த மரங்கள்
பாவனையற்றுக் கிடக்கும் பழையவீதிகள்
அழிந்து கிடக்கும் அத்திவாரங்கள்
கூரையில்லாத கோவில்கள்
இவற்றைப்போல
உனக்கும், இங்கொரு வரலாறுண்டு
தமிழனே!
வீரத்தின் குறியீடாக உன்முகத்திலிருந்த
முறுக்குமீசையை ஏன் வெட்டினாய்?
மணிமுடிதரித்த மன்னவன் போல
நீதரித்திருந்த தலைப்பாகையை
ஏன் துறந்தாய்?
தோளிலிருந்த சால்வை எங்கே?
காலத்துக்குப் பதில் சொல்ல
இவற்றை நீ கைவிட்டதைக்கூட
மன்னித்துக் கொள்ளலாம்.
உன் வீரத்தையும் அல்லவா
இழந்து நிற்கின்றாய்?
அதைத்தான் மன்னிக்க முடியவில்லை.
தமிழனே!
நீ சராசரியான சாமானியனல்ல...
வரலாறற்ற வழிப்போக்கனுமல்ல...
ஐநூறு வருடங்களுக்கு முன்னே
உன் பரமபரை இட்ட பசளையிற்தானே
இந்தமண் தளிர்த்தது.
உற்றுக் கேள்
விழி திறந்து பார்.
உன்னால் அறிந்து கொள்ளமுடியும்.
உற்றுக் கேள்
பண்டார வன்னியனின்
குதிரைவரும் குளம்பொலி
கட்டாயம் கேட்கும்
விழிதிறந்து பார்.
நந்திக் கொடி பறக்கும் தேரில்
உன் முந்தையர் உலா வருவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயம் தெரியும்.
அழிந்து போன யமுனா ஏரியின்
படித்துறைக் கற்களைப் பார்
உன் ஏழு தலைமுறைக்கு முன்னிருந்த
இளையவள் ஒருத்தி
மஞ்சள் தேய்த்து முகத்தில் தடவி
குறுக்குக் கட்டோடு குளிக்கின்றாள்.
தெரிகிறதா?
கையில் இருக்கும் உறைவாளோடு
சங்கிலி மன்னன் சபைக்கு வருகிறான்.
கண்களைத் திறந்து பார்
கட்டாயம் தெரியும்.
கடைசித்தமிழன் இருந்தரசாண்ட
காப்பரண் சூழ்ந்த அரண்மனை தெரியும்.
முத்துப் பந்தர்
தோரண வாயில்
கொற்றக் குடையுடன்
கட்டியப் பொல்லு
எச்சில் படிகம்
சாமரம் வீசுவோர்
எழுந்துநின்று பார்
எல்லாமே தெரியும்.
அறன் வலியுறுத்திய அமைச்சர்கள் அமர்ந்த
ஆசனப் பலகை தெரியுது பாராய்.
அழகிய பவளக் கால்கள் தாங்கிய
அத்தாணி மண்டபம் தெரிகிறதானால்
அதன் நடுவிருந்து அரசவைப் புலவன்
பாடும் பாடலும் கேட்டிட வேண்டுமே.
செவிகளை நீட்டு செய்யுள் கேட்கும்.
தமிழனே!
நான் சொல்லச் சொல்ல
நீ தூங்கிவிட்டாயா?
ஆயிரம் யானைகள் உழக்கியபோது
கும்பகர்ணன் கூட விழித்தான்
உன்னை எழுப்பிட எப்படிமுடியும்?
எத்தனை ஆண்டு காலம் உறங்கினாய்.
தமிழனே! எழும்பு.
சோம்பல் முறித்து முகத்தைக் கழுவு.
குளிக்க விரும்பினால் குளித்துக் கொள்ளடா.
சுடச்சுடத் தோசை இட்டலி இருக்குது
சுவையாய் இருக்கும் வாயினில் போடு.
என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய சோற்றுக் குழையலா வேண்டும்?
பாழாய்ப் போன பரம்பரைப் பழக்கம்
உன்னைவிட்டு என்றுதான் போகும்?
தமிழனே!
இன்றெனினும்
உறக்கம் கலைத்தாயே அதுவே போதும்
உற்றுக் கேள்.
தூரத்திருந்து ஏவிய எறிகணை
அருகில் விழுந்து அதிர்வதைக் கேளாய்.
கிளாலிக் கடலில் உலாவரும் அசுரர்
தமிழரை வெட்டிச் சரிப்பதைப் பாராய்.
தென்தமிழீழத் திசைகளில் எல்லாம்
வன்முறை என்பது வாழ்முறையானது
வீடுகள் எரித்தல்
விலங்கு போட்டடித்தல்
பாலியல் வன்முறை
பலப்பல வதைகள்
காடையர் படிக்கும் கட்டாயபாடம்.
இனியும் தூங்கி இருக்கவா போகிறாய்?
துணிவது அற்றுத் தூங்கவா போகிறாய்?
தமிழனே எழும்பு!
போராடும் புலிகளைப் பார்
சின்னப் புலிகளின் கால்களில் கூட
திசைகள் யாவும் பணிந்து நிற்கிறது.
சிறு தேருருட்டும் சின்ன வயதுதான்
என்றாலும் எத்தனை பலம்.
தலைவன் என்ற தாரக மந்திரம்
தலைமுறையொன்றின் சத்திய வேதம்.
வெல்லும் திசையில் விரைவுப் பயணம்
செல்லுக!
பிரபாகரன் வழிகாட்டியான பின்பும்
திரிவேணி சங்கமக் குளியல் எதற்கு?
பாதை ஒன்று
பயணமும் ஒன்று
தலைவன் ஒருவன்
சத்தியம் வெல்லும்
தமிழா புறப்படு!
ஜெயம்கொண்டான் ஒருவன்
பிறக்காமலா போவான்?
அவன் உன்னைப் பாடட்டும். □□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1)

மக்களின் கூட்டமொன்று 'பூமி அம்மாளுக்கு'ப் பூசை செய்து பொங்கலிட்டு வழிபடுகிறது. ஆடல் - பாடல்கள் நடைபெறுகின்றன-

பாடல்

பூமி அம்மா — எங்கள் — சாமி அம்மா
உன்னைப்
பூசை செய்தோம் — எங்கள் — சாமி அம்மா
மழை பொழியும் — தாயே — வான் கறுக்கும்
வரம்பு முட்டும் — வெள்ளம் — வழியும் அம்மா
கடல் மடியில் — தாயே — பூமி அம்மா
நாங்கள்
காண்பம் அம்மா — எங்கள் — செல்வம் எல்லாம்
பூமி அம்மா — எங்கள் — சாமி அம்மா.
உன்னைப்
பூசை செய்தோம் — எங்கள் — சாமி அம்மா.

# மண்ணில் ஒருபிடி

இ. முருகையன் —நாடகம்

எடுத்துரைஞர்: என்ன நடக்குது?
தெரியுது தானே!
இவர்கள் யாவரும் இந்த நாட்டினர்.
வழி வழியாக வந்த மரபிலே
மண்ணைக் கிளறி வாழ்கிற மக்கள்.
கடலிலும் ஓடிக் கருமம் புரிவோர்.
தங்கள் சமயமும் சாதியும் சடங்குமே
மகோன்னதமானது — மகிமை உடையது—
இப்படியான எண்ணம் உடையோர்.
தங்கள் துயர்கள் தலைவிதிப் பயன் என
நம்பிக்கிடப்போர்; நலிந்த போக்கினர்.
பூமி தேவியைப் பூசனை செய்து
பாடிப் பரவி, ஆடிக் கிறங்கி
அதிலே பரவசம் ஆகியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முன்னைய பாடலும் சன இரைச்சலும் சற்றே தணிகின்றன. வேற்றினத்தவர் சிலர் அங்கு வந்து நுழைந்து உலாவித் திரிகின்றனர். கள்ளமாக மண்ணை அள்ளித் தமது பொக்கணங்களிலே அடைகிறார்கள். பூசையில் இடம் பெற்ற பூக்களையும் பழங்களையும் கூடத் திருடிக்கொள்கிறார்கள். பூசையில் மூழ்கிய மக்கள் இவற்றைக் கவனிக்கவில்லை. மறவன் என்பவனும் அவன் தோழர்களும் இந்த அடாத்தைக் கவனித்துவிடுகிறார்கள். அவர்கள் மக்களை எச்சரிக்கின்றனர்.*

**மறவன்:** அண்ணே, அப்பு!
அங்கை பாருங்கோ...

**முதியவர்:** அதென்ன, அவங்கள் ஆர்?
அழிவார், அவங்கள் ஆர்?

**மறவன்:** கண்ணைத் திற,எணை.
கள்ளர் திரியினம்.
உங்கடை மண்ணிலை ஒரு பிடி எடுக்கினம்.

**மூதாட்டி:** ஒரு பிடி தானே! உது பெரும் நட்டமா?
இல்லைத் தானே!

**முதியவர்:** ( மறவனை நோக்கி )
ஏன் நீ இதுக்குளை தலையைப் போடுறாய்?

**மறவன்:** தறுதலைச் சனங்கள்.
நரிக்குணக் கழுகுகள்.

**மூதாட்டி:** நாசமறுப்பார்...

**மறவன்:** அப்பு, கவனம் — அம்மா, அதோ பார்.
உங்கடை மண்ணிலை ஒரு பிடி எடுக்கினம்.
கண்ணைத் திற எணை, கள்ளரை விடாதை.

**மூதாட்டி:** இவங்கள் ஆர், அழிவார்?

**முதியவர்:** என்னசெய்யினம்?

**மறவன்:** உங்கடை மண்ணிலை ஒரு பிடி எடுக்கினம்.
கண்ணுகள் திறவுங்கோவென்.
கள்ளரை விடாதையுங்கோ.
மண்ணை ஏன் அவன் எடுப்பான்?
மடக்கண்ணை, பிடிப்பம், நாங்கள்.

**இளைஞன்:** எங்கடை மண் இதய்யா!
இதை நீங்கள் அள்ளிப் போனால்...

**வேற்றவன்:** பங்கு தான் எங்களுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மறவன்:** பகற்கொள்ளை!

**ஆள்வான்:** (வேற்றவர்களின் தலைவன் இவன் என்பதை இவனது உடையும் போக்கும் காட்டி விடுகின்றன)
நீ வாய் பொத்து.
இதுக்கை ஏன் நீ நுழைஞ்சாய்?
இனி உன்னை உதைப்பென், போடா.

**மறவன்:** புதுக்க நீ ஞாயம் சொன்னாய்.

**இளைஞன்:** ( ஆள்வானை நோக்கி)
பொய்க்கதை கதைக்க வேண்டாம்.

**முதியவர்:** ( மன்றாட்டமாய் ) எங்கடை....

**மூதாட்டி:** நீங்கள் போங்கோ.

**இளைஞன்:** என்னண்ணை? தயவு செய்து...

**முதியவர்:** விட்டுத்தான் தாருங்கோவென்.

**வேற்றவன்:** விசர்க்கதை பேசுறாய் நீ.
வெட்டித்தான் எடுப்பம் மண்ணை.

**மறவன்:** வீரமா, பேசுறாய் நீ?

**இளைஞன்:** எவ்வளவு சரி இல்லை, ஆள்வாரண்ணா?
எங்களின்றை பூமியிலை வந்து நிண்டு,
தொல்லை தரத் தெண்டிச்சால்......

**மூதாட்டி:** இனிமேல், நாங்கள்
சொல்லி அழ ஒருதருமே இல்லை, அப்பா!

**மறவன்:** எல்லையளைத் தாண்டி இங்கை வராதையுங்கோ.

**ஆள்வான்:** ( சண்டித்தனமாக ) இனி ஒண்டும் பேசாதை.

**மறவன்:** பேசுவென் தான்.

**முதியவர்;** ( அச்சங் கொண்டு ) தம்பி, மறவன்!
உனக்குச் சொல்லுறென் நான்.
சண்டியனாய் மாறாதை, நல்ல பிள்ளை.
கம்பி எண்ண வேண்டி வரும், கதை பெருத்தால்.
கடும்பிடியை விடு, மோனை, தணிஞ்சு போவம்.

**மறவன்:** பம்பரமாய்ச் சுழண்டுழைச்ச சனங்களுக்குப்
பலாபலன்கள் கிடைக்காமற் போறதெண்டால்...
கொம்புகளை முறிப்பம், அய்யா.
நீங்கள் வாங்கோ,
கூடி ஒண்டாய் எதிர்த்தம் எண்டால்,
ஓடுவாங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமிக்க நாங்களெல்லாம் எதிர்த்தம் எண்டால்,
உவன்ரை வால் நறுக்கிறது பெரிசா, என்ன?

**முதியவர்:** கருமத்தைத் திட்டமிட்டுச் செய்ய வேணும்.
கடும்பிடியும் அவசரமும் நல்லதல்ல.
தருமத்தை, நியாயத்தை, சத்தியத்தை,
சரி பிழையைச் சனங்களுக்குச் சொல்ல வேணும்.
குறுமுட்டுத் தனமாக நிண்டம் எண்டால்
கொட்டுண்டு போவம் எடா, வீணாய் நாங்கள்.
விரியட்டும் உணர்வூட்டி விடுற வேலை.
விளக்கங்கள் மலரட்டும்.
பிறகு பாரென்.

**மறவன்:** அளவுக்கு மிஞ்சினதாய் அடக்கம் வேண்டாம்.
அதைத்தான் நான் வற்புறுத்த விரும்புறென்.
சீ!
களவுக்கும் கொள்ளைக்கும் எண்டு வந்த
காவாலிப் பயல்களை ஏன் விடுவான், நாங்கள்?

**மூதாட்டி:** அழிவாரை விட வேண்டாம்.
சேர்ந்து எதிர்ப்பம்.

**முதியவர்:** அதுக்கு நான் வரமாட்டென்.

**ஒருவர்:** நமக்கேன் தொல்லை?

**மற்றவர்:** நமக்கென்ன?

**ஒருவர்:** நமக்கென்ன?

**முதியவர்:** உதிலை சிக்கி
நாமெல்லாம் கொளுவுப்பட்டிட்டம் எண்டால்,
சுமைக்கணக்கும் அதிகரிக்கும்.
சும்மா, சும்மா தொல்லையளும் பெருகிவரும்.
நமக்கேன் தொல்லை?

**ஒருவர்:** பிறகிதெல்லாம் வில்லங்கம்.

**மற்றவர்:** ஓமோம், இப்ப, பேசாமல் இருக்கிறது புத்தி.

**முதியவர்:** மெல்ல, ஓசை ஒண்டும் இல்லாமல்
ஒதுங்கி நிற்பம்.

**மற்றவர்:** ஓயட்டும் கலவரங்கள்.
**முதியவர்:** பிறகு பாப்பம்.

*[கலவரமொன்று மூண்டு விடுகிறது. இரு சாராரும் அடிபட்டுக்கொள்கிறார்கள். 'போடா வெளியிலை', 'கள்ளரை விடாதை', 'மடக்கிப் பிடியெடா', 'வாலை நறுக்கெடா', 'கொஞ்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம் பொறுங்கோ', 'குழப்பன் காலியள்', 'உலுத்தப் பயல்கள்', 'உலக்கைக் கொழுந்துகள்', 'அவசரப் படாதே' முதலிய சத்தங்கள் கலந்து குழம்பிக் கேட்கின்றன. இந்தக் கலவரங்களைப் புலப்படுத்த இசையையும் தாள (மேள) வாத்தியங்களையும் பயன்படுத்துதல் வேண்டும். ஆள்வான் இந்தத் தடுதாளிகளில் அகப்பட்டுத் திண்டாடுகிறான். பிறகு ஒருவாறு சமாளித்துக் கொண்டு, சனங்களை அமைதிப்படுத்த முயன்றவாறு ஒரு மேட்டில் ஏறுகிறான். சனங்கள் தணிவடைந்து, ஆள்வானின் பேச்சைக் கேட்கும் பொருட்டு அவனை அணுகிக் குழுமுகிறார்கள். அவன் எடுப்பான குரலிலே பேசத் தொடங்குகிறான்.]

**ஆள்வான்:** வடகீழ் மண்ணின் மாண்புறு மக்களே!

**மூதாட்டி;** என்ன?

**முதியவர்:** ஆள்வார்!
எங்கள் அதிபதி.
ஆட்சி அமைப்பின் அதியுயர் தலைவர்.
நேரிலே வந்து நியாயம் சொல்லுறார்.

**மூதாட்டி:** என்ன சொல்லிறான்?
எங்கை, கேட்பமே!

**முதியவர்:** கேட்டுப் பார்ப்பம்.

**ஆள்வான்:** (ஆதரவு பொங்கும் சைகையுடன்)

கிட்ட வாருங்கள்.
இன்னும் கிட்ட — அருகிலே .. இன்னும்...

[மேலும் சனங்கள் ஆள்வான்பால் ஈர்க்கப்பட்டு வந்து நெருங்குகின்றனர்.]

**ஆள்வான்:** ( அரசியற் சொற்பொழிவுத் தொனியில் )
எனது குடிகளே, இனிய என் மக்களே!
நீங்களும் எனது நேயர்கள் தானே!
நாட்டின் பிரசைகள் — நல்ல என் குடிகள்.
தாயகம் பெரியது.
சகலரும் உரியவர்.
எல்லா மக்களும் எங்கும் போகலாம்
எல்லா மக்களும் எங்கும் உலாவலாம்.
எல்லா மக்களும் எங்கும் இருக்கலாம்.
எல்லா மக்களும் எங்கும் இறக்கலாம்
இதிலே எல்லாம் இல்லை வேற்றுமை.
பரந்த பொதுநலப் பண்பே நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது தான் நியாயம் — அது தான் நியமம்.

**ஒருவர்:** ஆள்வார் சொற்கள் அர்த்தம் நிறைந்தவை.

**முதியவர்:** அரும்பொருள் நிரம்பிய அறம் திறம் — அறந்திறம்.

**மற்றவர்:** இது தான் நியாயம் போலையும் இருக்கே!

**ஒருவர்:** உது தான் நியாயம் — உண்மையும் உது தான்.

**முதியவர்:** ஆள்வார் நல்லவர் - அறநெறிச் செல்வர்.

**மறவன்:** ( சனங்களை விலக்கிக்கொண்டு முன் வந்து )

ஆள்வான் முற்றிலும் அறம்புறமானவன்.
தூய்மை இல்லாதவன், சூழ்ச்சியில் வல்லவன்.
நன்மைகள் உணரான் — நம்பத்தகாதவன்.
ஆள்வான் வலையிலே அகப்பட வேண்டாம்.
நம்மை அக்கொடியவன் நசுக்குவான்,
உழக்குவான்.

**முதியவர்:** நிட்டூரம் பேச வேண்டாம்,
நியாயத்தைப் பேச வேண்டும்.

**மறவன்:** கட்டாயம், ஆள்வான்
எண்ணுக் கணக்கற்ற உபாயம் காண்பான்.
கணக்கற்ற உபாயம் கண்டு
காலின்கீழ் நம்மைப் போட்டே
உழக்கவும் தயங்க மாட்டான்
உன்மத்தன் — ஊத்தை நெஞ்சன்.

**ஒருவர்:** எதையும் நீ மிகைப்படுத்தி
எங்களை வெருட்டுறாயே!
கதை பல பேசி வீணாய்க்
கலவரம் மூட்டுறாய் நீ.

**முதியவர்:** நிதானமாய் நடப்பம் நாங்கள்.
நியாயத்தைச் சொல்லிப் பாப்பம்.
உதாரமாய் அன்பை நம்பி
உத்தம வாழ்க்கை வாழ்வம்.

*பின்னும் கலவரங்கள். செந்நிறத் துகில் ஒன்று இதுவரை மேடையில் விரிபட்டுக் கிடந்தது - இதைக் கைப்பற்றுவதற்கு இரு சாராருக்குமிடையே இழுவைப் போட்டி தொடங்குகிறது. 'சேர்ந்திழுப்பம்', 'வேண்டாம்விடுங்கோ,' 'நமக்கேன்தொல்லை?' 'நாங்கள் மனிசர்', 'மெல்ல நழுவுவம்', 'விடுங்கோ, விடுங்கோ', என்னும் கூச்சல்களிடையே கடுமையான இழுபறி நடக்கிறது. இறுதியில், செந்துகிலின் ஒரு துண்டு மறவன் கையில் எஞ்சு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. அவன் அந்தத் துண்டையும் கொண்டு வெளியேறு கிறான். அவனுடைய ஆதரவாளர்களும் அவனுடன் போகிறார் கள்.

(II)

ஒரு காட்டுப் பிரதேசம். இளைஞர் பலர் குழுமியுள்ளனர். மறவன் உயரமான ஒரு மேட்டில் நின்றவாறு பிரகடனம் செய் கிறான.

மறவன்:

எழுச்சியற்ற தாய் நிலத்தில் விழிப்பை வேண்டி
இளைஞர்கள் நாம் கூடியுள்ளோம்—
இந்தக் காட்டில்.
விழிப்புணர்வின் வெளிப்பாடாய் நம் கருத்தை
வெளிப்படுத்திப் பிரகடனம் செய்கின்றோம் யாம்.
நாம் எமது தாயக நிலத்தின்மேல் ஆணையாய்
நயந்திதனை அறிவிக்கின்றோம்.
நமது மண் பறிபோக, நமது மொழி, பண்பாட்டு
நலவுரிமை இழக்க மாட்டோம்.
கேவலம் சில்லறைச் சிறு சலுகை வேண்டியே
கீழ்ப்பட்டுத் தொழுது நின்று
கிடைக்கின்ற பருக்கைகளை எடுத்துண்ண ஒருப்பட்டுக்
கெஞ்சும் நிலை நிராகரிப்போம்.
காலவோட்டத்திலே மெய்யுணர்வு முளை விடும்.
கதிர் வீசும் — இருள்கள் போகும்.
கல்வி நிலை மேலோங்கும்.
காளையர்கள் எழுவார்கள்.
கருவிகளும் ஏந்துவார்கள்.
தாகமும் கொள்வார்கள் — தாய் நிலம் மீட்டிட,
தவிடு பொடி ஆகும், தடைகள்.
தனியான புதியதொரு சமுதாயம் உருவாகும்.
தன்னுரிமை ஆட்சி தோன்றும்.

(III)

பேயாட்டிச் சூனியஞ்செய்து ஏவற்செய்வினை புரியும் மயான வெளிப்பந்தல். ஆள்வான் அங்கு பேய் பிசாசுகளைக் கூவியழைக்கும் சடங்குகளில் ஈடுபட்டுள்ளான். 'புத்தம் சரணம் கச்சாமி; தம்மம் சரணம் கச்சாமி; சங்கம் சரணம் கச்சாமி, என்ற மந்திர உச்சாடன வாத்திய இசையும் கேட்டுத் தணிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆள்வான்:** மறவன் என்றொரு மடையனின் தூண்டலால்
வடக்கிலும் கிழக்கிலும் குழப்பம் — கலவரம்.
விடுவெனோ இதனை நான்?
வெளுத்து வாங்குவேன்.
எதிரிகள் பொடிபட ஏவுவேன், பேய்களை.
(பக்கத்தில் நிற்கும் ஏவலாளை நோக்கி)
பேய்களைக் கூப்பிடு .....

**ஏவலாள்:** பேய்களே, பேய்களே!

[பேய்கள் சிறியனவும் பெரியனவுமாய், பல பருமனிலும், துள்ளிப்பாய்ந்து ஓடிவருகின்றன.]

**ஆள்வான்:** சின்னப்பேய்க் கூட்டமே,
போ.
சிதைத்திடு வடகீழ் நாட்டை.
பின்னர் நான் மறைந்திருந்து
பெரியதோர் சூழ்ச்சி செய்வேன்.
சன்னங்கள் பறக்க வேண்டும்.
சரீரங்கள் துடிக்க வேண்டும்.
சின்னப்பேய்க் கூட்டமே, போ-
திணற வை.
சிதறி மோது.

[பேய்கள் வெறிகொண்டு வெளியேறுகின்றன.]

(IV)

வடகீழ் நிலத்து மக்கள் கூட்டமீது பாரிய தாக்குதல் ஒன்று நடைபெறுகிறது. கோரமான கவசவண்டி அணியொன்று மக்களை ஒடித்து நெரித்துத் தள்ளியவாறு மேடையைக் கடக்கிறது. விமான இரைச்சல், குண்டு வீச்சு, ஷெல் வீச்சு, ஃஎலிக்கொப்ற்றர் இரைச்சல், மனிதக் குரலின் ஓலங்கள்.

— என்னடா தம்பி?
— அய்யோ! இவங்கள் ஆர்?
— ஆள்வார் கூட்டம்.
— மின்னலா, இடியா, அன்றி வெடிகளா?
— பொடியள் எங்கே?
— படு, படு.
நிலத்தை ஒட்டிப் பதுங்கடா, பாதுகாப்பாய்.
— தட பட என்று வண்டி
சகடைபோல், கோபுரம்போல்...
படை பல ஏந்திக் கொண்டு
பாயுதே தெருவில், இங்கே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— ஏதினிச் செய்வோம் நாங்கள்?
ஈசனே!
— அய்யோ!
— அம்மா!
மூதாட்டி: பாதகன் வருகிறானே!
படையினால் உழுகிறானே!
வேதனை தாங்க மாட்டோம்.

**ஆள்வான்:** *( இரத்த வெறி கொண்டவனாய் மண்டை யோட்டு மலையுடன் வந்து )*
வெற்றி! ஓ! வெற்றி, வெற்றி.

*[ஆள்வான் ஒதுக்குப் புறமாக ஓர் இடத்தில் நின்று மக்களின் திண்டாட்டத்தைக் கண்டுகளிப்படைகிறான் ]*

**புலம்பல்**

— கால் இழந்தோம், கை இழந்தோம்
கண்ணிழந்தோம் பெண்ணிழந்தோம்
நூல் இழந்தோம், படிப்பிழந்தோம்
நோய்க்கிரையாய் நாம் விழுந்தோம்
— ஆள் இழந்தோம், அணி இழந்தோம்
அடுப்பிழந்தோம் நெருப்பிழந்தோம்
தோள் இழந்தோம், தொழில் இழந்தோம்
தொய்ந்து நொந்தோம், வெந்து நைந்தோம்
— ஆறுதலோ கிடையாதாம்
அந்தரித்தோம், அந்தரித்தோம்.
**இளைஞன்:** நாட்டை எண்ண இதயம் நடுங்குமே.
நரகலான கிடங்கில் அழுகிடும்
ஓட்டை வாழ்க்கை உலகிற் கிடக்கிறோம்.
ஒடிந்து நொந்து சிதைந்து பதைக்கிறோம்.
**ஒருவர்:** வீடிழந்து தெருவிலே நிற்கிறோம்.
**மற்றவர்:** வெட்டப் பட்டும் அடிபட்டும் சாய்கிறோம்.
**ஒருவர்:** தேடி வைத்த சில பண்டம், சல்லிகள்
திருடப்பட்ட அகதிகள் ஆகிறோம்.

*[ஆள்வான் ஒதுக்குப்புறத்திலிருந்து வெளிப்படுகிறான். பரிவாரங்கள் 'புத்தம் சரணம்' இசை ஒதுகின்றன.]*

**முதியவர்:** அங்கே வருவதார்?

**மற்றவர்:** ஆள்வார் வருகிறார்.

**முதியவர்:** ஏதோ சொல்ல எண்ணுகிறாரோ?

**மற்றவர்:** என்ன சொல்கிறார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒருவர்:** இரு, இரு, கேட்போம்.

**ஆள்வான்:** அன்புக்குரிய அறந்தெரி மக்களே,
உங்களைக் காண உருகும் எம் நெஞ்சம்.

**முதியவர்:** மேதகு பெரியோய், மிகவும் நலிந்தோம்.
உறவும் உரிமையும் உடைமையும் இழந்தோம்.
உணவும் உடையும் ஒன்றுமே இல்லை.
பஞ்சத்தாலே பரிதவிக்கின்றோம்.
நெஞ்சம் இரங்குக, நீதி வழங்குக.

**ஆள்வான்:** நீதி தானே என் நியதி?
பிறகு நீ வாதுகள் செய்வதேன்?
வாயைப் பொத்தடா.

**இளைஞன்:** உரிமையைத் தந்தால் உத்தமம், அய்யனே.

**ஆள்வான்:** ( சீற்றம் மிகுந்து ) உடைப்பென் பல்லுகள்.
உதைப்பென்; தெரியுமா?
நீதி என்ன, நிவாரணம் தரலாம்.

**பலரும்:** நிவாரணம், நிவாரணம்!

**முதியவர்:** நிரம்பவும் நன்றிகள்.

*திடீரென்று கல்லொன்று வந்து ஆள்வானின் மண்டையில் விழுகிறது. கல்லெறிகள் சரமாரியாகத் தொடர்கின்றன. அவன் அந்தரித்துப் போகிறான்.*

**ஆள்வான்:** ஆ; ஆ! ஓ, ஊ... அதாரெடா, ம்டையன்?
அதாரெடா, பொடியன் — அடாத்துக்காரன்?
கல்லா எறிகிறாய் — கயவனே, கழிசறை?

**ஒருவர்:** மறவனின் தம்பிமார்.

**ஆள்வான்:** மடக்கிப் பிடியெடா.
பிடியெடா, அவங்களை — பேயரைப் பிடியெடா.

*[சிலர் மறவனைப் பிடிக்க வருகிறார்கள். மறவன் அவர்களை எதிர்கொண்டு விலக்கி...]*

**மறவன்:** ( ஆள்வானை நெருங்கியவாறே )

ஒருவரும் என்னைப் பிடிக்கவும் வேண்டாம்.
உதை கிதை பட்டு முறியவும் வேண்டாம்.
நானே வருகிறேன், ஞாயம் கேட்கிறேன்.

**ஆள்வான்:** ( திடுக்கிட்டு, யோசனையுடன் அஞ்சிப் பதுங்கி )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம்ம்...ம்!

**மறவன்:** நமது மனிசரை நீ நாயாய் நினைக்கிறாய்.
ஞாயம் கேட்டால் நக்கல் அடிக்கிறாய்.
சாமி என்கிறாய், தருமம் என்கிறாய்.
பூமி பறிக்கிறாய், பொருள்களை அழிக்கிறாய்.
நரம் இனி உன்னை நம்பவே மாட்டோம்.

**ஆள்வான்:** மோத நீ துணிந்தாய்?
முறுக்கி அடிக்கிறாய்!

**மறவன்:** நீதி நாம் கேட்டால் நிவாரணம் என்று
பேசி மழுப்பிப் 'பிராக்குக்' காட்டிறாய்.
சட்டம் மதியாய்,
சலுகைகள் தருவதாய்ப்
பசப்பிப் பசப்பிப் பழிச்சொல் பெருக்கிறாய்.
மனிசரை மனிசராய் மதிப்பதே இல்லை நீ.
உலுத்தனே, உன்னை உதைத்துத் தள்ளுவோம்.
வருந்தி உழைக்கிறோம்.
வரும்படி முழுவதும்
உறிஞ்சிக் குடிக்கும் உணர்விலா மூர்க்கனே,
இனியும் நாங்கள் இவைகளைச் சகியோம்.
ஒளிப்புகள் மறைப்புகள் ஒன்றா, இரண்டா?
சுழிப்புகள் நெளிப்புகள் வளைப்புகள் அனந்தம்.

**ஆள்வான்:** நிவாரணம், உதவி, நெறிமுறை, சலுகைகள்
கலந்துரையாடல், கருணை, சமரசம்...

**மறவன்:** இப்படிச் சில சில சொற்களைப் பேசியே
கண்ணிலே இது வரை மண்ணை நீ தூவினாய்.
இனியும் நாங்கள் இவைகளைச் சகியோம்.

**ஆள்வான்:** என்ன தான் செய்வியோ?

**மறவன்:** எதிர்ப்பகை தொலைப்போம்.

**ஆள்வான்:** ( நக்கலாக ) பார்ப்போம், பார்ப்போம்.

**மறவன்:** பகிடியா விடுகிறாய்?
அடக்கு முறைகளை உடைத்து நாம் வீசுவோம்.
ஒடுக்கும் விதிகளை ஒடித்து நாம் ஊதுவோம்.
கெடுக்க நினைக்கும் உன் கொடுக்குகள் நறுக்குவோம்.

*மறவன் ஆள்வானை நெருங்குகிறான். மறவனின் தோழர்களும் அவனை வளைத்துப் பிடித்துத் தாக்குவதற்குப்போல் முந்துகிறார்கள்.*

**ஆள்வான்:** ( ஈடாடிப் போகிறான்; ஆனால் அதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைத்து) வெடுக்கென நாலு வெறுமொழி பேசினாய்,

ஆறுதலாய் வா; அமைதியாய்ப் பேசுவோம்.
பிறகு வா, நாங்கள் பேசலாம்.
சரியா?
அது சரி, அது சரி...... ஆறுதலாக...
பிறகு வா... ஓம்... ஓம்... பிறகு, பிறகு.....

*எதிரிகள் முன் நின்று தாக்குப்பிடிக்கும் வலிமை குன்றிவிடுகிறது. ஆள்வானின் குரல் தளதளத்துப் போகிறது. அவன் அஞ்சி நழுவி ஓடுகிறான்.*

பாடல்

ஆணவம் மிகுந்த பேச்சும்
அகந்தையும் செருக்கும், நன்மை
பேணுதல் இல்லாச் சூழ்ச்சிப்
பெருமிதச் சுழிப்புப் போக்கும்
ஈரநெஞ்சுடையான் போல
இதம்பட உரைக்கும் நாவும்
வீரமும் களத்தே போட்டு
வெறுங்கையன் ஆனான் ஆள்வான்.
வெறுங்கையன் ஆன ஆள்வான்
குலைந்து போய் இலங்கை புக்கான்.

எடுத்துரைஞர்:
மறவன் என்போன் விழிப்புடைய இளைய மைந்தன்.
வாய்ப்பேச்சுக் காரன் அல்லன்.
திட்டம் தீட்டி
விறலுடனே போராடி, மக்களோடும்
விரைவாக ஒருங்கிசைந்து கலந்து போனான்.
படையெடுத்து முதுகொடித்த மறவனாலே
பாவம், அந்த ஆள்வார்கள் தளர்ச்சி கண்டு
கிடுகிடுத்து, நடு நடுங்கி ஓடினார்கள்.
கேடு கெட்ட செயல்களையும் தொடர்ந்திட்டார்கள்.
எதிரிகளின் தாக்குதல்கள் ஒவ்வொன்றுக்கும்
ஏற்றபடி பதில் தந்த மறவர் சேனை
அதிரடிகள், கரந்தடிகள் அமுக்கித் தீர்த்தல்,
அனைத்தையுமே கையாண்டு முன்னேறிற்றாம்.

*போர் முழக்கங்கள், தகர்ப்புகள், வெடி குண்டுகள், எறிகணைகள், வாகன இரைச்சல்கள், வெற்றி முன்னேற்ற இசைகள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*யாவும் சில நொடிகள் நீடிக்கின்றன. துரிதகதியிலான நடன அசைவுகளால், போர் நிகழ்ச்சிகளைக் காட்சிப்படுத்தலாம்.*

எடுத்துரைஞர்:
ஒருங்கிசைந்த மறவர்களும் மக்கள் தாமும்
ஒரே குரலிற் சங்கீதம் இசைக்கின்றார்கள்.
பெருங்கருமச் செயல்வழியில் பாடுபட்டுப்
பீடுடைய மானுடத்தைப் படைக்கின்றார்கள்.

பாடல் ( ஆண், பெண் பல குரற் கலப்பிசை )

மனிதர்கள் உயிர்க்க வேண்டும்

மானுடம் தளிர்க்க வேண்டும்
புனிதர்கள் பிறக்க வேண்டும்
பொய்ம்மையை ஒழிக்க வேண்டும்.
இனிமையில் எழுச்சி கண்டே
இதயங்கள் சிலிர்க்க வேண்டும்.
பனிமலர்க் குளிர்ச்சித் தென்றல்
பாரெல்லாம் பரக்க வேண்டும்.

( திரை )

உங்கள் மங்கள நிகழ்ச்சிகளை என்றும்
நினைவில் நிறுத்திட
எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

- கறுப்பு - வெள்ளை - வர்ணப்புகைப்படங்கள்
- வீடியோப் படப்பிடிப்பு [*Mixing*]
- வெளிப்புறப் படப்பிடிப்பாளர்கள் [*Mixing*]

**கே. எஸ். ஆர். போட்டோஸ்**
766, காங்கேசன்துறை வீதி,
தட்டாதெருச்சந்தி,
யாழ்ப்பாணம்.

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நெஞ்சை நிமிர்த்துவோம் நெருப்பென ஆகுவோம்
வெஞ்சினம் கொள்ளுவோம் வேங்கைகள் ஆகுவோம்
அஞ்சாத வாழ்வதனையே அனைவரும் பெறுகுவோம்
இஞ்ஞாலத்தில் ஈழமதனை இயற்றுவோம் இயற்றுவோம்"

மக்களின் நன்மையும், வசதியும் கருதி நல்லபொருள்களையே விநியோகிக்கும் நல்ல விற்பனை நிலையம்.

பலசரக்குப் பொருட்கள் சில்லறை வியாபாரம்

# ருகுணாஸ் ரேடிங்

284, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவே மறைந்து விடு
உலவுதற்கும்
குலவுதற்கும்
இதுவோ நேரம்?

நேற்றிலிருந்து
பற்றைக்குள்ளே
பதுங்கியிருக்கிறேன்.

கரிய பனைகளின்
இடைவெளிக்குள்
உருமறைந்தபடி
கொடியவர்களின்
காவலரண்கள்...
இருப்பிடத்தையும்
எதிரியின்
நடமாட்டத்தையும்
அறிய நான்
முன்னேற வேண்டும்.
நெடுவெளிக்குள்
ஊர்ந்து சென்று
உற்றுநோக்கவேண்டும்
ஏன் வந்தாய்?
எனக்கு இடையூறுசெய்யவா?



கூவிவரும் எறிகணைகள்
சிலவேளை — உன்
குரல்வளையையும் அறுக்கலாம்.
ஏன் வந்தாய்?

மேகங்களால் மூடி — பின்
முழுமுகங்காட்டி
ஒளித்து விளையாட
இது நேரமில்லை.

உடைந்த வீடுகள்
உருக்குலைந்த ஊர்கள்
உழுதுவிட்ட எம் வயல்களிலே
கண்ணிவெடி விதைப்புகள்
நான் எரிந்து கொண்டிருக்கிறேன்

நீ மட்டும் தண்மையாய்
வானத் தடாகத்தில்
விளையாடி மகிழ்கிறாய்.

எல்லைகள் என் கரங்களிலே
நாளை நான் வீழலாம்
எல்லைகள் வீழுமோ?

நிலவே மறைந்து விடு
நான் இருளுக்குள்ளே
ஒளிதேட வேண்டும்.

இரை தேடும்
இயந்திரக்கழுகுகளுக்கும்
குறிவைத்த
துப்பாக்கிக் குழல்களுக்கும் நடுவில்
சிதைந்து கொண்டிருக்கும்
எனது மண்ணைச் சிறை மீட்க
இருளுக்குள்ளால் நான்
முன்னேற வேண்டும்.
நிலவே
மறைந்து விடு.

## நிலவே மறைந்துவிடு

**உதயலட்சுமி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வெளி எப்போதுமே அற்புதமானது. மாரியோ, கோடையோ, இரவோ, பகலோ — எப்போதும். ஆனால், முன்னிலவு வேளைகளில் வலு விசேஷம். தெரு, கிழக்கிலிருந்து மேற்கே ஓடுகிறது. ஒரே நேர். அப்படி வருகிறபோது, இருந்தாற்போல ஓரிடத்தில் வேலி அடைத்த வளவுகள் நின்று விடும். இரண்டு பக்கமும் வெளிவிரியும். படாரென்று — கட்டொன்றை அவிழ்த்து விட்டதுபோல் — விட்டாத்தியாயிருக்கும். முகத்திற் படுகிற புதுக்காற்றுப்போல் மனதிலும் வீசும்...

வெளி தொடங்குகிற இடத்திலிருந்து ஒரு முப்பதடி வந்ததும், தெருவின் தார் கழன்று நீள்வட்டமாய்க் கிடக்கிற அந்தக் கிடங்கைத் தாண்டுகிற கையோடு, இடது பக்கம் திரும்பி, வெளி விளிம்பின் தென்னை நிரைகளுக்கு மேல் பார்த்தால், பத்திரகாளி கோவில் கோபுரம் தெரியும். ஒன்று அல்லது இரண்டு கணந்தான்- மோட்டார் சைக்கிளா, சைக்கிளா என்பதைப் பொறுத்து. மரங்களின் இடைவெளி அவ்வளவுதான் காட்டும்- இன்றைககும், இந்தா, மாலை வெயிலில் மஞ்சளாய்...

கால் மைலுக்கும் கூடவரும் வெளியின் நீளம். அகலமும் கிட்டத்தட்ட அவ்வளவு. நட்டநடுவில் தெரு. பக்கத்துப் பாத்திகளிலும் தெரு உயரம் - புகையிலை வைக்கிற காலங்களில் வெளி நிறைந்து கடல்போலிருக்கும். பயிர் வளர, பச்சைக் கடல் உயரும்...... மற்றைய காலங்களில், அங்கொரு துண்டில் குரக்கன், இங்கொன்றில் மரவள்ளி - அவரவருக்கு வாலாயம் போல. வெளிச்சம் இருக்கிற எந்த நேரத்தில் வந்தாலும், எங்கோ யாரோ, ஏதோ செய்து கொண்டிருக்கிற உயிர்ப்பு......

இந்தத்துண்டில், கண்ணு உழுந்து போட்டிருக்கிறான். உழுந்தா, பயறா? இன்னும் வடிவாய்த் தெரியவில்லை. இவ்விரண்டு இலைகளோடு நிற்கிற பயிர். இன்றுதான் இறைத்த ஈரத்துக்கிடையில் மதாளித்துப் படர்ந்



# சனம்.

சாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்த பசளிக் கீரை. மெல்லிய நீலம் பரவிய பச்சை. மடித்தால், இலைகள் டிக்கென்று ஒடியுமென்று இங்கிருந்தே உணரமுடிகிறது.

சோழகம், கொஞ்ச நாட்களாகவே இப்படி ஒரு வாடைக்குளிரோடு வீசுகிறது. எங்காவது மழையா? இங்கென்றால், வானம் வெளித்துக் கிடக்கிறது. மேற்கில் மட்டும் சில சிவப்பு முகில்கள்.

என்ன இது?

ஒருவரையும் காணவில்லை! தெரு நீளம் ஒரு காகக்குருவியும் இல்லை! என்ன சங்கதி? இந்த நேரத்தில் இந்தத்தெருவில் எவ்வளவு சனம் போகும்? என்ன நடந்தது?...

தோட்டங்களைத் திரும்பிப் பார்த்தான். வலது பக்கம் தெருவோடு ஒரு குரக்கன் பாத்தி. அங்கு வெருளி மட்டும் - அதன் கையிலிருந்த சவுக்கு நுனி காற்றில் பறக்கிறது. இடது பக்கம் அதுகூட இல்லை. இதென்ன? கொடியேற்றுகிற பெடியள் எல்லாம் எங்கே போனார்கள்? காற்று எவ்வளவு நல்லாய் அடிக்கிறது! அதற்கிடையிலா வலித்துக் கொண்டு போயிருப்பார்கள்? நேற்றுக்கூட இரவிரவாக ஒரு எட்டுமூலை விண்கூவியது...

அசைவேயில்லை. ஒரு வாகனம், வண்டில், சைக்கிள்—? நடப்பவர்கள் கூட! என்ன நடந்தது, எல்லோருக்கும்? இறைப்பவர்கள், விறகுக்கு அலம்பல் தேடுபவர்கள், எருப்பொறுக்குபவர்கள், எதையோ விதைப்பதற்காகக் கொத்துபவர்கள், புல்பிடுங்குபவர்கள், மாட்டைக்கலைப்பவர்கள், இவர்களோடு கதைப்பவர்கள், சண்டை பிடிப்பவர்கள், வரம்பால் நடந்து தவறணைக்குப் போகிறவர்கள், வரும்போது வரம்பில் தள்ளாடுபவர்கள், பராக்குப் பார்க்கும் குழந்தைகள், குறுக்கே பாயக்கூடிய சிறுவர்கள்...? எல்லாரும் எங்கே? என்ன இது, இன்று?

நேரே...... வெளிமுடிந்துங்கூட, தெரு நேரே போகிறது. ஒரு முந்நூறு யார் அப்படிப் போய்த்தான் பிறகு டானாவாக வலப்பக்கம் திரும்பும். இங்கிருந்து அந்த முடக்கும் தெரிகிறது. அங்கும் ஒரு மனுக்கணமும் இல்லை! வெளி முடிவில் வருகிற கனகராசா கடை, தள்ளியிருக்கிற சலூன், பிறகு சந்தி... ஓரிடத்திலுமா ஆட்களில்லாது போவார்கள்?

காற்று, தெற்கிலிருந்து வந்து தெருவைத் தாண்டி வடக்கே பறந்தது. பொலித்தீன் பையொன்று, பூப்போல், கடற்சொறி போல், பரசூட் போல்... இந்த வெயிலிலும், காற்றுக் குளிராய்த்தானிருந்தது.

என்னாயிருக்கும், இங்கே? ஏதும் பிரச்சினையா? அப்படி என்ன—? சத்தங்கூடக் கேட்காமல்.. பயமா, இது? பரபரப்பா?— சைக்கிளை உழக்கினான்.

பத்து வருஷம்! எண்பத்துமூன்று ஜூலை. ஒரு காலை. விடிந்த போதே வித்தியாசந்தெரிந்தது.

சக்தி வந்து மெல்லக் கூப்பிட்டான்.

"சந்தையடியிலே ஏழெட்டுப் பேரை ஆமி சுட்டுப் போட்டிருக்காம்! வாறியா, என்னெண்டு பாத்திட்டு வருவம்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியில் கண்ட எவரோ, ஊரடங்காம் என்றார்கள். வடிவாயுந்தெரியவில்லை. ஊரே கெலித்து ஒடுங்கிக் கிடந்தது.

''நேற்றிரவு தின்னவேலியிலை நடந்ததுக்குப் பழிவாங்கலாம், இது.'' ...காற்றோடு கதைகள்.

சந்தையடியில் சிறுகும்பல் நின்றது. நின்றவர்கள், காதுகளையும் கால்களையும் தயாராய் வைத்தபடி நின்றார்கள்,

எப்போது எங்கிருந்து வருவான்களென்று தெரியாத பதகளிப்பு. பூட்டியிருந்த கடைகளின் விறாந்தைகளில் வளர்த்தியிருந்த சடலங்கள்... எல்லாம் இளந்தாரிகள். பள்ளிக்குப் போன பெடியன்களும்... கடவுளே!

இடது கன்ன மேட்டில் துவாரம் தெளிவாய்த் தெரிய மல்லாந்து கிடந்த முகமொன்று ... தாங்க முடியாமல், ''வா, போவோம்'' என்று சக்திதாசனை இழுத்தபடி வெளியே வந்தான்.

எங்காவது ஜீப்போ, ட்ரக்கோ இரைகிறதா என்று புலன்களைக் குவித்தபடி ஒழுங்கைகளூடாகத் திரும்பிக்கொண்டிருந்த போது, சக்தி சொன்னான்:

''மச்சான், பதின்மூண்டு சிங்களவர்களைக் கொண்டதெண்டு சொல்லுவாங்கள் .. ஆனா, இது உண்மையிலேயே இலங்கை இராணுவமாக இருந்திருந்தால்...''—

சக்தி 'இலங்கை' என்றதை அழுத்திச் சொன்னான்—

''......இந்தப் பதின்மூண்டிலை, மூண்டாவது தமிழாக இருந்திருக்குமே!''

இந்தத் தெருவால் வந்து கே.கே.எஸ். வீதிச் சந்தியையும் பார்க்கலாமென்றான், சக்தி. வந்தார்கள். இடையில் ஏதோ இரைந்தமாதிரி ஒரு சத்தம். சோழகமா, வாகனமா என்றுகூட யோசிக்க முடியாத அந்தரத்தில் அமத்திக்கொண்டு பறந்த போதும், இந்த வெளி இப்படித்தானிருந்தது!

அன்றாவது பரவாயில்லை; சக்திகூட வந்தான். ஆனால் ஒரு நாலு வருஷத்திற்குப் பிறகு இந்த இடத்தை அப்படித்தாண்ட நேரிட்டபோது, இவன் தனியேதான் வந்தான். சைக்கிள்தான்.

தோட்டவெளியைச் சுற்றி அரண் கட்டிநிற்கிற பனங்கூடலெங்கும் இந்தியன் ஆமி நிற்கக்கூடும்...... இவன் ஆர், இப்படித் தன்னந்தனியே என்று.... ஊரைச்சுற்றி வளைத்த போது இப்படித்தான் ஏழெட்டுப் பேரை ஏன் இங்கு வந்தேன்? இருந்தது போல் மாமா வீட்டில் இருந்திருக்கலாம்... இப்போ வீடு பார்க்க என்ன அவசரம்?

சுற்றி வளைத்து, அந்தக் குறிச்சியின் சனமெல்லாவற்றையும் ஒரே வீட்டில் அடைத்து வைத்த அந்த ஒருகிழமை. அவன்கள் விட்டதும் விடாததுமாய் வீட்டுக்குப்போய் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு பட்டணத்துக்கு நடந்தே போய் மாமா வீட்டிலிருந்த மூன்று கிழமை — இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாதமும் வீடு ஏதோ இருந்திருக்கும்தானே.

முதல்நாள் மகாலிங்கத்தைக் கண்டபோது, இரண்டுதரம்போய்த் தனது வீட்டைப் பார்த்துவிட்டு வந்ததாகச் சொன்னான். அவன் கதையைக்கேட்டு வெளிக்கிட்டதுபிழை. அதுவும் தனியே! அவனோடாவது வந்திருக்கலாம்... ஆரும் கூட இருந்தால் பரவாயில்லை .. தடுத்துவைத்தபோதுதான் என்னவெல்லாம் செய்தான்கள்... ஆனால், ஊரெல்லாம் அப்போது ஒருமிக்க இருந்தது...

மழைகாலம். எங்கும் பச்சை. பனையடி மூலையில் மாடுகள் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்தன. பசுமாடுகள். வீடுகளை விட்டு வெளிக்கிட்டபோது புத்தியாய் அவிழ்த்துவிட்டவர்களின் மாடுகள். பிறகு, அவன்களும் கட்டுகளில் நின்றதுகளை அறுத்து விட்டதாய்ப் பறைந்தார்கள்..... எப்படியோ, கட்டைகளில் நின்ற மாடுகள் மந்தையாய்ப் 'பாயின!

தடுப்புமுகாமிலிருந்தபோதே இந்த மந்தை உருவாகிவிட்டது. ஒரு பிற்பகல், அந்த வீட்டைத்தாண்டி அது தெருவால்போனது. அவன் வீட்டு மாடும் அதில். கன்னி நாகு. மாடுகள், அந்த வீட்டிலிருந்த மனிதர்களைக் கவனித்ததாய்த் தெரியவில்லை. அவர்கள் கட்டில் நின்றார்கள், அவை சுதந்திரமாய்ப் போயின! வீட்டைத் தாண்டியதும், பள்ளமாய்க் கிடந்த தெருக்கரையில் தேங்கிநின்ற வெள்ளத்தை வாய் வைத்து உறிஞ்சின. அதைக்கண்ட கந்தையர் அழுவார் போலிருந்தார் - அவைகளுக்கு வித்தியாசமே இல்லைப்போலும். நல்லகாலம், மாரியாயிருந்தது.

அதே மந்தைதான். அவன் மாடும் அதில் நிற்குமா? ஏதோ, தப்பிப் பிழைத்திருக்கும்... அதையெல்லாம் பார்க்கிற நிலையில்லை, இது ..

வீட்டுக்குப் போனது, பார்த்தது, திரும்பியதெல்லாம் வெளி நினைவில் மங்கிப்போயின.

இன்றைக்கும் வெளி அதேமாதிரி?

முடிவில் வருகிற முதலாவது மின்கம்பம்... முதலி வீட்டு வேலியோடு வெளி முடிகிறது. கண்கள் கூர்ந்து முன்னால் தேடின...

கனகராசா கடை திறந்துதான் இருக்கிறது. அதற்கும் சலூனுக்குமிடையிலிருக்கிற ஒடையில் இரண்டு சைக்கிள்கள். கடையில் ஓர் ஆள். சலூனுக்குள்ளும் கண்ணாடிக் கதவினூடு தெரியும் அசைவுகள் ..

இடதுபக்கம் திரும்புகிற ஒழுங்கை முகப்பில் வாசிகசாலை. திறந்திருந்தது. எட்டுப்பத்துச் சைக்கிள்கள் எதிர்வேலி நிழலோடு நின்றன. சனங்களும் கனபேர். குரல்கள் பெரிதாய் ஒலிக்கின்றன...

சைக்கிளை, ஃப்ரீவீலில் விட்டான்.

□□

---

''உலகெங்கும் தமிழினம் பரந்துவாழ்ந்தாலும் தமிழீழத்தில் தான் தேசிய ஆன்மா விழிப்புப் பெற்றிருக்கிறது; தமிழீழத்தில்தான் தேசிய ஆளுமை பிறந்திருக்கிறது; தமிழீழத்தில்தான் தமிழரசு உருவாகும் வரலாற்றுப் புறநிலை தோன்றியிருக்கிறது''

—தமிழீழத் தேசியத்தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்.

மக்களே எழுந்திடுவோம்.
விரவிக்கிடக்கும் நம் மண்ணில்
விடுதலை தேடுவோம்!
அப்பிப்போய்க்கிடக்கும்
இருளினை அகற்றிட
இரவியைக் கொண்டுவருவோம்.



வீடுகள் கொடிய
அரவப் புற்றுக்களாயின.
வீதிகள் சுருண்டு முடங்கிக் கிடந்தன.
வார்த்தைகள்
உள்ளத்துடன் நின்றுபோயின.
வாழ்வும் சாவும் ஒன்றென ஆயின.
எம் தென்றலின் மீது
புயலேறி நடக்கிறது.
பனிமுடி தரித்து
பசுமைக் கவிதைகள் படிக்கும்
புல் நுனிகள்
கந்தக வெம்மையால்
கருகிப்போயின.

கொடூரத்தின் விளிம்பில்
குருதி சொட்டும்......
நீலத்திரைகடல்
மாலையில் மட்டுமல்ல,
மதியத்திலும் ரத்த நிறம்.

வெளிப்படையாய்
நீண்டதூக்க 'ரவை' மாத்திரைகளை
அருந்திய
உயிரற்ற ஜீவன்கள்......
இதயங்கள் பிடுங்கி
எறியப்படும் இடத்தில்
இறப்புகள், இழப்புகள் விலையில்லை.

இரும்புக்குழல் கம்பிகளின் நடுவே
குருதிச் சேறிறங்கி
இந்தத்
தேசச் சிறைக்குள் வாசமிருந்தோம்.
மனங்கள் இங்கே
ஏதிலிகளாய்த் திரியும்.
பகலில்
பல்லிரவுகள் குடிகொள்ளும்.
எதிர்காலம்
மலைப் பாம்பின் அகல்வாயில்.

---

# வழியெங்கள் அடிதொடரும்

**இளந்திரையன்**

தன்னாட்சி உரிமை அம்சங்கள்
எம்மாலே ஆளப்பட
எல்லோரினதும் விரைவு வேண்டும்.
கண்ணீர், வியர்வை, குருதித் துளிகளால்
காவியமெழுதிடுவோம்.
அதனால்
எமக்கெமக்கென்று துப்பாக்கிகள்...
எமக்கெமக்கென்று கருவிகள்...

விடுதலைக்காய்
அடியெடுத்து முன்நடக்க,
புதியதொரு
வழியெங்கள் அடிதொடரும். □□

ஒரு மனிதன் உடல் உள சமூக ஆத்மிக நிலைகளில் தான் அடையக்கூடிய அதி உன்னத நிலையில் இருக்கும்போது, அவன் ஆரோக்கியமான மனிதன் என்று கருதப்படுகிறான். மேலே கூறப்பட்ட நான்கு நிலைகளும் ஒன்று மற்றொன்றில் தங்கி நிற்கும் தன்மை வாய்ந்தன. ஆகவே ஒரு மனிதனுடைய உள ஆரோக்கியம் பாதிக்கப்படும்போது அவனது உடல் நிலை, சமூக நிலை போன்றனவும் தாக்க முறுகின்றன. இதற்கு மறுதலையாக ஒருவனது உடல் நிலை, சமூக நிலை அல்லது ஆத்மிக நிலை ஆட்டம் காணும்போது, அவனது உள்ளம் பாதிக்கப்படுவதும் தவிர்க்க முடியாததாகிறது.

மனித மனத்தின் செயற்பாடுகளையும், மனித நடத்தையையும் பற்றி ஆராயும் அறிவியல் உளவியல் என்று கூறப்படும். (கிரேக்க மொழியில் *Psyche* - என்றால் மனம், *logus* என்றால் விஞ்ஞானம்) விஞ்ஞானம் என்பது வெற்றிகரமாகச் செய்து முடிக்கப்பட்ட செய்முறைகளின் தொகுப்புத்தான் என்று பிரெஞ்ச் தத்துவஞானி வலேரி கூறுவார். ஆகவே உளவியலும் பரிசோதனை ரீதியாக நிரூபிக்கப்பட்ட கருத்துக்களையே முன்வைக்கும்.

எமது உடல் ஆரோக்கியமாக இருப்பதற்கு எப்படி அதனுடைய முக்கியமான சில தேவைகள் நிறைவேற்றப்படவேண்டுமோ அதே போலவே எமது உள்ளமும் அதனுடைய தேவைகள் பல நிறைவேற்றப் படும்போதுதான் ஆரோக்கியமாக இருக்கும். உள்ளத்தின் தேவைகள் பலவாக இருப்பினும் உணவு, உடை, உறையுள் பாதுகாப்பு, அன்பு போன்றவை மிக அடிப்படையான சில தேவைகளாகும். இத்தேவைகளைத் திருப்திகரமாக நிறைவேற்றுவதில் சிக்கல்கள் ஏற்படும்போது, உளம் தனது ஆரோக்கியத்தை இழந்து விடக்கூடிய அபாயம் தோன்றுகிறது.

எமது மனம் கடலில் மிதக்கும் பெரிய பனிக்கட்டி போன்றது என்று உளவியல் அறிஞர்கள் கூறுவர். கடலின் மேற்பரப்பில் தெரியும் நனவு மனம் மொத்த அளவில் பத்திலொரு பகுதி மாத்திரமே. மிகுதியான பத்தில் ஒன்பது பகுதியும் நனவிலி மனம் என்ற பெயரில் வெளியே தெரியாது கடலின் உள்ளே அமிழ்ந்து கிடக்கும். ஆகவே சில சமயம் நனவு மனம் ஆரோக்கியமாய்




## சமூகத்தின் உள ஆரோக்கியத்தைப் பேணுவதில் கலைகளின் முக்கியத்துவம்

**கோகிலா மகேந்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதாகப் பாவனை காட்டிக்கொண்டி ருக்கும்போதும் நனவிலி மனம் பாதிக்கப் பட்டு மூழ்கிக் கிடக்கும்.

உள்ளத்தின் பாதிப்பானது நரம்புத் தொகுதி மூலமும் அகஞ்சுரக்கும் சுரப்பிக ளின் தொகுதி மூலமும் உடல் பாதிப்பு களைத் தோற்றுவிக்கும். அவை தலையிடி, தலையம்மல், கபாலக்குத்து, பார்வை மங் கல், கண்குத்து, காதுகேளாமை, வாய் உலர்தல், விழுங்கமுடியாமை, மூச்சுத்திண றல், மூச்சுவாங்கல், படபடப்பு, நெஞ்சு நோ, வயிற்றுநோ, நாரிநோ, கைகால் விறைப்பு, மலச்சிக்கல், குளிர், அடிக்கடி சிறு நீர் கழிக்கும் உணர்வு, சல எரிவு போன்ற பல்வேறு குணங்குறிகளாக வெளித் தோற்றலாம். தொய்வு, எக்சீமா, அல்சர், உயர்குருதி அமுக்கம், இதயநோய் போன்ற வருத்தங்களுக்கும் உள ஆரோக்கியப் பாதிப் புக்கும் தொடர்பு இருக்கலாம்.

ஆரோக்கியமாக இருந்த உள்ளம் திடீ ரெனத் தனது சமநிலையை இழந்து போவ தற்குப் பெரும்பாலும் நெருக்கீடுகளே கார ணமாகும். இந்த நெருக்கீடுகள் இழப்புக் களாக அல்லது மாற்றங்களாக இருக்கும். கணவன் அல்லது மனைவியின் இறப்புப் போன்ற ஒரு வலிமையான நெருக்கீடு நூறு புள்ளியைப் பெறுமாயின், நெருங்கிய ஒரு குடும்ப அங்கத்தவரின் பிரிவு எழுபத்தைந்து புள்ளியையும், வருத்தம் அல்லது காயம் ஐம் பத்துமூன்று புள்ளியையும், வேலை இழப்பு நாற்பத்தேழு புள்ளியையும், பொருளாதார மாற்றம் முப்பத்தெட்டுப் புள்ளியையும், வேலைத்தல நெருக்கடி இருபத்து மூன்று புள்ளியையும், வீடு மாற்றம் இருபது புள்ளி யையும், நித்திரை நேர மாற்றம் பதினாறு புள்ளியையும் பெறும் என்று உளவியல் அறிஞர் கணித்துள்ளனர். ஆகவே ஒரு மனிதனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட நெருக் கீடுகள் ஒரே சமயத்தில் தோன்றும்போது நெருக்கீட்டுப்புள்ளியின் பெறுமானம் திடீரென்று உயர்ந்துபோக அவனது உள ஆரோக்கியம் பாதிக்கப்படும் நிலை தோன்று கிறது. போர்ச்சூழ்நிலை ஒன்றில் இவ்வா றான நெருக்கீடுகள் பல ஒரே சமயத்தில் நடைபெறுவதற்கான நிகழ்தகவு பெருமள வுக்கு அதிகரிக்க, உள ஆரோக்கியத்தை இழப்போர் எண்ணிக்கையும் அதிகரிக்கும் நிலை தோன்றுகிறது.

உள ஆரோக்கியப் பாதிப்பு வீச்சு, மனதை ஒரு நிலைப்படுத்தும் தன்மைக் குறைவு அல்லது மறதி என்ற தாழ் எல்லை யிலிருந்து, உளமாய நோய் (*Psychosis*) என்ற உயர் எல்லை வரை பல படிகளில் காணப்படலாம். இவற்றில் உளமாய நோய்ப்படிக்குப் போய்விட்டவர்களுக்கு மட்டுமே கட்டாயமான உள மருத்துவச் சிகிச்சை தேவைப்படும். ஏனைய படிகளில் நிற்பவர்கள்தான் எண்ணிக்கையில் ஏராள மானோர். இவர்களைப் பழைய நிலைக்கு மீளக்கொணர்வதற்கும், இதுவரை உள ஆரோக்கியத்தைப் பேணி வைத்திருப்பவர் கள் எதிர்காலத்தில் அதை இழந்துபோகா திருப்பதில் உதவி செய்வதற்கும் கலைகள் மிகவும் உதவும்.

ஒருவருக்கு ஒரு இழப்பு அல்லது மாற் றம் ஏற்படும் போது அவர் அதைப்பற்றிப் பலமுறை நினைத்துக் கொள்கிறார். அந்த நினைவுகளின் எண்ணிக்கையைக் குறைக்க முடியுமாயின் உளப் பாதிப்பைக் குறைக் கலாம். இந்த இடத்தில் எமக்கு மிகவும் உதவக்கூடிய ஒரு விதி உண்டு. ''மனித மனம் குறித்த ஒரு கணத்தில் இரண்டு விஷயங்களைப் பற்றி நினைக்க முடியாது'' என்பதே அந்த விதி. ஆகவே வேறொரு விஷயத்தில் மனித மனத்தை ஆழமாகச் செலுத்தி விடுதலே இழப்பைப்பற்றி அது அடிக்கடி நினைக்காதிருக்கச் செய்யக்கூடிய மிக இலகுவான வழிமுறையாகும் (*Keep occu pied*).

''வேதனைப்படுவதன் இரகசியம் என்ன வென்றால், நீங்கள் சந்தோஷமாக இருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறீர்களா இல்லையா என்று ஆராய்வதற்கான ஒய்வு நேரம் உங்களுக்குக் கிடைப்பதுதான்'' என்று பேர்னாட்ஷா கூறுவார்.

ஆராய்ச்சியாளர்களுக்கு உளப்பாதிப்பு நோய்கள் வருவது மிக அருமை என்று சொல்லுகிறார்கள் - ஏனென்றால், அவர்களுக்கு வேறு விடயங்களைப்பற்றி யோசிக்க நேரம் இருப்பதில்லை.

உலக யுத்தகாலத்தில் சேர்ச்சில் ஒரு நாளுக்குப் பதினெட்டு மணிநேரம் வேலை செய்தார். ''உலக யுத்தம் சம்பந்தப்பட்ட பொறுப்புக்கள்மீது நீங்கள் கவலைப்படுவதில்லையா?'' என்று நிருபர் ஒருவர் கேட்டதற்கு, ''அவ்வாறு கவலைப்பட எனக்கு நேரமில்லை'' என்றார் அவர். உண்மைதான்! கவலைப்படுவதற்கு நேரம் தேவை என்பது மிக முக்கியம்!

மரியன். ஜே. டக்ளஸ் என்ற அமெரிக்கருக்கு ஐந்து வயது நிரம்பிய அழகிய மகள் இறந்து போனாள். இந்த இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியாது அவர் மிகவும் தத்தளித்தபோது அடுத்த நெருக்கீடு வந்தது. ஏறத்தாழப் பத்து மாதத்தின் பின் அவர்களின் கடைசி மகளும் இறந்து போனாள். உள்ளம் மிகவும் பாதிக்கப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டார் டக்ளஸ். ஆறு மாதங்கள் ஓடிவிட்டன. ஒரு விநாடி கூட டக்ளஸின் மனம் நிம்மதிப்படவில்லை. அதிர்ஷ்ட வசமாக, இறந்துபோன இரு பிள்ளைகளுக்குமிடையில் ஒரு மகன் இருந்தான். நாலுவயதான சுட்டிப்பையன். அவன் ஒருநாள் தந்தையாரைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டான். ''நீங்கள் எனக்கு ஒரு வள்ளம் கட்டித்தர வேண்டும்'' என்பது அவன் கோரிக்கை. டக்ளஸ் மறுத்துப்பார்த்தார். பையனோ விடாக்கண்டன். அரை குறை மனதோடு வள்ளம் கட்டத்தொடங்கினார். வேலைமுடிவதற்கு மூன்று மணித்தியாலங்கள் எடுத்தன. முடிந்தவுடன் அவர் ஒளிவெள்ளம் பாய்ச்சப்பட்டது போல் ஒன்றைப் புரிந்துகொண்டார். கடந்த ஆறுமாதகாலத்தில் அவர்மனம் சற்று அமைதியாக இருந்தது, இந்த மூன்று மணி நேரத்திலும்தான்! உடனே அவர் தான் செய்யக்கூடிய வேலைகளை அட்டவணைப் படுத்திக் கொண்டார். காலைமுதல் நள்ளிரவு வரை வேலை செய்தார். மிக இலகுவாகத் தனது உளப்பாதிப்பிலிருந்து விடுதலை பெற்றார்.

இந்த வேலை ஒருகலையாக இருக்கும்போது இரட்டிப்புநன்மை ஏற்படுகிறது. ''கலை என்பது வாழ்வை அழகு படுத்துவது'' என்று சொல்லுவார்கள். கவிதை எழுதுவது, கதை எழுதுவது, ஓவியம் வரைவது, நாடகம் நடிப்பது போன்ற செயற்பாடுகளில் ஒருவர் ஈடுபடும்போது, தேவையற்ற துன்பமான ஒரு நினைவிலிருந்து மனம் விடுபடுகிறது மட்டுமல்லாமல், இந்தக் கலை ஒரு மகிழ்வான சிந்தனையையும் எழுப்புகிறது. அதற்கு அந்தக் கலையின் அழகுணர்வு காரணமாகிறது. கலைகளைச் செய்வோரில் மட்டுமன்றிக் கலைகளைப் பார்ப்போரிலும், கேட்போரிலும் இந்த உணர்வு தொற்றிக் கொள்கிறது.

நத்தைகள் தமது உடலுக்கு ஊறு வருவதைத் தடுப்பதற்கு ஒரு பாதுகாப்புக் கவசம் வைத்திருக்கும். அதனை 'ஓடு' என்போம். எமது உடலுக்கு வெளியே அவ்வாறான உடற்கவசங்கள் இல்லை. ஆனால் உள்ளம் தனது பாதுகாப்பிற்குப் பல கவசங்களை வைத்திருக்கின்றது. இவை தற்பாதுகாப்புக் கவசங்கள் எனப்படும்.

நெருக்கீட்டு நிலைமைகளை நாம் நேரடியாக எதிர்கொள்ளும் சூழல் தோன்றும் வரை இந்தப் பாதுகாப்புக்கவசங்களைக் கையாளலாம். இவற்றில் ஒன்று இடப்பெயர்ச்சி (*Displacement*) எனப்படும். ஒரு வழியில் செலுத்தப்படமுடியாத அல்லது திருப்திப்படாத உணர்வுகள் இன்னொரு வழியில் திசை திருப்பப்படுதலே இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடப்பெயர்ச்சி ஆகும். இவ்வாறு திசை திரும்பும் வழி ஒரு கலையாக இருக்குமா யின் அது மிகச்சிறப்பாகும். ஒரு இறப்பு மூலம் ஏற்படும் துன்பத்தை ஒரு ஓவியத் திலோ, இசையிலோ அல்லது நாடகத் திலோ வெளிப்படுத்தும் போது மனம் பெருமளவு அமைதிப்படுவதுடன் அப்போது தோன்றும் கலையும் மிகச் சிறப்பானதாக உருவாகிறது. கலையின் வெற்றி மனதுக்கு ஒரு புதிய உற்சாகத்தை ஏற்படுத்துகிறது. சிறந்த ஆங்கிலக் கவிஞனான மில்ரன் குருடராய் இருந்ததும், நல்ல இசை இணைப்பாளர் பித்தோவன் ஒரு செவிட ராய் அமைந்ததும், ஹெலன் ஹெலர் பார்வையும் கேள்தகைமையும் ஒருங்கே இழந்திருந்ததும், மிகச் சிறந்த நாவலா சிரியர் டோல்ஸ்டோய் பெருந்துன்ப வாழ்வு வாழ்ந்ததும், கூர்ப்புக் கொள்கையின் தந்தை டார்வின் குறைபாடுள்ளவராய் இருந்ததும் இந்த இடத்தில் நினைவு கொள்ளத்தக்கன. துன்பம் பல சமயங்களில் அருமையான விடயங்களை உருவாக்கு கிறது. கலைகள் பல சமயங்களில் துன்பத் தைத் துடைத்து எறிந்து விடுகின்றன.

உளநலம் பாதிக்கப்பட்டோருக்கான சிகிச்சை முறைகளில் வெளிப்பாட்டுச் சிகிச்சை முறை என்பது ஒன்று *(Expressive thercpy)* இங்கே உளநலம் பாதிக்கப்பட் டவர்கள் தமது உணர்வுகளை நாடகம், கதைசொல்லல், எழுதுதல், சித்திரம் தீட்டு தல் போன்ற கலைகளின் மூலம் வெளிப்ப டுத்தத் தூண்டப்படுகிறார்கள். இந்த வெளிப்பாடு மட்டுமே அவர்களுக்கு ஒரு சிகிச்சையாய் அமைந்து விடுகிறது.

நெருக்கீட்டு நிலைகளில் இருப்போரும் தமது உணர்வுகளை வெளிக்கொணர வழி இருக்க வேண்டும். கூட்டுக் குடும்ப அமைப்பு, கிராம அமைப்புப் போன்றவை குலையாமல் இருந்தபோது நெருங்கிய உறவினர்களும் அயலவர்களும் ஒருவரில் ஒருவர் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்த னர். ஒருவர் பாதிக்கப்பட்டால் உடனி ருத்தல், பக்கத்தில் நிற்றல், தொடுதல், தட்டிக்கொடுத்தல், தாங்குதல், அரவ ணைத்தல் போன்ற ஆறுதல் செயற்பாடு களை உறவினரும் நண்பரும் செய்தனர். இன்றைய போர்ச் சூழலில் கூட்டுக் குடும்ப அமைப்புகள், கிராம அமைப்புகள் சிதறி உள்ளன. மனிதர்களின் 'தனிமை' அதிகரித் திருக்கிறது. நம்பிக்கைக்குரியவர்கள் அருகில் இல்லை. இந்த நிலையில் தனிமை யிலும் ஆறுதல் அளிப்பவை கலைகளேயா கும்.

ஒரு மனிதனின் ஆளுமை அவனது பிள்ளைப் பராயத்திலேயே (ஐந்து வயதுக் கிடையில்) தீர்மானிக்கப்பட்டு விடுவ தாய்க் கூறப்படுகிறது. ஒருவன் ஸ்திரமான ஆளுமை உள்ளவனாய் இருக்கலாம் அல்லது ஸ்திரமற்ற ஆளுமை உள்ளவனாகலாம். எப்படி இருப்பினும் அவனது உள ஆரோக் கியத்திற்குச் சாந்த வழி முறைகள் *(relax-ation techniques)* மிகவும் பயனுள்ளவை என்று கூறப்படுகிறது. இந்த நோக்குட னேயே யோகாசனப் பயிற்சிகளும் செய்விக் கப்படுகின்றன. மனதில் இறுக்கம் வரும் போது உடல் தசைகள் யாவும் இறுக்க மடைகின்றன. ஆகவே உடற்றசைகளை எம்மால் தளர்வாக வைத்திருக்க முடிந் தால், மனமும் அமைதியடைகிறது. நாடகப் பயிற்சிப் பட்டறைகளில் நடிப்புப் பயிற்சி யின் ஒரு கூறாக இத்தகைய தசைத் தளர் நிலைப் பயிற்சிகள் செய்யப்படுவதுண்டு. மனதை ஒரு முகப்படுத்தும் பயிற்சிகளும் அங்கு செய்யப்படும். ஆகவே நாடகக் கலைஞர்கள் இயல்பாகவே உள ஆரோக் கியத்துக்கான பயிற்சிகளைப் பெறும் வாய்ப்பு ஏற்படுகிறது.

உளவியல் சிகிச்சை முறைகளில் மிக முக்கியமான இன்னொருமுறை குழுச் சிகிச்சை முறையாகும். இம்முறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரேமாதிரிப் பாதிக்கப்பட்டவர்கள் ஒன்றாக வைத்துச் சிகிச்சை அளிக்கப்படுவார்கள். சித்திரவதைக்குட்பட்டோர், விதவைகள் போன்றோருக்கு இத்தகு குழுச்சிகிச்சைகள் அளிக்கப்படும். இவர்கள் ஒன்று கூடி இருக்கும்போது, ஒருவரின் துயரத்தை ஒத்த நிலையில் இருக்கும் மற்றொருவரோடு பகிர்ந்து கொள்கிறார்கள். இதன் மூலம் ஒரு மன ஆறுதல் ஏற்படுகிறது இதனை ஒத்த ஒரு உள ஆரோக்கியத்தன்மை, பலர் ஒன்று சேர்ந்து கூட்டுக்கலைகளில் ஈடுபடும் போதும் ஏற்படுகிறது. இதற்கு உதவுகின்ற ஓர் அருமையான கலை நாடகம் ஆகும். பல கலைஞர்கள் ஒன்று சேர்ந்து ஒரு கலைப்படைப்பில் ஈடுபடும்போது கூட்டுணர்வு, பாதுகாப்பு, அன்பு போன்ற ஆரோக்கியமான உணர்வுகள் விருத்தி பெறுகின்றன.

'வெறும் கதிரைச் சிகிச்சை முறை' என்பது உளவியல் சிகிச்சை முறைகளில் பிரசித்தமான ஒன்று. உள நலம் பாதிக்கப்பட்டவர் குறிப்பிட்ட ஒரு நபரோடு கோபம் கொண்டிருக்கிறார் என்றால், அந்நபர் அந்த வெறும்கதிரையில் இருப்பதாகப் பாவனைசெய்து, இவர் தமது உள்ளக் குமுறலைக் கொட்டித்தீர்ப்பார். வெறுங் கதிரையுடனான இந்த உரையாடல் மூலம் ஒரு வேளை அவரது பிரச்சினை கூடத் தீர்க்கப்படலாம். நாடகப்பட்ட றைகளிலும் நாடகங்களிலும் இவ்வாறான சந்தர்ப்பங்கள் நிறைய வாய்க்கும். அது நடிகருக்கும் பார்ப்போருக்கும் மருத்துவப்பணி புரியும்.

எமது சடங்காசாரங்கள் எல்லாம் சிகிச்சைப் பண்பு கொண்டவை என்று கூறப்படுகிறது. நாடகம் உலகெங்கிலும் சமயச் சடங்குகளிலிருந்தே தோன்றியது என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

திடீரென்று ஓர் இழப்பைப் பெற்றுக் கொண்டவர் உடனே அந்த இழப்பை ஏற்றுக்கொள்ளமாட்டார். அதிர்ச்சியுற்ற நிலையில் அதனை மறப்பார். *(Denial & Shock)* அதிர்ச்சியில் இருந்து விடுபட்டவுடன் ஆத்திரப்படுவார். அந்த ஆத்திரம் தனக்குள்ளேயே திருப்பப்பட்டு மனச்சோர்வு அடைவார். தனக்குள்ளும் சமூகத்தோடும் இறைவனோடும் பேரம்பேசிக்கொள்வார். இறுதியாக மெதுவாக அந்த இழப்பை ஏற்றுக்கொள்வார். இழப்பை மறுதலிப்பதில் இருந்து இழப்பை ஏற்றுக்கொள்வதான இந்த நீண்ட நடைபாதையில் கலைகள் அவருக்குப் பெருமளவு உதவும்.

ஒல்லாந்தில் உள்ள 15ம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்றில் ''அது அப்படித்தான் வேறு மாதிரி இருக்கமுடியாது'' *(It is so, It cannot be otherwise)* என எழுதப்பட்டுள்ளது. ஐந்தாம் ஜோர்ஜ்மன்னர் தனது பக்கிங்ஹாம் அரண்மனையின் நூலகச் சுவரில், ''புளித்துப்போன பாலுக்கும், அகப்படாத சந்திரனுக்கும் அழாதிருக்க எனக்குக் கற்பிப்பாய்'' என எழுதியிருந்தார். ஆம். இழப்பை ஏற்றுக்கொள்வது உள ஆரோக்கியத்துக்கு மிக முக்கியமானது. கலை இதனைச் சிறுகச் சிறுகச் செய்து விடும்.

ஆகவே போர்ச்சூழலில் கலைகள் பல எழவேண்டும். ஆனால் அவை போதனைக் கலைகளாய் அமையாது நடப்பியல் கலைகளாயும் சாதனைக்கலைகளாயும் இருக்க வேண்டும். □□

''ஒருவிடுதலை இயக்கம் தனித்து நின்று போராடி விடுதலையை வென்றெடுத்ததாக வரலாறுஇல்லை. ஒருவிடுதலை இயக்கத்தின் பின்னால் மக்கள்சக்தி அணிதிரண்டு எழுச்சிகொள்ளும் பொழுதுதான் அது மக்கள் போராட்டமாக, தேசியபோராட்டமாக முழுமையும் முதிர்ச்சியும் பெறுகிறது. அப்பொழுதுதான் விடுதலையும் சாத்தியமாகிறது.''

—தமிழீழத் தேசியத்தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இத்தனை இடைவெளி எப்படி வந்தது

பாவரசன்

இத்தனை இடைவெளி
எப்படி வந்தது
குட்டக் குட்டக் குனிபவராயே இருந்து
நாங்கள்
உரிமைகள் கேட்டோம்
நாற்பது, ஐம்பது, அறுபது எனவெல்லாம்
குனிந்து நின்றே உரிமைகள் கேட்டோம்
அத்தனை இடைவெளி
எமக்கும் அவர்க்கும்.

குடுக்க மறுத்தவர்
நாம்
குனிந்து நின்றதால்
எங்கள் தோள்களில் குந்தி இருந்தே
சவாரி செய்தனர்.

பொறுமை இழந்து நாம்
நிமிர்ந்து கொண்டதால்
பொலிஸ் ரோந்துகள், ராணுவ ரோந்துகள்
குறையத் தொடங்கின
இன்று பொலிஸ் நிலையங்கள், இராணுவமுகாம்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்து வருகுது.
இவர்கள் அற்ற பிரதேசம்கூட
நிறைய இங்கே உருவாகி விட்டது.

எந்தப் படையணி என்றாலென்ன
திரும்பிச் செல்வது...?
வடக்குக் கிழக்கிற்கு
வந்த அளவில் இருப்பதில்லை.

படையை விட்டு ஓடியோரெல்லாம்
'பணிஸ்மென்' இன்றித் திரும்பிச் சேரலாம்
பதினெட்டுவயது பதினேழாகி...
பத்தாம் வகுப்பு ஐந்தாகக் குறைந்து...
லஞ்சம், களவு, பகற்கொள்ளைக்கெல்லாம்
அனுமதி இருந்தும்
வேலையின்றி அலைவோர் கூட்டம்
மலைபோலிருந்தும்
அரசு நன்றாய் அழுது அழைத்தும்
ஆளணி சேர்வது
அருகிப் போகுது
இத்தனை இடைவெளி
எப்படி வந்தது?

பெருகிவரும் இசைவெள்ளம்
பேரானந்தம்தருகிறது!

"ஸ்கைறோஸ்" வழங்கும்
இனிமையான பாடல்கள்"

"ஸ்கைறோஸ்"
SKYROSE
இல, 1, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் நல்லதொரு
மருந்துக்கடை

க. செ. கைலாசம்பிள்ளை அன்சன்ஸ்

76, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

மருந்துச்சரக்கு வியாபாரத்தில்
நீண்டகால அனுபவம் நிறைந்தவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் முற்றத்துப் பூக்கள்

ச. நகுலேஸ்வரன்



காலை நேரம், இள வெயில், காலைக் குளிரை, மெல்லக் கரைத்துக் கொண்டிருந்தது. பிள்ளைகள் பள்ளிக் கூடம் போகும் அவதி. வளர்ந்தவர்கள் தங்கள் அலுவல்களைக் கவனிக்கச் செல்லும் அவதி. காலை நேரத்து இந்த அவதிகளுக் கிடையில்; வானத்தில் இரைச்சல் கேட்டது. அண்ணாந்து பார்ப்பதற் கிடையில், நின்ற இடத்திற்கு நேரேயே உயரத்தில் இயந்திரப் பறவைகள் இரண்டு இரைந்து வட்டமடித்துக் கொண்டிருந்தன. அதிலொன்று திடீரெனத் தலையைக் குத்தித் தாளப் பதிந்தது. முகத்தைக் கூராக்கி நிலத்தைக் குத்திப் பிளக்க வருவது போல, சீறிக்கொண்டு வந்தது.

''குத்துறான், குத்துறான்''

''போடப்போறான், போடப்போறான்.''

''வெளியாலை வாங்கோ, வீட்டுக்குள்ளை நிக்காதேங்கோ.''

- பயப்பீதியில், ஒலிக்கும் அலறங்கள்.

இடி இடித்தது போல வெடியோசை - நிலம் அதிர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகை மண்டலம், வானத்தை நோக்கி மேலெழுந்தது.

இரும்புச் சிதறல்களும், உடைந்த கற்களும், எழும்பிப் பறந்தன. பக்கமெங்கும் சிதறி ஓடுகள் உடையும் ஒலிகள். கைமரங்கள் சிதறிச்சிம்புகளாகின. சுவர்கள் இடிந்து சரிந்தன. மரங்கள், கிளைகள் அறுந்தும், சிதைந்தும், முறிந்து விழும் ஒலிகள்.

அந்தச் சின்ன ஊர் முழுவதும் அதிர்ந்து நிலை குலைந்து நின்றது.

அம்புலன்சின் அலறல் ஒலி, வாகனங்களின் விரைவு, காயப்பட்டவர்கள், படுகாயமடைந்தவர்கள், உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பவர்கள் எல்லோரையும் சுமந்து கொண்டு வாகனங்கள் விரைந்து கொண்டிருந்தன.

இன்னும் கொஞ்சம் ஆழமாகி இருந்தால் தண்ணீர் கண்டத்தையே கண்டிருக்கும். வைரம் பாய்ந்த சுண்ணாம்புக் கற்கள் பாளம் பேர்ந்து சுற்று வட்டமெங்கும் தூக்கியெறியப்பட்டுக் கிடந்தன.

பெருத்த நிலப்பரப்பை விழுங்கி நிற்கும் பெரிய கற்குழி. அந்த இடிபாடுகளுக்குள் மனித உடல்களைத் தேடித் துருவியெடுத்தார்கள்

அந்த இடத்துக்குச் சற்றுத்தள்ளி, தன் உயிரைக் காத்துக் கொள்ள குப்புற விழுந்து படுத்திருந்த இளம்வாலிபன் ஒருவன், எழவேயில்லை. வெடி அதிர்வில் அவன் இதயத்துடிப்பு ஒடுங்கி விட்டது. அவன் உடல் அப்படியே மண்ணில் குப்புறக் கிடந்தது.

வெடித்துப் பறந்த இரும்புச்சில்லு, பசுமாடொன்றின் வயிற்றை வெட்டிப் பிளந்தது. குடல் சரிந்து மாடு மண்ணில் புரண்டு கிடந்தது. வெடிச் சத்தத்திற்கு வெருண்டெழும்பி உன்னிக் கயிறறுத்த எருத்தன்களின் மூக்குகளில் இரத்தம் வடிந்தது.

தோட்டத்தில் தண்ணீர் மறித்த தோட்டக்காரனின் (ஆடு) சதையை சன்னமொன்று பிய்த்துச் சென்றது. வாய்க்காலில் வந்த தண்ணீர் மறிப்பின்றிப் பாத்திகளின் வரம்புடைத்துப் பெருகியது. காலில் வடிந்த இரத்தம், பெருகி நிற்கும் தண்ணீரெங்கும் சுளித்துக் கிடந்தது.

துலாக்களின், ஆடுகால்களின் உரசல் ஒலிகள் அடங்கிக்கிடந்தன. சூல் முற்றி உறைகள் கனத்துக் கலகலத்து ஒலி எழுப்பி நின்ற பயிர்க் கூட்டங்களெல்லாம், ஒலி அடக்கித் தலை கவிழ்த்து நின்றன.

அந்த சின்ன ஊரெங்கும் சோகம் கப்பி, அமைதி கனத்துக் கிடந்தது. சிதறிக் கிடந்த மிருகங்களின் சதைகளைக் கொத்தித்தின்ன காகங்கள் கூடிக்கரைந்தன. இன்னமும் அறியாதவையெல்லாம் அறியட்டுமென உரத்துக் கரைந்தன குருத்தெலும்புகளும், பூப்போன்ற சதைகளும் கொண்ட உடல் உறுப்புக்கள் சின்னமையப் பெட்டியொன்றுக்குள் வைக்கப்பட்டு, இறுக்கி மூடப்பட்டு, துணி ஆர்க்கைகளால் கட்டப்படுகிறது.

அந்த இற்றுப்போன துண்டங்களில் ஐந்துவயதே நிரம்பிய சங்கரின் உயிர் பிரிந்த உடலைக் காண வேண்டிய துன்பம். அந்தத் துன்பத்தைத் தாங்கமாட்டாமல், அவள் பெற்றோர்கள், கூடியிருந்தவர்கள் கதறி அழுதனர். சங்கரியின் தந்தை சுந்தரத்தை அவனுடைய நண்பனை தியாகு அணைத்துத் தேற்றினான். தியாகுவின் தோள்களில் சாய்ந்த சுந்தரத்தின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. சங்கரியின் தாய் கதறி அழுதாள். அவளைச் சுற்றிவளைத்துத் தாங்கிநின்றவர்களால் அவளைக்கட்டுப்படுத்த முடியவில்லை. எல்லோருங்கதறி அழுதனர்.

எப்பவும் சொந்தப் பேத்தியைப்போல சங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரியை வாரியணைத்து சீராட்டிக் கைத்தீன் ஊட்டும் பூரணம் பெரியம்மா, அந்த இடத்திலேயே விழுந்து புலம்பி அழுது புரண்டாள்.

''ஐயோ, கடவுளே அம்மன் சிலைபோலை யல்லே இருந்தது. சோறூட்டின வட்டில் ஈரம் இன்னமுங் காயேல்லை; முத்தமிட்ட முகத்தில் எச்சில் இன்னமும் உலரேல்லை; வாரியணைச்ச நெஞ்சுக்கூட்டு குளிர் இன்னும் அழியேல்லை. ஐயோ கடவுளே, அதுக்குள்ளை பொசுக்கெண்டு போயுட்டுதே.''

சங்கரியின் அந்த மதாளிப்பு, அவளுக்கு ஐந்து வயதுதான் என்றால் யாரையுமே நம்பவிடாது. மாம்பழம் வாங்குபவர்களை பழம் அவள் நிறம் போல வாய்க்கவில்லையே, என வருத்தப்படவைக்கும். அப்படி ஒரு மாநிறம். கட்டுச்சரைக்குள் கிடந்து முற்றிய மாதுளம்பழம்போல உப்பிய கன்னங்கள்; அதில் அளந்து கீறியது போல சின்னவாய். சிரிப்பும் கலகலப்பும் எவரையும் வசீகரிக்கும்; வாரி அள்ளத் தூண்டும். இந்த வசீகரங்கள், அழகுகள் எல்லாம் சிதைக்கப்பட்டுவிட்டன.

அடக்கத்திற்கான அலுவல்கள் நடந்து கொண்டிருந்தது. சங்கரியின் பிரிவு தியாகுவின் மனதையும் பெரிதும் கலக்கிவிட்டது. உள்ளுக்கும் வெளிக்குமாக ஓடி ஆடி அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்த தியாகுவிற்கு ஒரேமனப் பதட்டம். வாசல் பக்கம் திரும்பிய தியாகு முகப்பில் அவன் மனைவி கௌரி வருவதைக் கண்டு அவளடிக்கு விரைந்தான்.

''கௌரி ... நீங்கள் தனியா வாறியள், மஞ்சு எங்கை.''

''பக்கத்து வீட்டு ரங்கனை பள்ளிக்கூடம் அனுப்பியிருக்கிறன்: மஞ்சுவைக் கூட்டிக் கொண்டுவந்து அவை வீட்டிலை வைச்சிருப்பினம்.''

''மஞ்சுவுக்கு அவை இதைப்பற்றி ஏதுஞ் சொன்னால் ..''

''இல்லையப்பா அவை ஒண்டுஞ் சொல்லாயினம். இண்டைக்குப் பின்னேரம் தானும் சங்கரியும் கோயிலுக்குப் போறம் எண்ட எண்ணத்தோடை தான் காலமையும் பள்ளிக்கூடம் போனது. ஒண்டாய் திரிஞ்சதுகள், ஓடிவிளையாடினதுகள். அது நேற்றையான் நினைப்பிலையே இருக்கும்.''

''நாளைக்கு நானும் மஞ்சுவும் நல்லூருக்குப் போறம். நாளைக்கு இரண்டு பேரும் நல்லூருக்குப் போறம். கோண் ஐஸ்கிறீம், கச்சான், காப்பு, பொம்மை எல்லாம் வாங்குவோம் தியாகு அங்கிள், தியாகு அங்கிள், இண்டைக்கு இராவைக்கு மஞ்சு என்னோடையே இஞ்சை இருக்கட்டும். நாளைக்கு நாங்கள் இங்கையிருந்தே நல்லூருக்குப் போவம்.''

''பாவம் மஞ்சு, சின்னஞ் சிறிசு. சங்கரிக்கு நடந்ததைக் கேள்விப்பட்டால் அதுகின்ரை மனம் என்ன பாடுபடும். பயத்திலை அதுகின்ற மனம் பாதிச்சுப் போம். அதுக்கு ஏதாவ தொண்டெண்றால் ..''

''இல்லையப்பா வீணா நீங்கள் யோசிச்சுக் கவலைப் படாதேங்கோ. நான் உடனை போறன்.''

இதையெல்லாம் மஞ்சுவுக்குத் தெரியாமல் எப்படி மறைப்பது? அந்தக்குழந்தை இதைப்பற்றி அறியாமல் இருக்க என்ன செய்வது? தியாகுவிற்கு ஒரே மனப் பதட்டம். கௌரிக்கு தியாகுவை நினைக்க ஒரே கவலையாக இருந்தது. அவள் வீட்டுக்குத் திரும்பினாள்.

ஏறுவெய்யில் சுட்டெரித்துக் கொண்டிருந்தது. வெய்யிலின் உக்கிரத்தை யாரும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. எப்பவும் இறுகிக்கிடக்கும் அந்த வீதியின் இரும்புப்படலைகள் இளகிக்கிடந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலுக்கு, வாசல் ஆட்கள் கூடி நின்றனர். கைகளில் இளைக்கயறு, தென்னங் குருத்தோலைகள். வீதி நீளத்திற்குத் தோரணங் களைத் தொங்க விடும் ஆயத்தங்கள்.

தோள்களில் இடுப்புக் களில் சுமைகள் கனக்க, சீருடைகளில் கோடிழுத்த கழுத்துப்பட்டிகள் நீண்டு தெரிய அணிவகுத்து, இந்த வீதியால் உலாவரும் மழலைப்பட்டாளத்தில், சிட்டொன்று கோரமாய் குதறப்பட்ட சோகம்- அந்த சோகத்தில் இளகிவிட்ட மனங்கள். வீதியில், வீட்டு முகப்பில் ஆளரவங் கண்ட வுடன் அலறிக்குரைக்கும் நாய்களெல்லாம் எங்கோ கோடிகளுக்குள் ஒளிந்து கிடந்தன. வீட்டு முற்றங் களிலெல்லாம் சின்னஞ்சிறி சுகள் பூக்களைக் கொய்து கொண்டிருந்தன. கூரிய கொடுக்குகளுடன் நின்ற றோசாச் செடிகளில் கிடந்த மலர்கள் மொட்டுக்களை யெல்லாம் கொய்தெடுத்து விட்டார்கள்.

நீள, அகலத்தில் சீனச் சுவர் போல நீண்டு கிடந்த கரும்பச்சைநிற இச்சோறா நிரைகளில் இரத்தத் துகள் களாய் குவிந்துகிடந்த குலக்குகளெல்லாம் சுற்றி வளைத்தெடுக்கப்பட்டு விட்டன.

எங்கோ எட்டாத உயரத்தில் காவிநிறத்தில், இரத்த சிவப்பில் பூத்தி ருந்த செவ்வரத்தைகள். பூத்துகுலுங்கி உயரக்குடி லாக நின்ற மல்லிகைகள் எல்லாம் மூளியாகக்கிடந் தன. விறுக்கு விறுக்கென் றொரு வேகத்தில் கொண்டு வந்தகைப்பைகளெல்லாம் நிரம்பி வழிந்தது.

மஞ்சு தூரத்தே வருவது தெரிந்தது. பக்கத்தில் அவருடன் இரண்டு மூன்று பிள்ளைகள். அவர்களுக்குப் பின்னால் ரங்கன். பிஞ்சு முகங்கள் வெய்யிலில் வாடிச் சோர்ந்து கிடந்தன. கால்கள் துவண்டு நடை தளர்கிறது. ஏந்திய கைக ளில் படுக்கையாய் புத்தகப் பைகள். அதற்கு மேலே வண்ணமலர்கள் குவிந்து கிடக்கின்றன. அந்தப் பூக்கு வியலில் பட்டுத்தெறிக்கும் நிறக்கதிர்கள் கோடை வெய்யிலின் வெப்ப அலை களை இடைவெட்டி,அந்தப் பிஞ்சுமுகங்களுக்கு ஒரு புதுப்பிரகாசத்தைத் தந்து கொண்டிருந்தது. சோர்ந்த முகங்களுக்குள்ளும் ஒரு இறுக்கம். தளர்ந்த நடை களுக்குள்ளும் ஒரு உறுதி.

தாயை நெருங்கிவிட்ட மஞ்சு;

''அம்மா . சங்கரி...''

கௌரி பதைபதைத்துப் போனாள். மஞ்சுவை வாரி அணைத்து தோள்மீது சாய்த்தாள். மஞ்சு வாய டைத்துப்போனாள். அவள் சொல்ல வந்ததெல்லாம் அப்படியே அவள் தொண்டைக்குள் அடங்கி விட்டது.

பூக்களெல்லாம் மண் ணில் சிதறின. இருவருக்கு மிடையே அகப்பட்டு நின்ற புத்தகப்பை மெல்ல வழுகி கீழே விழுந்தது.

கௌரியின் கண்கள் கண்ணீரால் கனத்தது. மூச்சு முட்டி நெஞ்சறைகள் விம்மிப் புடைத்தன. பற்கள் கெட்டித்து நின்றன. அவளால் மூச்சடக்க முடிய வில்லை. கனத்த கண்களின் இமைகளை இறுக்கமுடிய வில்லை. மூச்சுடைந்து போகின்றது. கொட்டிச் சிதறிக் கண்ணீர் வழிகிறது.

''அம்மா... அம்மா... அழதீங்கம்மா.''

அந்தப் பிஞ்சு முகங் களின் கண்களும் கசிந்தது.

திகைத்துப் போன கௌரி, ''ஓமோம் மஞ்சு நான் அழயில்லை.'' மஞ்சு வைக் கீழே இறக்கிவிட்டு, கௌரி சேலைத்தலைப் பால் கண்களைத் துடைத் தாள்.

''அம்மா.... அம்மா... எங்களுக்கு மாலைகட்டித் தாங்கம்மா, நாங்க சங்கரிக் குப் போடவேணும்.''

கௌரி குந்தியிருந்து பூக்களைப் பொறுக்கியெடுத் தாள். பூவுதிர்ந்த மொக்கு கள், இதழ்கனத்த மலர்கள், கூர்மொட்டுக்கள் - புத்தகப் பையின் பாரத்தில் அழுந்திய பூக்கள் சிதைந்து கிடந்தன. அந்தப் பூவுடலங்களின் ஊனம் பட்டு மண்ணுங் கசிந்து கிடந்தது. விம்மிப் பொருமிப் பூக்களைப் பற்றிக் கிடந்தது. அந்த ஈரலிப்பில் கௌரியின் நகக் கண்கள் சில்விட்டுப் போனது- மின்சாரம் பாய்ந் ததுபோன்ற அதிர்ச்சி, முள்ளந்தண்டெங்கும் சிலிர்த்தது, நாடி நரம் பெங்கும் பரவி அப்படியே அவளைக் கல்லாக இறுக வைத்தது. □□



# துப்பாக்கி தூங்காது

சுஜோ

நான் தூங்கினாலும்
என் துப்பாக்கி தூங்காது.
எப்பாக்கியம் கிடைத்தாலும்
இத்துப்பாக்கி தூங்காது.

என் நண்பன் தந்துபோன துப்பாக்கி
அவன் உயிரும் அங்குதானே வாழ்கிறது,
நாளை நான் அணைந்து போனாலும்
என் உயிரும் அங்குதானே வாழும்.

இத்துப்பாக்கி தூங்காது
யார் தூங்கினாலும்
இத்துப்பாக்கி தூங்காது.

துப்பாக்கி கைப்பிடியில்
நண்பனின் கைச்சுவடுகள் பதிந்ததனால்
என் கைவிரல்களுடனேயே
துப்பாக்கி இறுகிக்கொள்ளும்
நட்பினால் இறுகிக்கொள்ளும்.

எதிரியைக் கண்டவுடன்
என் நெஞ்சம் கனலாகி
துப்பாக்கி அனலாகும்.

என் துப்பாக்கியில்
''சிங்கிலில்'' நண்பனின் இதயத்துடிப்பை
நான் கேட்பேன்.
''ஒட்டோவில்'' அவனது குரலோசையை
நான் ரசிப்பேன்.

நாளை நான் அணைந்தாலும்
இத்துப்பாக்கியை தூக்க
என் சகோதரன் வருவான்! வருவான்!!

தூங்காது! தூங்காது!!
தூங்கவே தூங்காது
இத்துப்பாக்கி தூங்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ☐ பலசரக்குப்பொருட்கள்
- ☐ பாதணிகள்
- ☐ நவீன டிசைனில் உடைகள்
- ☐ சில்வர் பொருட்கள்
- ☐ அழகுசாதனங்கள்
- ☐ விளையாட்டுப் பொருட்கள்
- ☐ பிளாஸ்ரிக் வகைகள்
- ☐ மற்றும் வீட்டுப் பாவனைக்குரிய அனைத்துப் பொருட்களையும்

இராசமணியில் வாங்குங்கள்.

வாடிக்கையாளரைக் கவருவதிலும், அவர்களின் மனநிறைவுக்கு பொருட்களை வழங்குவதிலும் மகிழ்வடைகின்றோம்.

# இராசமணி களஞ்சியம்

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பா, என்னில உங்களுக்கு நிறைய அன்பிருக்கா?''......

சங்கீதாவின் கேள்வி அவளது தந்தையை நிலைதடுமாற வைக்க வில்லை. கண்கள் மட்டும் நிரம்பின. அடுத்தகணம் அது நிலத்தில் விழுந்து சிதறும்.

சங்கீதா கலகலவெனச் சிரித்தாள். சிரிப்பின் பின்னே செலுத்தப் போகும் சொல்லம்புகள்......

''அப்பா, எனக்கொரு ஆசையிருக்கப்பா; அடுத்த சண்டையில என்ர 'வொடி' வரும்;என்ர'வொடி'ய மானிப்பாயில நான் படிச்ச பள்ளியில அஞ்சலிக்கு வைக்கோணும்; என்னுடைய பள்ளித்தோழர்கள் என்னை சுற்றிநின்று பார்த்து......

செய்வீங்களாப்பா?......''


நெஞ்சைத் தடவிக் கொண்டார். குழந்தையாய் இருந்தபோது அவள் நெஞ்சில் உதைத்த உதைகள்; அடம் பிடித்து அழுது நெஞ்சில் உறங்கிய நாட்கள்...

இன்று இதயத்தைக் குத்தி ஆழம் பார்க்குமளவிற்கு வளர்ந்து விட்டாளா?......

''என்னப்பா பதிலைக்காணோம்''

''ஏனம்மா அதுக்கிடேல சாகோணுமெண்டு விரும்பிறாய்; நீ இன்னும் நிறையச் சண்டையள் பிடிக்கோணுமெண்டதுதான் என்ர ஆசை''

'அப்பாவுக்கு என்னைவிட தேசப் பற்றா?' சங்கீதா விக்கித்துப் போனாள். அப்பாவின் ஆசையை மனதுள் போட்டுக்கொண்டவளாய், ''அப்பா, போட்டுவரட்டுமா? நான் கேட்டதை மறந்திடாதேங்கோப்பா.'' துள்ளி எழுந்து நிமிர்ந்த நடையோடு புறப்பட்டாள் சங்கீதா.



# முற்றத்துமண்

**மணலாறு விஜயன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ □ □

முற்றத்து மண்ணிலே ஆழமாய் பதிந்த மகளின் பாதச்சுவடுகளை இன்றும் தேடும் அவளது தந்தை .....

மணலாற்றுச் சமரிலே தடம்பதித்ததும்,... அழுவதற்குக்கூட சக்தியின்றி மகளது வீரஉடலை பாடசாலையில் அஞ்சலிக்கு வைத்ததும்... கற்பனையல்ல. கடந்துபோன வரலாறு.

எங்கிருந்தோ வந்து எம்மண்ணுக்காய் மடிந்த அந்த வீரமகளின் நினைவோடு, 'இன்னும் நிறையச் சண்டைகள் நீ செய்யோணும்' என்று வேண்டிக்கொண்ட அந்த தந்தையின் நினைவோடு...... நூற்றிப்பத்தாவது வயதிலும் தான் பிறந்த மண்ணிலேயே தன் உயிர் பிரியவேண்டுமென விரும்பிய ஒரு வீரமூதாட்டியின் கதை காணும் துடிப்போடு வேகமாக நடந்து கொண்டிருந்தேன்.

அடர்ந்த காடு. கார்த்திகை மாத மழையிலும், பனியிலும் குளித்து சிரித்து நிற்கும் பசுமை..... பெரும் மந்துகளால் மூடுண்டு கிடக்கும் வயற் புலங்களின் நடுவே சிலிர்த்து காய்த்து நிற்கும் விளாத்தி மரங்கள் இவற்றையெல்லாம் ஊடறுத்து வளைந்து நெளிந்து செல்லும் பாதை...... வண்டில் தடங்களைக்கண்டு ஆண்டுகள் பலவாகிப்போன பாதையது.

யானை உலர்த்திகளும், பன்றியின் உழவும் பாதையில் மலிவாய்க் கிடந்தன. சூரியன் இன்னும் சரியாக உச்சிக்கு வராததால் காட்டு விலங்குகளின் ஆரவாரமே மிகுதியாயிருந்தது.

எந்த இடத்திலும் இராணுவம் பதுங்கிக்கிடந்து சுடலாம். கொடிய காட்டுவிலங்குகள் தாக்கலாம் ஆனால் இவையெல்லாம் பெரிதாக மனதில் படவில்லை.

மண்ணை நேசித்த ஒரு வீரத் தாயை, தள்ளாத வயதிலும் வீரத்தையும் மானத்தையும் இழக்க விரும்பாத ஒரு பாட்டியை, கட்டிய மனைவிக்கு மேலாய் தாயை நேசித்து, தாயோடு தாய்மண்ணை அணைத்த ஒரு வீரமகனை பார்ப்பதற்கல்லவா செல்கின்றேன்.

நினைவுகளும், நிகழ்வுகளும், வீரமும், தியாகமுமாய் இருக்க, பக்கத்தே விடுதலை வீரர்கள் துப்பாக்கியோடு வர அச்சம் எப்படிவரும்.

தூரத்தே நாலைந்து தென்னை மரங்கள் அசைந்தாடுவது தெரிந்தது. பட்டிக் குடியிருப்பு அழகான கிராமந்தான். மந்துக்காடுகள் அதன் அழகை மறைத்துக்கொண்டுள்ளன. தன் மண்ணின் மக்களை அந்த கிராமதேவதை இழந்துவிட்டாள்.

கடைசியாக அந்தக் கிராமத்தில் இருந்த உயிர்?......செம்பாத்தைதான். கடந்த வாரம் வந்தபோது பனங்கொட்டை பொறுக்கி பாத்தி போட்டுக் கொண்டிருந்தாள். மடிப்பு விழுந்த உடல். சுருக்கேறிய நெற்றி. நூற்றிப்பத்து வயதிலும் உறுதியாகக் கிடந்த பற்கள். குழிவிழுந்த கண்ணில் தெரிந்த ஒளி........ இன்னும் பல ஆண்டுகள் வாழக்கூடிய உறுதியான நடை. செம்பாத்தை தன் இளமைக் காலத்தில் நிச்சயமாக பட்டிக் குடியிருப்பு கிராமத்தை ஒரு கலக்கு கலக்கியிருப்பாள்.

தமிழர் பண்பாட்டை தொட்டு நின்ற வட்டவீடு. நாற்புறமும் திண்ணை கொண்ட மற்றுமோர் பெரியவீடு. மால். நீண்ட நாட்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேயப்படாததால் அவை அனைத்தும் பிய்ந்து அலங்கோலமாய்க் கிடந்தன. முற்றத்தில் வரலாறு கூறும் கிழுகை மரமொன்று நின்றது. என்வயதில் அக்கிழுகையைப்போல் வேறு எங்கும் காணவில்லை. செம்பாத்தைக்கும் அந்தக் கிழுகைக்கும் ஒரு வயதிருக்கும்.

மூத்தமகன் கொண்டுவரும் சாப்பாட்டை சாப்பிட்டுவிட்டு வீட்டு வாசலிலிருந்து முற்றத்துமண்ணை அளைவதும், புல்லுப்புடுங்குவதும் தான் அவளது நாளாந்தக் கடமை.

முற்றத்துப் புல்லைத்தான் அவளால் புடுங்க முடிந்ததேயொழிய சுற்றி முளைத்த காடுகள் கொஞ்சங் கொஞ்சமாக வீடுவளவை விழுங்கிக் கொண்டிருந்தன.

''அம்மா, நெடுக காட்டுக்க இருந்து என்னண செய்யிற, வா வீட்ட போய் இருப்பம். ஒரு நாளைக்கு ஆமி வந்தாலும் சுட்டுப்போடுவான்'' —மூத்தமகன் கந்தையா தினமும் தாயிடம் இந்த வேண்டுதலை விடுக்கின்றான். எண்பது வயதைத் தொடும் கந்தையாவால் தாயை தனியே விட்டு பிரிந்திருக்க முடியவில்லை. செம்பாத்தைக்கோ தான் பிறந்த மண்ணை பிரிந்திருக்க முடியவில்லை.

''எனக்கொருபிடிசோறு கொண்டுவாறது கஸ்டமாய்க் கிடந்தால் நில்லு. நான் என்ரபாட்ட பாத்துக்கொள்ளுவன்'' — கந்தையா தாயை வரும்படி கேட்டபோதெல்லாம் அவள் சொன்னபதில் இதுதான். ஒருசமயம் எம்விடுதலை வீரர்கள் ''பாட்டி, இஞ்ச இருக்காதேண ஆமி வந்து சுட்டுப்போடுவான்; வாண ஜீப்பில கொண்டுபோய் மோன் வீட்ட விட்டுவிடுறம்.'' என்று கேட்டதற்கு-

''ராசா நான் பிறந்த மண்ணிடா ...... மோன, இது நான் வளர்ந்த வீடிடா ........ என்ன கொண்டு போகாமல் கொன்றுபோட்டு போங்கோடா...'' என்றெல்லாம் ஒப்பாரி வைத்து அழுதாளாம்.

செம்பாத்தையை பார்க்கும் ஆர்வ மிகுதியால் வந்த களைகூடத் தெரியவில்லை. அதிகாலையில் சரமாரியாக கேட்ட துப்பாக்கி வேட்டுக்கள் ... மனவேகத்தோடு நடைவேகத்தையும் அதிகரிக்கச் செய்திருந்தது. செம்பாத்தையின் வீட்டுமுற்றத்துக்குள் வந்து விட்டோம். அங்கே... ..

தாயை அணைத்தபடி மகன்...... மண்ணை தன் கரங்களால் இறுகப் பற்றியபடி செம்பாத்தை ..... ஆம், செம்பாத்தை அளைந்த முற்றத்து மண் சிவந்து கிடந்தது.

மாலையில் சிங்கள வானொலி கதறியது.

''பட்டிக்குடியிருப்பு பிரதேசத்தில் விடுதலைப் புலிகளுடன் இன்று அதிகாலை ஏற்பட்ட கடும் மோதலில் இரு விடுதலைப் புலிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களில் ஒருவர் பெண்போராளி என்பதும் குறிப்பிடத்தக்கது.''

செம்பாத்தையையும் அவளது மகனையும்தான் அவர்களால் அழிக்க முடிந்தது. முற்றத்து மண்ணோடு கலந்து போன அவர்களின் குருதி......

□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகிப்பு மீறியெழும்

கருணாகரன்

நிச்சயமாக
மூவாயிரம் அடிக்குமேல்
முகில்களுக்கிடையில் ஊளையிடும் விமானங்களில்
கொலைகாரர்கள் திரிகிறார்கள்
காலவரையற்ற ஊரடங்குச் சட்டங்களிலும்
போர்ப் பிரகடனங்களுக்குள்ளும்
சிக்குண்ட இந்தநாட்களில்
ஒரு நல்ல கவிதை...
அதை யாராவது எழுதட்டும்
ஆனால் இது இப்போது மிகமுக்கியமானது



நான் உழைக்கின்றேன்
இந்தக் கோடையிலும்
எதிர் காற்றிலும்
நீயும் நன்றாக வேலைசெய்கின்றாய்
எனது உழைப்பால்
வீடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிச்சம்

எப்பொழுதும் சோலையான
தோட்டமும் எங்களுக்கிருந்தது
பனையெல்லாம் நுங்கு தள்ளி.....
சோளகம் வீசிய அந்த நாளொன்றில்
எங்கள் வீடும் தோட்டமும்
இரக்கமின்றி அழிக்கப்பட்டது
நாங்கள் விரட்டப்பட்டோம்
நாங்கள் ஓடிவரும்போது
எங்களின் பூனைக்குட்டிகள்
இடிபாடுகளுக்குள் ஈனமாகக் கத்திக்கேட்டது
அந்த வேளையில்
பார்வை குறைந்த அம்மாவின்
மூக்குக் கண்ணாடியைக் கூட எடுக்க முடியாமற் போயிற்று.
துக்கமாகவும்
கடுங்கோபத்துடனும்
இந்த நிகழ்ச்சியை நான் சொல்லும்போது
பலரும் சொல்கிறார்கள்
தங்களுக்கும் இப்படி நிகழ்ந்ததென்று
இன்றைக்கும்
இராணுவத்தின் மணம்
மூக்கை எரிக்கிறது
அதன் காட்டுமிராண்டிக் கூச்சல்
காதுகளைக் கிழிக்கிறது
மாறி மாறி குண்டுகளைப் போட்டுச்செல்லும்
விமான ஓட்டிகளை
கோபம் பொங்கியெழ
வெறுமனே திட்டுவதையும்
முஸ்டியை ஓங்கிக் குத்துவதையும்
இனியும் நான் விரும்பவில்லை
பறிக்கப்பட்ட
எனது வீடு எனக்கு வேண்டும்
அந்த வீட்டையும், தோட்டத்தையும்
நான் பெறவேண்டும்
உணவு
உடை
உறையுள் என்பவற்றுடன்
பாதுகாப்பும் மிகமிக அவசியமாகிவிட்டது
கவிதையின் அனுபவிப்பு
சினிமாவின் ரசனை; ஓவியத்தில் ஈடுபாடு
என்பதெல்லாம் இதனுள் அடங்குகிறது
அந்தப் பூனைக் குட்டிகளின்
ஈனக் குரலை
என்னால் சகிக்க முடியவில்லை □□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகம், யாகம், ஞானம்.
'ஊருக்குழைத்திடல் யோகம் — நலம்
ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்
போருக்கு நின்றிடும் போதும் — உளம்
பொங்கல் இல்லாத அமைதி மெஞ்ஞானம்''
—மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

□


*உள்ளூர் உற்பத்தியைப் பாவனைக்குக் கொள்ளுங்கள்*
*மில்க்வைற் சவர்க்கார மேலுறைகள் / மில்க்வைற்சலவைத்*
*தூள் வெற்றுப்பக்கற்றுகள் தந்து அன்பளிப்புப் பெறுங்கள்*




**மில்க்வைற்**
**525/2 காங்கேசன்துறைவீதி,**
**யாழ்ப்பாணம்.**


சினிமா — புதியதொரு கலைவெளிப்பாடாகும்.
நல்ல கலைப்படம்—
மனித ஆளுமையை மேலும் வளர்க்கிறது.

□

சினிமா — வீடியோப்படங்களுக்கு


**'ரெலி வொய்ஸ்'**
**TELE VOICE**
*Vidio Complex*
*K. K. S. Road.*
*Chunnakam.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சோற்றுடன் மட்டும் மனிதர்கள் வாழ்ந்துவிடுவதில்லை. உணவு, உடை, உறையுள் போன்றவை மனிதனின் அடிப்படைத் தேவைகளாக இருப்பினும், இவை மட்டுமே போதுமாய் இருந்துவிடுவதில்லை. இவற்றிற்கு அப்பால் மனித வாழ்க்கைக்கு எண்ணங்கள் தேவைப்படுகின்றன. மனிதன் தன் இருப்பிற்கான தேவையையும் எவ்வாறு அதை நிறைவு செய்து கொள்வது என்பதையும் அறிந்திருத்தல் வேண்டும். எண்ணங்கள் மலராத மனித வாழ்க்கை வெறும் அர்த்தமற்ற வாழ்க்கையாகப் போய்விடும்.

# சமூகத்தின் அரங்கு

**க. சிதம்பரநாதன்**

‘உணர்ச்சிகள்’ பற்றி நாம் என்ன சொல்லலாம்? உணர்ச்சிகள் அற்ற மனிதன் வெறும் சடமாக, பிசாசாக மாறிவிடுகின்றான்.

எண்ணங்களும், உணர்ச்சிகளும் அற்ற மனித வாழ்க்கையால் என்ன பலன்? எண்ணங்களும், உணர்ச்சிகளும் மனிதர்களுக்கு சூழலை ஊடுருவிப் பார்க்க உதவிசெய்து அவர்களது வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குகின்றன.

மனிதர்கள் தமது உணர்ச்சிகள், எண்ணங்கள், அநுபவங்கள் என்பவற்றை ஒன்றாகக் கூடி தமக்கிடையே பகிர்ந்து கொள்வதற்கான இடமாக அரங்கு தொழிற்பட முடியும். அரங்கின் தொடர்பு இரத்தமும் சதையுமாக இருப்பதால் அதாவது ஆற்றுபவர்கள், பார்வையாளர்களிடையே உயிருள்ள தொடர்பு நடைபெறுவதால் மேற்கூறிய பகிர்ந்து கொள்ளல் சாத்தியமாகிறது.

எனவே அரங்கு மனித சமூகத்தில் கட்டாயம் நிலவவேண்டிய தேவை உள்ளது. வெறும் அலங்காரம் அல்லது மகிழ்வளிப்பு என்பவற்றிற்கு அப்பால் அரங்கின் பணி உள்ளது. இதன் காரணமாகத்தான் அநேகமான அடக்குமுறை ஆட்சியாளர்கள் அரங்கைத் தடைசெய்து விடுகின்றனர். இன்று சிறிலங்காவில் அரங்கு சுயாதீனமாகத் தொழிற்பட முடியாத சூழ்நிலை உள்ளது. ஆனால் குறிப்பிடத்தக்களவில் நமது பிரதேசம் விடுவிக்கப்பட்டுள்ளமையால் இங்கு அரங்கு தன் முழு வீரியத்துடன் செயற்படக்கூடிய சாத்தியம் உள்ளது. நாம் இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிட்டு விடக் கூடாது.

ஆனால் நம்மிடையே அரங்கு ஒரு மகிழ்வளிப்புக் கலையாக மட்டும் கருதப்படுகின்ற போக்கு நிலவிவருகிறது. அதாவது அரங்கை ஒரு பொழுதுபோக்குச் சாதனமாகவே அநேகர் கருதுகின்றனர். இந்நிலையை மாற்றுவற்கு அரங்கச் செயலாளிகள் பணிபுரிய வேண்டும். உண்மையில் அரங்கு ஓர் ஆயுதம். மனித மனங்களில் எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் மலர்விக்கும் தூண்டியாக அரங்கைப் பயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்த முடியும். மனித மனங்களில் நல்ல எண்ணங்களும், உணர்ச்சிகளும் மலரும் போதே உண்மையான சமூக மாற்றம் ஏற்பட முடியும். ஒரு மனப்புரட்சி, ஒரு விழிப்பு நிலை ஏற்படுதல், ஒரு சமூகம் மாறுவதற்கு அத்தியாவசியமான முன் நிபந்தனையாகும். இதனை சமூகப் புரட்சியாளர்கள் மறந்துவிடக்கூடாது.

எனினும் புரட்சியாளர்கள் அரங்கை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதில் அவதானத்துடன் செயல்புரிய வேண்டும். மக்களுக்குச் சலிப்பேற்படுத்துகிற ஒரு முயற்சியாக இது அமைந்துவிடக்கூடாது. அவ்வாறு அமைந்து விடுமெனில் அது ஓர் எதிர் விளைவையே தோற்றுவிக்கும். ஏனைய நாட்டு அரசியற் போராட்டங்களில் இவ்வாறு நடைபெற்றுள்ளது எனவே நாம் அவதானமாக இக் காரியத்தில் பணிபுரியவேண்டும்.

அரங்கு மக்களுக்கானதாக ஆக்கப்படும்போது அரங்கின் அடிப்படையான கவர்ச்சி அம்சங்களுக்குப் பாதிப்பில்லாத முறையில் அரங்கு மீள்கண்டுபிடிப்புச் செய்யப்பட வேண்டும். அரங்கின் கவர்ச்சி மையங்கள் எவையென்பதை நாம் ஆய்ந்து அறிந்துகொள்ள வேண்டும். படைக்கப்படும் அரங்கு பார்வையாளரைக் கவரக் கூடியளவிற்கு அழகியல் வன்மையுடையதாக இருக்க வேண்டும். அவ்வாறு இருப்பின் மட்டுமே பார்வையாளர்களை ஓர் கலை அனுபவப் பரப்பினுள் இழுத்துவர முடியும். அந்த அனுபவப் பரப்பினுள் இருந்தபடி ஆற்றுபவர்கள், பார்வையாளர்கள் தமது எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் பகிர்ந்துகொள்ள முடியும். இந்த அனுபவப் பகிர்வானது வெறுமனே ஆற்றுபவர்களிடமிருந்து பார்வையாளர்களுக்கான ஒரு வழிப்பாதையாக மட்டும் இராமல், பார்வையாளர்களிடமிருந்து ஆற்றுபவர்களுக்கும், ஆற்றுபவர்களிடையேயும், பார்வையாளர்களிடையேயும் ஏற்பட முடியும், ஏற்படவேண்டும். இந்நிலையானது இறுதியில் ஆற்றுகையில் கலந்து கொள்ளும் அனைவரிடமும் ஒரு சங்கம நிலையை உருவாக்கும்.

அநேக அரசியல் அரங்குகள், மக்களிடையே பிரச்சாரத்தை மேற்கொள்வதில் தீவிர எண்ணங்கொண்டு அல்லது அவசரப்பட்டு மேற்கூறிய அழகியல் அம்சங்களில் போதிய கவனம் செலுத்தாமல் விட்டுவிடுவதன் காரணமாக அவர்களது முயற்சி — அது எத்தகைய தீவிரமும், நேர்மையுணர்வும் கொண்டிருந்தாலும் — இறுதியில் அவர்கள் நேசிக்கும் மக்களிடமே அந்நியப்பட்டுவிடுகிறது. சர்வதேச அனுபவங்களைக் கவனித்தால் இது தெளிவாகத் தெரியும்.

அநேகமாக 'மக்களுக்காக' என்று உருவாக்கப்பட்ட அரங்குகள் 'தெருவெளி அரங்க' வடிவத்தை எடுப்பதைப் பலநாடுகளின் அனுபவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. வழமையாக அரங்கநாட்டம் உடைய பார்வையாளர்களை விடப் புதியபார்வையாளர்களைப் பரந்துபட்ட மக்களிடம் இருந்து உருவாக்க வேண்டும் என்ற நோக்கம் 'தெருவெளி அரங்கு' தோன்றுவதற்கான அடிப்படைக் காரணியாகும். ஒரு சனரஞ்சக அரங்கு என்பதன் அடிப்படையே இதுதான். அதாவது ஒரு சனரஞ்சக அரங்கு இயலுமானவரை ஆகக் கூடுதலான பார்வையாளர்களைக் கவரக்கூடிய அரங்காக இருத்தல் வேண்டும். தெருவெளி அரங்கு மக்களை நாடிச்சென்று மக்கள் கூடுமிடங்களில் 'கண்ட வெளிகளில்' நிகழ்த்தப்படுகின்ற அரங்காகும். இந்த வகையில் தெருவெளி அரங்கு பரந்துபட்ட மக்களை அணுகும் வாய்ப்புள்ள ஒரு சாதகமான வடிவமே.

ஆனால் துரதிட்டவசமாக அநேகமான தெருவெளி அரங்குகள் (நம்மிடையே இவை தெருக்கூத்து என்று அழைக்கப்படுகின்றன)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயலில் அதிகூடிய விவரணத்தன்மை உடையதாக இருந்துவிடுவதும் உண்டு. இதன் காரணமாக இத்தகைய தெருவெளி அரங்குகள் பார்வையாளர்களுக்குச் சலிப்பை ஊட்டுகின்றன. இதையே சாட்டாக வைத்துக்கொண்டு நாடகம் கற்றறிந்த 'பெரியோர்கள்' தெருவெளி அரங்கை ஒரு கலைவடிவமாகவே கருதுவதில்லை. ஒரு சமூகமாற்றப் போராட்டத்தில் அரங்கு ஒரு கருவியாகப் பயன்படமுடியும் என்பதையே நிராகரிக்கும் அளவிற்கு சென்றுவிடுகிறார்கள். ஏனைய நாடுகளில் இந்த நிலைமை சமூகமாற்ற அரங்க இயக்கத்தினரை அச்சுறுத்தும் அளவிற்கு உண்டு. அந்நாடுகளில் உள்ள நியம அரங்குகள் புலம் வாய்ந்தவையாக உள்ளன. ஆனால் எமது மண்ணில் அத்தகைய ஒரு பலம்வாய்ந்த நியம அரங்கு இல்லை. இங்கு மக்களுக்கான மாற்று அரங்கே நியம அரங்காக தொழிற்படும் நிலைமைதான் உண்டு. இது ஒரு சாதகமான நிலைமை.

இச் சாதகமான நிலைமையை மனதிற் கொண்டு உற்சாகத்துடன் பணிபுரிய சமூகமாற்ற அரங்கச் செயலாளிகள் முன்வர வேண்டும். அழகியல் வன்மையுடைய அரசியல் அரங்கை உருவாக்கமுடியாதென்பதல்ல. ஒரு வெற்றிகரமான சனரஞ்சக அரங்கு அரசியற் கருத்துக்களை அரங்கத் தன்மையற்ற வெற்றுத்தகவல்களாக வெளிப்படுத்தாமல் வேடிக்கையும், மகிழ்வளிப்பும் கலந்த அரங்க நிகழ்ச்சியாக வெளிப்படுத்த வேண்டும். உண்மையில் ஒரு சனரஞ்சக அரங்கின் சாரமாக கல்வியினதும், மகிழ்வளிப்பினதும் பிரிக்கமுடியாத சேர்க்கை இருக்கவேண்டும். மக்களுக்கான அரங்கை உருவாக்க விழைபவர்கள் இச் சிறுவிடயத்தை மனதில் இருத்திக்கொள்ளவேண்டும்.

□□

□●□


மக்களின் தேவையை மனதில்கொண்டு
எப்பொழுதும் நல்லபொருளை
விற்பதில் நிறைவடையும்


S. T

தி. உஷாந்தன்
வர்த்தக நிலையம்
(பலசரக்குப்பொருட்கள்)
கோண்டாவில் சந்தி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புயலோடு வெள்ளம்
கடலோடு வந்தால்
அவள் என்ன செய்வாள்?
பெற்றெடுத்த பெருமகவைக்
காப்பாற்ற வேண்டி
பதறுகின்ற நெஞ்சு
உதறுகின்ற கைகால்
அவள் ஓடிப்போறாள்.

எதிரிபடை ஏவுகின்ற
செல்விழுந்து வெடிக்க
போராளி களம் அமைத்துப்
போர் தொடுத்து நிற்க



## அவள் ஓடிப்போறாள்

தா. இராமலிங்கம்

மண்மூடை அரண் சிதைந்து
சிதறி உள்ள வீதி
மரம் முறிந்து கிளைகள் எல்லாம்
குவிந்துள்ள வீதி
உடல் சிதறி இரத்தத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்குகிற வீதி
சனங்கள் எல்லாம் விழுந்தடித்து
ஓடுகின்ற வீதி!

ஒவ்வொன்றாய்த் தாண்டி
அவள் ஓடிப் போறாள்.

மூச்செறிய
முகம் எல்லாம் வேர்த்தொழுக
விழி நிறைந்த கண்ணீர்
வழி மறைத்து நிற்க
துடைத்து எறிந்து கொண்டு
அவள் ஓடிப் போறாள்.

உடுத்திருக்கும் ஆடை
தடக்கி நடை தளர்த்த
இழுத்து இடுப்பில் செருகி
அவள் ஓடிப்போறாள்.

தலை குலைந்து காற்றில்
அலைந்து முகம் மறைக்க
ஒதுக்கி மயிர் தள்ளி
அவள் ஓடிப் போறாள்!

□●□

அழகும் - நினைவும் மனிதனோடிணைந்தவை
அழகான படங்களுக்கும்
நினைவில் நினைக்கும் படங்களுக்கும்
பிரேம்போடுவதற்கும்
கண்ணாடிகளைப் பெறுவதற்கும்

**கவிதா பிக்ஸர் பலஸ்**
*297A, பலாலி வீதி,*
*திருநெல்வேலி தெற்கு.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான மலசரக்குப்பொருட்களை
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சிவகுமார் ஸ்ரோர்ஸ்
282, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுகமான வாழ்வு
மனிதனின் பல ஆற்றல்களுக்கு
வழிவகுக்கிறது.

உங்களுக்குத் தேவையான மருந்துச்சரக்குகளைப்பெற

வே. கந்தையாபிள்ளை அன் சன்ஸ்
*49 (187), K. K. S. வீதி,*
*யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிக்கும்

**இயல்வாணன்**

வருசம் பிறந்திட்டுது, இது புதுசுதான். இதப் போலை ஒவ்வொரு வருசமும் புதுசுதான். ஆனா, பஞ்சாங்கந்தான் அதை அறுபதாய்ப் பிரிச்சு, அறுபது பேர் வைச்சு, அறுபது வருசத்துக்கொவ்வொண்டாகவருசம்திரும்பத் திரும்ப வருமெண்டு சொல்லுது. இந்தப் பஞ்சாங்கத்தைப் பற்றியே ஆரும் இப்ப நினைக்கிறேல்லை. பஞ்சாங்கங்கள்கூட, ஒவ்வொண்டும் ஒவ்வொரு போக்கிலை போய்க் கொண்டிருக்குதுகள். அதாலை, அதுகூட இப்ப பெரிசாய்த் தெரியுறேல்லை.

நான் பிறந்ததிலையிருந்து இப்பவரைக்கும் பதினெட்டு வருசத்தைக் கண்டிட்டன். இருந்தாலுமென்ன?

அம்மா ஒவ்வொரு வருசமும் புதுப் புதுச் சட்டையள் எடுத்துத் தருவா. அக்கம் பக்கத்து வீடுகளிலை பொங்கல் நடக்கும். கோவிலுகளிலை திருவிழாக்கள் நடக்கும். நானும் தங்கச்சியும் புதுப் புதுச் சட்டையளோடை கோவிலுகளுக்கும், சொந்தக்கார வீடுகளுக்கும் போவம். வெடிகொளுத்தியும், கிட்டி, கிளித்தட்டு விளையாடியும் திரிவம். அவ்வளவுதான்!

எனக்குச் சின்னனாய் இருக்கேக்கை ஒண்டுந் தெரியாது! அம்மா உடுப்பு எடுத்துத் தருவா. பலகாரங்கள் சுட்டுத் தருவா; பூவாணம் வெடியெல்லாம் வாங்கித் தருவா. எங்களுக்குச் சந்தோசமாயிருக்கும். துள்ளிக் கொண்டு திரிவம்.

அம்மா கூட நாளிலை வெள்ளைச் சீலைதான் உடுப்பா. மாமி மாதிரியோ, மற்றப் பெரிய பொம்புளையள் மாதிரியோ அம்மா சிவப்புப் பொட்டுப் போட மாட்டா. கழுத்திலை கையிலை நகை நட்டொண்டும் போட மாட்டா. ஒரு இடத்துக்கும் வரவும் மாட்டா. கேட்டால் ''நான் வரேல்லை'' என்பா. ''ஏன் வரேல்லை?'' எண்டால் ''அப்பிடித்தான்'' என்பா. நாங்கள் நெடுக ஆய்க்கினைப்படுத்தினால் — ''நான் வரக் கூடாது. அப்பா இல்லாட்டால் நான் கோயில் குளமொண்டுக்கும் போகக் கூடாது. நீங்கள் கவனமாய்ப் போட்டு வாங்கோ'' என்பா. அப்பா சாமியிட்டைப் போயிட்டாரெண்டு தான் அம்மா சொன்னா.

நான் கொஞ்சம் வளந்தாப் பிறகுதான் தெரியும்- அப்பா செத்ததும், அப்பா இல்லாமல் அம்மா கஸ்டப்பட்டதும், அந்த நேரம் வெளியிடத்திலையிருந்து இஞ்சை வந்து வேலை செய்த பொம்பிளைப் பிள்ளையளுக்கு அம்மா சமைச்சுச் குடுத்ததும், அந்த வருமானத்திலை எங்களை வளர்த்ததும்...... இன்னும் இன்னும்......

அதுவரையிலை அந்த அக்காமார் வருவினை; சாப்பிடுவினை; ஏதாவது கேட்பினை; போவினை. அவ்வளவுதான்!

இப்ப நினைக்கேக்கை மனதுக்குள்ளை ஏதோ குமையுது. ''அவள் நெருப்புத்திண்டு உங்களை வளத்தவள். நீங்கள் ஏதோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை உணந்து படிச்சு ஒரு தொழில் துறையிலை சேந்திட்டியளெண்டால் தான் அவள் பாடுபட்டதுக்குப் பலனாகும்'' எண்டு நாகம்மா ஆச்சி நெடுகச் சொல்லுறது இப்பதான் முழுசாய்ப் புரிஞ்சிருக்குது.

இனியாவது நாங்கள் அம்மாவைக் கஸ்டப்படுத்தக்கூடாது எண்டு என்னை நினைக்க வச்சிருக்குது.

வருசம் பிறந்தால் ஊரெல்லாம் வெடிவெடிக்கத் தொடங்கிவிடும். வருசம் பிறக்க முதலே வெடி வெடிக்கத் தொடங்கி, வருசம் பிறக்கிற நேரம் உச்சக் கட்டத்திலை நிக்கும். மொத்தமாய் வெடிச்சத்தம் ஓய ஒரு கிழமையாவது செல்லும். வருசப்பிறப்பு, தீபாவளி, தைப்பொங்கல், கிறிஸ்மஸ் எண்டு வந்தாலே போதும்! எங்கடை ஒழுங்கையெல்லாம் வெடி வெடிச்ச கடதாசித் துண்டுகள் மழைக்காலத்து ஈசல் இறகுகள் போலை குவிஞ்சு கிடக்கும். சின்னச் சின்னத் தகரப் பேணியள் எல்லாம் சப்பையாய்ப் பிரிஞ்சு போய்க் கிடக்கும். பட்டண சபைக்காரர் பார்வையிலை படாவிட்டால் அதுகள் மாதக் கணக்காய்க் குவிஞ்சு போய்க் கிடக்கும். ஒரு சில வீட்டுக்காரர் மட்டும் தங்கடை வீட்டுக்கு முன்னால வீதியில் குவிஞ்சு போய்க் கிடக்கும் குப்பைகளைக் கூட்டி, தங்கடை எல்லை கழிய வீதியிலேயே குவிச்சு விடுவினை.

வருசம் பிறக்க முன்னமே அம்மா எங்களுக்குச் சொல்லிப்போடுவா......

''வரிசப்பிறப்பாநாத்துக் குழப்படியேதுஞ் செய்யக்கூடாது. சண்டை பிடிக்கக்கூடாது. அழக்கூடாது. விளங்குதோ? வரிசப் பிறப்பிலை குழப்படி செய்தால் அந்த வரிசம் முழுக்க அதைத்தான் செய்வீங்கள்........ அதவிட்டிட்டு நல்ல பிள்ளையளாய் இருக்கவேணும்... நல்லாய்ப் படிக்க வேணும்...... விளங்குதோ?'' எண்டு அவ சொல்லச் சொல்ல நாங்களும் ஓம்...... ஓமெண்டு சொல்லுவம். அம்மா சொன்னபடி நடக்க வேணுமெண்டுதான், வருசப் பிறப்பண்டு விடிய எழும்பினவுடனையே நினைப்பம். ஆனா, அண்டைக்கு ஏதோ ஒரு விதத்திலையெண்டாலும் குழப்படி விடாமலிருந்ததாய் ஞாபகமில்லை.

நான் கொஞ்சம் வளந்தாப் பிறகு வருசப்பிறப்பு நாளிலை கொஞ்ச நேரம் படிக்கிறது ..... கொஞ்ச நேரம் விளையாடுறது ... .. கொஞ்ச நேரம் பாட்டுப் பாடுறது ..... எண்டு கொஞ்சக் கொஞ்ச வேலையளைச் செய்து கொண்டிருப்பன். ஏனெண்டால் வருசம் முழுவதும் அப்பிடிச் செய்யலாம் எண்ட நம்பிக்கையிலை......

இந்த முறையும் ஏதோ ஒரு வருசம் பிறந்திட்டுது. அந்த வருசத்தின்ரை வடமொழிப் பெயர் மனசுக்கை நிக்குதில்லை. இப்ப நினைக்கிறபோதுதான் தமிழ் எவ்வளவு மொழியளைத் தனக்குள்ளே இரவல் வாங்கி வச்சிருக்கெண்டு தெரியுது. அதாலைதான் நாங்களும் இண்டைக்கு நடுத்தெருவிலை நிக்கிறமோ?

இப்ப கொஞ்சக் காலமாய் வருசப் பிறப்புகள் சோபையில்லாமலேயே வந்து போகுதுகள். வெடி கொளுத்திறேல்லை; பொங்கிப் படைச்சு, புதுஉடுப்புகளோடை உல்லாசமாய்த் திரியுறேல்லை. ஒவ்வொரு வற்றை வீட்டிலையும் ஒவ்வொரு பிரச்சனையள்... ஒரு வீட்டிலை பொம்மர் அடிச்சு, வீட்டிலை சமைச்சுக் கொண்டிருந்த பொம்பிளை செத்திருப்பா. ஒரு வீட்டிலை ஷெல் விழுந்து, இன்னொருவர் செத்திருப்பார். இன்னொண்டிலை, அடுத்த நேரக் கஞ்சிக்கு வழியில்லாமல் — உலர் உணவு நிவாரணத்தை மட்டும் பார்த்துக் காத்திருப்பினை. .. இப்பிடியே வீட்டுக்கு வீடு வாசல்படியாய்ச் சனம் ஒவ்வொரு பாடாய் இருக்கேக்கை வரிசமென்ன? தீபாவளியென்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வரிசம் இறுக்கம் கொஞ்சங்கூட. சாமானு களின்ரை விலையள் சாதா ரணமாய் எங்களைப் போலை வறிய சனங்கள் எட்டிப் பிடிக்கேலாத அள வுக்கு உயர்வாயிருக்குது. இப்பவெல்லாம் மணித் தியாலத்துக்கு மணித்தியா லம் சாமானுகளின்ரை விலை ஏறிக்கொண்டே போகுது. கொஞ்சம் பிரச் சனையெண்டு கேள்விப்பட் டாலே—அந்தண்டு சாமா னுகள் - முக்கியமாய் மண் ணெண்ணை காணக்கிடைக் காது. நாங்கள் ஏதாவது பிரச்சனை இருக்கோ இல் லையோ எண்டதைப் பேப் பரைப் பாக்க முன்னமே, மண்ணெண்ணைக் கடை யைப் பாத்தால் தெரிஞ்சு போகும். பிறகு அடுத்த அடுத்த நாள், இருபதோ முப்பதோ ரூபாயாய் சாமா னுகளின்ரை விலை கூடி யிருக்கும்.

இந்தமுறை சனத் தின்ரை கை நல்லாய் வறண்டு போச்சுது. அதாலை வரிசமெண்டது கூட, பல பேருக்குத் தெரி யாமலே போச்சுது. ஒண்டு ரண்டு வெளிநாட்டுப் பணக் காரற்றை வீடுகளிலைதான் வருசத்தின்ரை அடை யாளத்தைக் காணேலும். எங்கடை வீட்டிலையும் இந்தமுறை, வருசப் பிறப்பு கொண்டாடேல்லை. பொங் கலுமில்லை; புது உடுப்பும் எடுக்கேல்லை. விடிய வெள்ளனவே, 'ஐயரிட்டை ரண்டு ரூபா தெட்சனை குடுத்திட்டு, ஒரு செம்பு மருத்து நீர் வாங்கியந்து தோஞ்சிட்டு அக்கம் பக்கத் திலையுள்ள கோவில்களுக் குப் போட்டுவந்ததோடை சரி.

ஆனால், மாமா வீட் டுக்காரர் வருசப் பிறப்புக் கொண்டாடினவை. அவை யிட்டை கனடாப் பண மிருக்கு. அதாலை, விதம் விதமாக உடுப்புகளைப் போட்டுக் கொண்டு வந்து போச்சினம். இதைப் போலத்தானே, நாங்களும் விதம் விதமான உடுப்பு களைப் போட்டுக்கொண்டு வெடியளையும், பூவாணங் களையும் கொளுத்திக் கொண்டு திரிஞ்சனாங்கள். ஆனா, இந்தப் பிரச்சனை யளாலை இப்ப எங்க ளாலை இதையெல்லாம் கொண்டாடேலாமல் போச் சுது. எண்டைக்கோ ஒரு நாளைக்கு இந்தப் பிரச் சனையெல்லாம் தீந்து, நாங்கள் இதுகளையெல் லாம் சந்தோசமாய்க் கொண்டாடுவந்தானே..... எண்டு நான் எனக்குள்ளை ஆறுதல் பட்டன். வீட்டு நிலமை புரிஞ்சதாலை என் னாலை பேசாமலிருக்க முடிஞ்சுது. ஆனால் தங்கச் சிக்கு அது புரியேல்லை. அவள் சின்னப்பிள்ளை தானே! அதாலை.

''மச்சாளவையெல் லாம் புதுச் சட்டைய ளோடை வரேக்கை நான் மட்டும் இந்தப் பழசோடை நிக்கிறதே'' எண்டு அம்மா வோடை சண்டைக்குப் போனாள். அவள் அப்பிடிக் கேக்கேக்கை கண்ணீரும் வந்திட்டுது. அதைப் பாக்க எனக்கும் பரிதாபமாய்த் தான் கிடந்தது. அதவிட, அம்மாவைப் பாக்க ...

அம்மாவுக்கும் கண் கலங்கிவிட்டுது. அவ ளுக்குப் பதிலொண்டும் சொல்ல ஏலாமல் நிண்டா. என்னாலை கூடத்தான் எதுவும் செய்ய முடி யேல்லை. பிறகு நான்தான் அவளைக் கூப்பிட்டு,

''புது வருசத்திலை புது உடுப்புப் போடுற தாலை ஒண்டும் வந்தி டாது. நாங்கள் எங்கடை மனங்களைப் புதுசா...... வெள்ளையா வச்சிருந்தால் போதும்.. அதுதான் உண்மையான புதுவருசம்'' எண்டு சொன்னன். ஆனால் அவள் சமாதானமடை யேல்லை.

என்னாலையுந்தான் அவளுக்கு ஒரு உடுப்பை எடுத்துக் குடுக்க முடி யேல்லை. அம்மா தான் அப்பா இல்லாதவ. அவ வாலை என்ன செய்யே லும்? பாழாய்ப் போன ஆமியள் அப்பாவைச் சுடாமல் இருந்திருந்தால் இந்தப் பத்து வரிசத்திலை யும் நாங்கள் எவ்வளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேறியிருப்பம். இப்ப தான் எனக்குக் கொஞ்சம் உலகம் பிடிபடுது. இனி நான்தான் கொஞ்சம் கொஞ்சமாய் வீட்டுப் பாடு பயனுகளைப் பாக்க வேணும்.

வீணாய் நாளுகள்தான் ஓடிப்போகுதுகள். ஓடி ஓடி அது இன்டைக்கு என்னட்டையிருந்து பதினெட்டு வருசத்தையும் இழுத்துக் கொண்டு போயிட்டுது. இந்தப் பதினெட்டு வருசத்திலை நான் எதையுந்தான் உருப்படியாய்ச் செய்யேல்லை. செய்ய முடியாமல் போச்சுது. இதுக்காண்டி நான் ஆரைக் குறை சொல்லுறது? காலத்தையா?

கடந்த காலங்கள் கசப்பாயே கழிஞ்சு போயிட்டுது. அம்மா கஸ்டப்பட்டுப் படிப்பிச்சா. நானும் படிச்சன். இடையிலை பிரச்சனையள்...... மனக் குழப்பங்கள். இப்படியே காலம் கழிஞ்சு போக...... திடீரெண்டு பரீட்சை அறிவிப்பு வரும். திடீரெண்டு நிக்கும். பிறகு கொஞ்சக் காலஞ் செல்ல திரும்பவும் பரீட்சை அறிவிப்பு வரும். பரீட்சைக்கு ஆயத்தம் நடக்கும். அந்தநேரம் ஊரடங்குச் சட்டமும் அமுலுக்கு வரும். ஊரடங்குச் சட்டம் அமுலிலை இருக்கேக்கையே பரீட்சையும் நடக்கும்..இதுக்குள்ளை கழுதை தேஞ்சு கட்டெறும்பாய்ப் போனது போலை எங்கடை மூளையிலை கிரகிச்சு வைச்சவையெல்லாம் மறந்து போயிடும். பரீட்சையிலை எதிர்பார்த்த றிசல்டும் கிடைக்காது.

வரும் வரும் எண்டு றிசல்டை எதிர்பாத்தும் நாங்கள் களைச்சுப் போனம். இனி அது வந்தாலும் என்னென்ன சோதினையளுடன் வருமோ தெரியேல்லை. அதுவரைக்கும் இனிமேல் பாத்துக்கொண்டிருக்கேலாது. வருசப் பிறப்பா நாத்து, தங்கச்சிக்கு ஒரு உடுப்பு எடுத்துக் குடுக்கக்கூட வக்கில்லாத நிலையிலை நான் றிசல்டைப் பாத்து—இனி அது வந்தாப் பிறகு ஒவ்வொரு மனக் கோலங்களைத் தீட்டிக்கொண்டிருக்கேலாது.

இவ்வளவு காலந்தான் பேசாமல் இருந்திட்டன். இனியாவது உருப்படியாய் ஏதாவது செய்யவேணும். இந்தப் படிப்பு இண்டைக்கிருக்கிற நிலையிலை எனக்கு என்னத்தைத் தந்திட்டுது. அப்பா இல்லாமல் அம்மா எங்களை வளத்து ஆளாக்கின பிறகும், நான் இப்படியே மரக்கட்டையாய் இருந்து என்ன செய்யிறது?

இண்டைக்கிருக்கிற நிலமையிலை — படிப்பும்— படிப்புக்கேற்ற தொழிலும் எண்டிருந்தால் அடுத்த வருசப் பிறப்புக்குள்ளை காணாமல் போயிடுவம்.

அடுத்த வருசப் பிறப்பிலையாவது நான் கட்டாயம் தங்கச்சிக்கொரு உடுப்பு எடுத்துக் குடுப்பன். உடுப்பெடுத்துக் குடுக்கிற தோடை மட்டும் எங்கடை பிரச்சனை தீர்ந்து போகுமா?


ஆங்கில மருந்து வகைகளை
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
வைத்திய ஆலோசனைக்கிணங்க்
மருந்துவகைகளை வழங்குகின்றோம்.

கீத் மருந்தகம்
பிரதானவீதி, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியர்
லயஞானதிலகம் சி மகேந்திரன்



மாணவன்
விடுதலைப்புலி போராளி தினேஷ்

# போராளிகள் எதையும் சாதிக்க வல்லவர்கள்

''இன்று உனதுமிருதங்க அரங்கேற்றம் நடைபெறுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். மிகவும் குறுகியகாலத்தில் இசைக்கலை பயின்று, மேடையேறும் அளவிற்கு திறமை பெற்ற உனது முயற்சியை நான்பாராட்டுகின்றேன்.

எமதுபோராளிகள் போர்க்கலையில் மட்டுமன்றி, சகல கலை நுணுக்கங்களையும் கற்று சகலகலா வல்லவர்களாக உருவாகவேண்டும் என்பதே எனது ஆவல். எனது ஆவலைப் பூர்த்திசெய்யும் வகையில் நீ ஓர் இசைக்கலைஞனாக உன்னை உருவாக்கி, எமது போராளிகள் எதையும் சாதிக்க வல்லவர்கள் என்பதை நிரூபித்துக்காட்டியுள்ளாய். இசைத் துறையில் உனது முயற்சி வெற்றிபெற எனது மனமார்ந்த ஆசிகள்.''

*(விடுதலைப்புலிகள் இயக்க போராளி தினேஸ் (அரியநாயகம் ஸ்ரீகாந்தா) அவர்களின் மிருதங்க அரங்கேற்றத்தையொட்டி* தமிழீழத் தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் *வழங்கிய* ஆசிச்செய்தி இதுவாகும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா தாயக மண்ணே
உன்மடியில் பாதம் பதிக்க
துடிக்கிறதே என் மனம்
அந்நிய நாட்டு வீதிகளில்
றோபோக்கள் போல் அலைந்துழைத்து
சலித்துப்போனதுவே மனம்
நான் எண்ணிவந்த கனவெல்லாம்
கானல்நீர் என்றுணர்ந்தேன்
பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
எப்போதும் நினைவுகளாய்
இதயமதை வாட்டிடுதே



## தாயகத்து நினைவுகள்

இ. திருமாறன்

மண்விட்டு வந்ததற்காய்
மனச்சாட்சி வேறு உறுத்துதே
எங்கள் தமிழ் மொழி
எம்நாடு எம்மக்கள்
என்ற உணர்வெல்லாம்
இங்கு வந்தபின்பே பிறக்கிறதே
என் இனிய கிராமம்
மரஞ் செடிகள் தோப்புக்கள்
மாலை நிலாக் காட்டி
மழலைக்கு சோறூட்டும் அன்னையர்கள்
மனத்திலுள்ள துயர் அறிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழன்போல் தோள்தட்டும் தென்றல்
அது சுமந்துவரும்
முற்றத்து மல்லிகையின் வாசம்
வானத்திருள் விலகும் முன்பெழுந்து
வாசலிடை கோலமிடும் என்தங்கை
காலைப் பனித்திரை மேல்
கதிர் தெறிக்கும் வேளையிலே
கட்டை வண்டி தனிலேறி
கழனி செல்லும் எம்முழவர்
மாலை இருள் வரும் வரைக்கும்
மகிழ்வுடனே விளையாடும்
பட்டாம் பூச்சிகளாய் சிறார்கள்
எல்லாம் வழமைபோல் நடப்பதற்காய்
இவையேதும் அறியாதார் போல்
எதிரி முகாம் அருகே
எப்போதும் காவல் நிற்கும்
என்வயது இளையவர்கள்
எல்லாம் நினைவாக என்மனதை வாட்டிடுதே
அம்மா தமிழ்த்தாயே
உன்னிலத்தில் கால்பதித்து தரைதொட்டு முத்தமிட
நான் விரைவேன் உடன் இன்றே. □□


□●□

பாவனையாளர்களின் நலன்கருதி
தரமான பொருட்களை
விற்பனை செய்கின்றோம்.

**சண்முகா வர்த்தக நிலையம்**
167, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்த
கண்ணாடிகளைச் சரிவர
பெற்றுக்கொள்ள




# எஸ்-எம்-பெர்ஞன்டோ

**கண்ணாடி வழங்குபவர்கள்**

**580, ஆஸ்பத்திரி வீதி,**
**( இலங்கைவங்கி அருகில் )**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- போர் உலா
- கப்டன் மலரவன்
- வெளியீடு: விடுதலைப் புலிகள் வெளியீட்டுப்பிரிவு, தமிழீழம்.

"1990 கார்த்திகை 9ம் திகதி, பனிக்காற்று ஊ, ஊ என வேகமாக வீசி அடித்துக் கொண்டிருந்தது. பால்போலத் தெறித்த வெண்ணிலவை முகில் கூட்டங்கள் வெட்டி யோடின" என்று அற்புதமாய்த் தொடங்கும் 'போர் உலா'வுக்குப் பின்னே ஓர் ஆழ்ந்த வேதனை இருக்கிறது.

"கலைக்குப் பின்னால் எப்போதும் இருப்பது மன நெருக்கடி. இருப்புக்கும் எதிர்பார்ப்புக்கும் உள்ள மோதல்" என்று சுந்தர ராமசாமி கூறுவார்.

"எந்தச் சிருஷ்டியும் வேதனையில் இருந்துதான் பிறக்கிறது. அந்த வேதனை தான் அந்தக் கலைச்சிருஷ்டியின் ஆனந்த மாகப் பரிமளிக்கிறது" என்பார் ந. சிதம் பர சுப்பிரமண்யம்.

தமிழன் எப்படி இருக்க வேண்டும் என்ற மலரவனின் எதிர்பார்ப்புக்கும் அவன் எப்படி இருக்கிறான் என்ற இருப்புக்கும் இடையில் உள்ள முரண்தான் இந்த இலக் கியத்தின் அடி நாதம். இதனைப் படித்து முடிக்கிறபோது வாசகனின் உள்ளத்திலும் ஓர் ஆழ்ந்த வேதனை ஏற்படுகிறது. "இதைப் போல அல்லது இதை விட மேன்மையாக இன்னும் ஓர் இலக்கியத் தைப் படைக்க மலரவன் எங்கள் மத்தியில் இல்லை" என்ற சோகமே அது!

போர் உலாவின் அட்டைப்படமும் நூல் கட்டமைப்பும் சிறப்பாக இருக்கின் றன. ஒரு போராளியின் சீருடைப்பின்ன ணியில் வெள்ளை நிறமாகப் போடப்பட் டிருக்கும் அவனுடைய நிழல், அவனது தூய சிந்தனைக்கும் அறப்போருக்கும் குறியீடாக நிற்கிறது. வசதியற்ற ஓர் இடத்தில் அவன் குந்தியிருந்து எழுது கிறான். அவனுக்கு முன்னும் பின்னும் ஒழுங்கற்று நிற்கும் இரு கோடுகள் அவனு டைய கஷ்டமான வாழ்நிலைக்குக் குறியீ டுகள் போலும்.

## மதிப்பீட்டுரை

போராட்டம் என்று போனால், சாப்பிடாமல் இருக்க வேண்டிவரும். பிசுபிசுத்த பாணைச் சாப்பிடநேரும் நல்ல குளிரில் ஒரு பாதிச்சாக்கில் படுத்துறங்கும்படி ஆகும். குடம்பிகள் மிதக்கும் நீரைக் குடிக்கநேரிடலாம். கடல் நீரில் தேநீர்வைத்துக் குடிக்கவேண்டி ஏற்படலாம். அத்தகைய துன்பத்துக்குள் மலரவன் ஏன் தன்னை இணைத்துக் கொண்டான்?

உணர்வுகளுக்கான காரணங்களைக் கண்டறியலாம். இலட்சியங்களுக்கான



கப்டன் மலரவன்

காரணங்களை விளக்குவது மிகக் கடினமானது. மலரவன் கொண்டிருந்த இலட்சியம் - புனிதமான ஒன்று!

மாங்குளம் இராணுவமுகாம் தகர்ப்பு என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வே, இந்த நூலின் கருப்பொருள். போர் நிகழ்வு ஒன்றைச் சொல்லுவதற்கு மலரவன் கையாளும் மொழி அற்புதமாய் இருக்கிறது. கவித்துவ ஆற்றலும், விஞ்ஞான அறிவும், போர்ச் சூழலை விபரிக்கும் திறமையும் கலந்த ஒரு மொழி.

''தூரத்தில் நாயாற்றுப் பாலம் பெரிய மிருகம்போலக் குந்தியிருந்தது''; ''வேகமாய் வந்த முகிற்கூட்டம் கண்ணைக் கசக்கி இரண்டு துளி நீரைச்சிந்தியது''; ''அருவி பாய்கிறதா? அன்பு பாய்கிறதா தெரியவில்லை''; ''இரும்புச் சனியனுக்குள் அகப்பட்டதோழன்''; ''மஞ்சளாய் உருகி உருகி அழுதது'' என்று சொல்லும் இடங்களில் மலரவனின் கவித்துவத்திறனை நாம் தரிசிக்கிறோம்.

''ஒரு வெள்ளி பால்வெளியில் ஓடி மறைந்தது'' ''அது வெள்ளியில்லை; ஆகாயக்கல்'' — போன்ற இடங்கள் அவனுடைய விஞ்ஞானத் தெளிவைப் புலப்படுத்துகின்றன.

''கண்டானெண்டால் புக்கைதான், பொட்டு வைத்திருப்பான்'' என்று அவன் பாவிக்கும் போது, போராளிகள் இடையே உலவும் மண்வாசனை மூக்கில் அடிக்கிறது. ''வசந்தன் ரி. 56 ஐத் தடவியபடி...''; ''அஞ்சிஞ்சி குத்தியிருப்பான்'' போன்ற பிரயோகங்கள் போர்அறிவு உள்ளவர்களால் மட்டுமே முழுமையாகப் புரிந்து கொள்ளத்தக்கவை.

நூலின் பல்வேறு இடங்கள் மலரவனின் மன அழுத்தத்தை விரிவாகக் கூறுகின்றன. நாங்கள் மிகவும் பதற்றப்பட்டிருக்கக் கூடிய ஒரு காயத்தைப் பற்றி, அவன் மிக எளிமையாய் ''முழங்காலுக்குக் கீழ் கொஞ்சம் தசை காணாமல் போய் இருந்தது'' என்பான். எந்த ஒரு மனிதனுக்கும் ஒரு பதகளிப்பை ஏற்படுத்தக்கூடிய இந்தச் சண்டையில், மலரவன் எந்த ஒரு கணத்திலும் அச்சம் கொண்டவனாகத் தென்படவில்லை. சரியாக இரவு 7-00 மணிக்குத் தாக்குதல் ஆரம்பமாகிறது. 6-53க்கு ''மச்சான் எல்லாம் 'செற்அப்' பண்ணியாச்சோ?'' என்ற கேள்வி எழுகிறது. அந்த நெருக்கீடு நிறைந்த கணத்திற்கு ஓரிரு நிமிடங்களுக்கு முன் இயற்கையை மிக நுணுக்கமாக அவதானித்திருக்கிறான் அவன். அதனால் அவன் எழுதுகிறான்- ''திசை தப்பிய கொக்கு ஒன்று வேகமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்து போயிற்று. அது சாமியார் குளத்துக்குச் சென்றிருக்க வேண்டும் என எண்ணிக் கொண்டேன்.''

இந்தக் கொக்கைப்பற்றி 6-50க்கு நினைத்துக் கொள்கிறவன், எவ்வளவு உளச் சமநிலை உள்ளவனாய் இருக்க வேண்டும்? இந்த அச்சமின்மை எப்படிவரும்? ''உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை'' என்பான் பாரதி. ''கடமையைச் சரிவர ஆற்றும் போது அதில் அச்சத்துக்கு இடமில்லை'' என்பார் ஷேக்ஸ்பியர்.

சிங்கள இராணுவம் அப்பாவித் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட அகோரமான சித்திரவதைக் காட்சிகள் சில காலப் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் எவ்வளவு கனதியான விஷயங்கள் சொல்லப் படுகிறபோதும் நூலின் ஊடே மிக மெல்லிய நகைச்சுவை இழை ஒன்று ஓடுவது அழகாய் உள்ளது. ''சந்தோஷமாய் இருப்பது உலகில் மிகக் கடினமான விடயம்'' என்று நதேனியல் பிராண்டன் கூறுவார். ''பனைக்கும் ஆளுக்கும் கொஞ்சம் கூட வித்தியாசமில்லை'' என்றுஎழுதுகிறபோதும் ஒருவனுக்கு 'நாற்பதாம் நம்பர்' என்று பட்டம் வைத்து, நாற்பதாம் நம்பர் குந்தியிருந்தது என்கிறபோதும், இவை போன்ற இன்னும் பல வேளைகளிலும் இந்த மென்னகை உணர்வு மேலே வருகிறது.

மலரவனின் பார்வை மிக நுணுக்கமானது. அவதானம் மிக்கது. அது ஒரு சிறந்த எழுத்தாளனுக்குரிய - ஒரு விஞ்ஞானிக்குரிய பார்வை. ஒரு மாமரத்தின் அரைப்பகுதி கருகி இருக்க, மற்றொரு புறம் துளிர் இருந்ததையும், அதன் அருகில் எரிந்த சாம்பல் மேட்டில் சில புற்கள் துளிர் விட்டிருப்பதையும் அவன் ஒரு இடத்தில் விபரிக்கிறான். தமிழினத்தின் ஒரு பகுதி அழிந்தாலும், மற்றப்பகுதியில் துளிர் தோன்றுவதைத் தடுக்க முடியாது என்பதையும், முழுவதையும் எரித்துச் சாம்பல் மேடு ஆக்கினாலும் அதன் மேலும் மீண்டும் எழுவோம் என்பதையும் இந்தக் காட்சி குறியீடாய் விபரிக்கிறது என்று நினைத்தால் அதன் கலைத்துவம் இன்னும் உயரும்.

'நிலவு ஒரு முறை அழுதது' என்று எழுதப்பட்டது கூடப் பின்னால் வரும் உயிர் இழப்புகளுக்கான குறியீடாக இருக்கலாம். ''நட்சத்திரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய்த் தூங்கித் தூங்கி வழிந்து கொண்டிருந்தன'' என்பதை வாசிக்கும்போது, இது போன்ற தாக்குதல் நடைபெறும் காலங்களில் போராளிகள் தூங்குவதில்லை என்பது நினைவு வராமல் போகாது.

உயர்கல்வி கற்பதற்கான திறமையும் தகுதியும் வாய்ந்த மலரவன், ஒரு துறவி போல் அதனை விடுத்து இயக்கத்திற்குள் நுழைந்தான். ஆனால் கல்வி பற்றிய அவன் கருத்து என்ன? அவன் எழுதுகிறான் பாருங்கள்;

''மாங்குளம் மகாவித்தியாலயம் புல் மண்டிக்கிடந்தது. ஓ...... இனிய தம்பி தங்கைகளே! எங்கே சென்றீர்கள்? உங்கள் கல்வித்தாயை விட்டு...!''

ஒருவனுக்குள்ள உறவுகளில் நெருக்கமானது தாய் உறவு. மலரவன் கல்வியைத் தாயுடன் உவமை செய்கிறான்.

மாங்குளத்தில் இராணுவம் புலிகளுடன் மோதப்போகிறது. இந்தப் போரில் அல்லது மொத்தமாகவே இப்போது நடைபெறும் ஈழப்போரில் யார் வெற்றி பெறுவர்? இந்த வினாவுக்கு விடை சொல்ல, இராணுவத்துக்கும் புலிகளுக்கு முள்ள அடிப்படை வேறுபாடுகள் சிலவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாடும் ஒழுங்கு மற்றது இராணு வம் என்ற செய்தியை இந்த நூல் மிகத் தெளிவாகவே எடுத்துக் காட்டுகிறது ' துவக் கில்லாதவனிடம் வீரம் காட்டும் பேடிகள்' என்று மலரவன் அவர்களைச் சுட்டுவான். சிறு சர சரப்புக் கண்டாலும் ஒரு லிங் முடியும் வரை றிகரை விடாமல் சுட்டுத் தள்ளும் பயந்தாங்கொள்ளிகளையும், இறந்தவன் மீது தம் வீரத்தைக் காட்டும் பேடிகளையும் ஆங்காங்கே நூலாசிரியன் காட்டுகிறான். அதே சமயத்தில் அவன், "நாம் மிகச் சிக்கனமாக இருக்கவேண் டும். ஒவ்வொரு ரவையும் ஒரு ஆக்கிரமிப் பாளனைக் கொல்லவேண்டும்'' என்று சிந்திக்கிறான்.

போராளிகளுக்கிடையில் உள்ள உறவு எப்படி? 'மகிழ்ச்சிப் பெருக்கில் ஆரவாரித்து ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டோம்' என்று அவன் எழுதாவிட்டால் கூட, போராளிகளுக்கிடையிலும், போராளிகளுக் கும் மக்களுக்கு மிடையிலும் உள்ள இறுகிய அன்புப்பிணைப்பை எங்களால் புரிந்து கொண்டிருக்க முடியும்.


'இவர்கள் மறையாத சூரியர்கள்' என்று நல்லதே நடக்கும் என்ற நம்பிக்கை யுடன் (Optimistic) மலரவன் நூலை முடிக்கிறான். மெழுகுதிரியாய்த் தன்னை அழித்த போராளி என்பதனால் மட்டு மல்ல, 'போர் உலா' என்ற அற்புதமான இலக்கியத்தை ஆக்கிய பெருமையினாலும் மலரவன் ஈழத்தமிழ் மக்கள் மனங்களில் மறையாத சூரியனாய் என்றும் ஒளிர்வான்.

— பதுமலாஞ்சனன்

□□

□●□

# லெப். கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு - 1993.



தற்கொடைக்கென்றே தளிர்த்த இந்தத் துளிரை யும் - எங்கள் வீதிகளில் இரைந்து திரிந்த இந்தியகவச வாகனங்களையும்... அந்தக்கறுப்பு நாட்களையும்... எப்படி மறப்போம்.

வேற்றுமொழியில் எங்களை அவர்கள் ஏசியதை யும்; காற்றுக்கூட தங்களின் கட்டளைக்குப் பணிய வேண்டும் என்று அவர்கள் நினைத்ததையும் - எப்படி மறப்போம்.

எங்கள் எல்லோரினதும் மொத்தவடிவமாக திலீபன் தீயில்குதித்தான்.

''நல்லூரின் வீதியில் நடந்தது யாகம்
நாலு நாள் ஆனதும் சுருண்டது தேகம்
தியாகத்தின் எல்லையை மீறிய பிள்ளை
திலீபனைப் பாடிட வார்த்தைகள் இல்லை''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகத்தை பல உலகங்களாக வகைப் படுத்திப் பார்க்கலாம். எல்லையற்ற பிரபஞ்ச மாக வியாபித்து நிற்கும் பேருலகம், சூரிய மண்டலத்தில் சுற்றித்திரியும் பூவுலகம், பொருள் மயமாகக்காட்சிதரும் பொருளுலகம், மனித மூளைக் குள் செயற்படும் மனவுலகம், மனித உறவுகளால் பின்னப்பட்டிருக்கும் சமூக உலகம் - இப்படியாகப் பல உலகங்கள் உண்டு. இந்த வகையில் கருத்துலகம் என்ற ஒரு உலகமும் உண்டு.




# கருத்துலகமும் வாழ்வியக்கமும்

**பிரம்மஞானி**

கருத்துலகம் என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? அது எப்படிஇயங்கு கிறது?

கருத்துலகம் என்றால் கருத்துக்களால் அமையப்பெற்ற உலகம். எண்ண உலகம். மனித சிந்தனைகள், நம்பிக்கைகள், கோட் பாடுகள், சித்தாந்தங்கள், வேதாந்தங்கள், தத்துவங்கள், இலக்கியங்கள் என்ற ரீதியில் கருத்துக்குவியல்களைக் கொண்ட உலகம். பலவகைப்பட்ட இந்தக் கருத்துருவங்களின் ஒட்டுமொத்தமான கட்டமைப்பையே இங்கு கருத்துலகம் எனக் குறிப்பிடுகிறோம்.

கருத்துக்கள் என்றால் மனிதனின் மனவுலகக் குகைக்குள் வசிக்கும் அரூபமான நிழலுருவங்கள் அல்ல. அன்றி, அவை அனுபவத்திற்கு அகப்படாத பூடகமான மானசீகப் பொருட்களுமல்ல.

கருத்துகளுக்கு இருப்புண்டு. திண்ணிய மான பொருளிய வாழ்வுண்டு. கருத்துக் கள் மனித பண்பாட்டு உலகிலிருந்து பிறப் பெடுத்து மனிதர்களைப் பற்றிக்கொள் கிறது.

அன்றொரு காலம், பல யுகங்களுக்கு முன்னர், இந்தப் பூமியில் ஒரு கருத்து

கருத்துக்கள் என்றால் மனிதனின் மனவுலகக் குகைக்குள் வசிக் கும் அரூபமான நிழலுருவங்கள் அல்ல. அன்றி, அவை அனுபவத் திற்கு அகப்படாத பூடகமான மானசீகப் பொருள்களுமல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பு எடுத்தது. கருத்துக்களின் மையக் கருத்தாக அது புனிதம் பெற்றது. மேலாதிக்கம் எடுத்தது. மனிதனை அது ஆழமாகப் பற்றிக்கொண்டது.

அந்தக் கருத்துக்கு மனிதன் பொருள் வடிவம் கொடுத்தான். மலைகளைப் பெயர்த்து, கற்பாறைகளைத் தகர்த்து, கலைவடிவம் கொடுத்தான். ஆயிரமாயிரம் ஆலயங்கள் எழுந்தன.

அந்தக் கருத்திற்கு மனிதன் விளக்கங்கள் கொடுத்தான். வியாக்கியானங்கள் கொடுத்தான். வேதங்கள் தோன்றின. சித்தாந்தங்கள் பிறந்தன. கிரிகைகள், சடங்குகள் தோன்றின. நிறுவனங்கள் பிறந்தன. நிர்வாக பீடங்கள் தோன்றின. கோடானு கோடி அடியார்கள் தோன்றினர். ஆராதனைகள் நடத்தினர்.

முன்னரே எமக்கு விலங்குகளை மாட்டி விடுகிறது. விபரமறியாப் பருவத்திலேயே எமது விதியை நிர்ணயித்துவிடுகிறது. கண் திறக்காத சிசுவாக இந்தப் பூமியில் பிரசவித்த கணத்திலிருந்து எமக்கு ஒரு பெயர் சூட்டி, எமக்கு ஒரு வம்சம் என்றும், சாதியென்றும், மதமென்றும், மரபு என்றும் சம்பிரதாயம் என்றும் கருத்துலகம் குத்திவிடும் சமூகக்குறிகள் சுடுகாடுவரை எம்மைப் பின்தொடர்கின்றன. நாம் வாழ்ந்த குடும்பம், நாம் படித்தபாடசாலை, நாம் வழிபட்ட கோவில், நாம் வாசித்த நூல்கள், நாம் பழகும் நண்பர்கள், நாம் வரித்துக்கொண்ட ஆசான்கள் என நாம் கொண்ட கருத்துறவுகளால் காலம் காலமாக எமது மூளையில் திணிக்கப்பட்ட எண்ணங்கள், நம்பிக்கைகள், சித்தாந்தங்கள், உலகப் பார்வைகளால் எமது மனமும் எமது சுயமும் தோற்றப்பாடு கொள்கிறது.

**கருத்துலகிலிருந்தே தனிமனித மனம் உருவாக்கம்பெறுகிறது. கருத்துலகம் மனிதனை இயக்குகிறது. மனிதனின் சமூக செயற்பாடுகளுக்கு ஆதாரமாக இருக்கிறது. நாம் கருத்துலகால் வனையப்பட்ட சமூகப் பொம்மைகள்.**

அந்த மையக்கருத்தில் எழுந்த கருத்துலகம் மனித குலத்தை ஆட்டிப்படைத்தது.

கருத்துலகிலிருந்தே தனிமனித மனம் உருவாக்கம் பெறுகிறது. கருத்துலகம் மனிதனை இயக்குகிறது. மனிதனின் சமூக செயற்பாடுகளுக்கு ஆதாரமாக இருக்கிறது. நாம் கருத்துலகால் வனையப்பட்ட சமூகப் பொம்மைகள்.

நாம் பிறந்த கணத்திலிருந்தே கருத்துலகம் எம்மை விழுங்கிக்கொள்கிறது. நாம் பிறந்து விழிப்புணர்வு பெறுவதற்கு

எம்மீது திணிக்கப்பட்டதும் எம்மை ஆகர்ஷித்துக்கொண்டதுமான கருத்துக்கள் எமக்கு உள்ளே இருப்புக்கொண்டு இயந்திரமாக எம்மை இயக்கிக்கொண்டிருக்கின்றன.

அந்தக் கருத்து ஆழமான நம்பிக்கையாக அவனை ஆட்கொண்டது. அந்தக் கோவில் விக்கிரகத்தின் முன்பாக சாஷ்டாங்கமாக விழுந்து எழுகிறான். பின்னர் பிரகாரத்தைச் சுற்றி பிரதட்சிணம் செய்து வருகிறான். நம்பிக்கை என்ற கருத்தியக்கம் அவனை இயக்கியது. அன்று காலை அரைமணி நேரமாக அந்த மத பண்பாட்டுச் சடங்குகளில் காலம் நழுவியது தெரியாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறு எண்ண இயந்திரம் அவனை இயக்கியது.

ஒருவனது நடத்தை, அவ்னது செயற்பாடு, அவன் நாளாந்தம் நடத்தும் வழிபாடுகள், மற்றவர்களுடன் சேர்ந்து அரங்கேற்றும் சம்பிரதாயச் சடங்குகள், உறவுமுறைகள் — எல்லாமாக அவனது சமூக நடைமுறைச் செயற்பாடுகள் அனைத்தையுமே கருத்துலகம் நிர்ணயித்துவிடுகிறது.

மனிதர்கள் தம்மை அடையாளம் காணவும், சமூகப் பிறவிகளாக தம்மை உருவாக்கிக் கொள்ளவும், மற்றவர்களுடன் உறவுகொண்டு பண்பாட்டு வாழ்வில் பங்கு கொள்ளவும் கருத்துலகம் வழிசெய்து கொடுக்கிறது. இந்த வகையில் தனிமனித வாழ்விற்கும் சமூக சீவியத்திற்கும் கருத்துலகம் ஆதாரமாக இருக்கிறது.

கருத்துக்கள் சமூக உலகம் சார்ந்தவை. கருத்துலகமானது சமூக உலகத்தின் ஒரு உலகமாக, சமூகக் கட்டமைப்பின் ஒரு அமைப்பாக, மனித வாழ்வியக்கத்தை ஊடுருவி நிற்கிறது.

கருத்துலகத்தை சமூக உலகமே படைக்கிறது. சமூக நிறுவனங்களே கருத்துலகை உருவாக்கம் செய்கின்றன.

குடும்பம், பாடசாலை, பல்கலைக் கழகம், கோவில், கட்சி, தகவல் தொடர்பு ஸ்தாபனங்கள் என்ற ரீதியில் கருத்து உற்பத்தி நிறுவனங்கள் உள்ளன. பேச்சாக, எழுத்தாக, பாடமாக, போதனையாக, பிரசங்கமாக, பிரச்சாரமாக, செய்தியாக, தகவலாக, பல்வேறு வழிகளில், பல்வேறு வடிவங்களில் கருத்து உற்பத்தி நிகழ்கிறது. குழந்தைப் பருவத்திலிருந்து வாலிபப் பராயம்வரை வீட்டிலும் பள்ளியிலுமாக நீண்ட நெடுங்காலம் ஒருவனுக்கு கருத்துத் திணிப்பு நடக்கிறது. அந்தக் கருத்துலக அழுத்தத்தில் அவனது ஆளுமை பிறந்து வளர்கிறது. மூளைக்குள் கொட்டப்பட்ட கருத்துகளின் தன்மையைப் பொறுத்ததாக அவனது சிந்தனையும், செயற்பாடும், சீவியமும் அமைந்துவிடுகிறது.

கருத்துகளைப் படைத்து, அந்தக் கருத்துகளை வெகுசன அரங்கில் பரப்பி, சமூகக் கருத்தோட்டத்தை கட்டி வளர்த்து, சமூக சிந்தனைப் போக்கை நெறிப்படுத்தி, சமூக கட்டுப்பாட்டை நிலைநாட்டுவதில் கருத்து உற்பத்தி நிறுவனங்களின் பங்கு முக்கியமானது. இந்த வகையில் மனிதர்கள் மீது ஆதிக்கம்செலுத்தி, அவர்களைக் கட்டுப்பாட்டுடன் ஆளுவதற்கு கருத்துலகம் அவசியமானது என்பதால் உலகத்திலுள்ள பல்வேறு அரசுகளும், ஆளும் வர்க்கங்களும் கருத்து உற்பத்தி நிறுவனங்களை தமது அதிகாரக்கட்டுப்பாட்டின்கீழ் வைத்துள்ளன.

ஒரு அரசு என்றாலும் சரி, அல்லது அந்த அரசுக்கு முண்டுகொடுத்து நிற்கும் ஆளும்வர்க்கம் என்றாலும் சரி, கருத்துலகம் வாயிலாகவே தனது ஆட்சியை நியாயப்படுத்தி நிலைநிறுத்த முயற்சிக்கிறது.

கருத்துகளை மக்கள்மீது திணித்து, மக்களின் விழிப்புணர்வை மழுங்கடித்து, மக்கள் மனவரங்கில் ஒரு பொய்யான

*கருத்துக்கள் சமூக உலகம் சார்ந்தவை. கருத்துலகமானது சமூக உலகத்தின் ஒரு உலகமாக, சமூகக் கட்டமைப்பின் ஒரு அமைப்பாக, மனித வாழ்வியக்கத்தை ஊடுருவி நிற்கிறது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரக்ஞையை உருவகித்து, கருத்தாதிக்கம் மூலம் தனது ஆட்சியை வலுப்படுத்துகிறது. இந்த வகையில் கருத்துலகமானது மனிதர்கள்மீது ஆதிக்கம் செலுத்தும் ஒரு அடக்குமுறைக் கருவியாகப் பாவிக்கப்படுகிறது.

அன்றொருகாலம், காலனித்துவப் பேரரசுகள் இந்தப் பூமிமீது தமது வல்லாதிக்கத்தை விரிவுபடுத்தியபோது ஆயுத வன்முறையை மட்டும் பாவிக்கவில்லை. கருத்தாதிக்கத்தையும் ஒரு அடக்குமுறைக் கருவியாக அவர்கள் பிரயோகிக்கத் தவறவில்லை. மதம், மொழி, தத்துவம், தார்மீகம், அரசியல் என்ற ரீதியில் அந்நிய பண்பாட்டுக் கருத்துருவங்கள் சுதேசிய மக்கள்மீது திணிக்கப்பட்டன. நிலத்துடன் நின்றுவிடாது மக்களின் மனவுலகமும் ஆக்கிரமிக்கப்பட்டது.

முதலாளித்துவ உற்பத்தி உலகம் தனது அநீதியான சுரண்டல்முறையை நியாயப்படுத்த மிகவும் சாதுரியமான முறையில் கருத்துலகத்தைப் படைத்திருக்கிறது. இந்த அநீதியான உலகில்தான் நீதிபற்றிய கருத்துகள் மிகவும் அழகான ஆடைகள் அணிந்து கவர்ச்சிகரமாகத் தோற்றமளிக்கின்றன.

இங்குதான் மனித சுதந்திரம், மனித உரிமை, மனித தர்மம், மக்கள் ஆட்சி எனப் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட கருத்துருவத்திரைக்குப் பின்னால் மிகவும் கொடூரமான ஒடுக்குமுறை தாண்டவமாடுகிறது. இந்தப் புனிதமான கருத்துருவக் கோஷங்களை எழுப்பியபடிதான் உலக முதலாளித்துவ அரசுகள் பூமியின் இரத்தத்தை உறுஞ்சிக்கொண்டிருக்கின்றன. முதலாளித்துவ உற்பத்தி உலகில்தான் கருத்துலக மாயைக்கும் நடப்பியல் எதார்த்தத்திற்கும் மத்தியில் எவருமே கண்டுகொள்ள முடியாதவாறு முரண்பாடுகள் மூடிமறைக்கப்பட்டிருக்கின்றன. இங்குதான் உழைக்கும் மக்களுக்கு கருத்துப் போதையும் உழைப்பை சுரண்டுபவனுக்கு நிகரலாபமுமாக சனநாயக சமத்துவம் தழைத்தோங்கிநிற்கிறது.

> *ஒரு அரசு என்றாலும் சரி, அல்லது அந்த அரசுக்கு முண்டுகொடுத்து நிற்கும் ஆளும்வர்க்கம் என்றாலும் சரி, கருத்துலகம் வாயிலாகவே தனது ஆட்சியை நியாயப்படுத்தி நிலைநிறுத்த முயற்சிக்கிறது.*

கருத்து விலங்கிட்டு மனித மனங்களை சிறைகொள்வது ஒரு நுட்பமான அடக்குமுறை யுக்தி. உலகெங்கும் அடக்குமுறையாளர்கள் இந்தக் கருத்தாதிக்க யுக்தியையே கடைப்பிடிக்கிறார்கள். பொய்யாக, புரட்டாக, புனைகதையாக, புராணத்துப் புதிர்களாக மெய்மையைத் திரித்து, கருத்துலக மாயைக்குள் மனித மனங்கள் புதைக்கப்படுகின்றன. மனிதர்களை விழித்தெழச்செய்யாது, அவர்களை நித்திய உறக்கத்தில் ஆழ்த்துவதற்கு ஏகாதிபத்தியவாதிகளும் சரி, பேரினவாதிகளும் சரி, இந்த எண்ணப் போதையையே பாவித்து வருகின்றனர். மக்களின் கிளர்ச்சியை நசுக்க, புரட்சியை முறியடிக்க, விடுதலை உணர்வை கொன்றுவிட, கருத்து ஒரு கனரக ஆயுதமாகப் பிரயோகிக்கப்படுகிறது.

எந்தவொரு காலத்திலும், எந்தவொரு சமூகத்திலும் அதிகார மேலாண்மையும் கருத்துநிலை மேலாதிக்கமும் ஒன்றோடொன்று தொடர்புடையதாக, ஒன்றுக்கொன்று முண்டுகொடுப்பதாக இயங்கி வருகிறது. அன்றும் சரி, இன்றும் சரி, சமூகத்தில் அதிகார ஆதிக்கம்பெற்ற சக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களே கருத்துநிலையிலும் ஆதிக்கம்செலுத்தி வருகின்றன. முதலாளித்துவ உற்பத்தி உலகில் ஆளும் வர்க்கத்தின் கருத்துநிலை மேலாதிக்கமானது, ஆட்சி அதிகாரத்தை நியாயப்படுத்தி நிலைநிறுத்துவது மட்டுமல்லாது பொருள் உற்பத்தி உறவுகளை மீளாக்கம் செய்வதையும் நோக்காகக் கொண்டு செயல்படுகிறது. இந்தக் கைங்கரியத்தை கருத்து உற்பத்தி நிறுவனங்களே நிறைவுசெய்கின்றன. கருத்து உற்பத்தியின் மையமாக விளங்கும் கல்வி நிறுவனங்களே இதில் முக்கிய பங்கு வகிப்பதாக அல்தூசர் என்ற சிந்தனையாளர் சுட்டிக்காட்டியிருக்கிறார். இங்குதான் முதலாளித்துவத்தின் தொழிலாக்க சக்தியாக தொழிலாளர் படையும், தொழில்நுட்ப நிபுணர்கள், நிர்வாகிகள், முகாமையாளர்களும் உருவாக்கப்படுகின்றனர். சட்டம், அரசியல், சமூகவிஞ்ஞானம், தத்துவம்போன்ற பாடத்திட்டங்கள் முதலாளித்துவ ஆட்சியமைப்பின் சித்தாந்தக் காவலர்களை உருவாக்கிக் கொடுக்கிறது. இப்படியாக முதலாளித்துவம் தனது ஆட்சியதிகாரத்தை நீடிக்கவும், பொருள் உற்பத்தி உறவுகளை மீளாக்கம் செய்யவும் கருத்துலக நிறுவனங்களைப் பயன்படுத்துகிறது.

சரிந்துபோன சோசலிச சர்வாதிகார உலகமும் 'அரச சித்தாந்தம்' என்ற பெயரில் கருத்தாதிக்கம் வாயிலாகவே மக்களைக் கட்டுப்படுத்தி, நெறிப்படுத்த முனைந்தது. மார்க்சீய மரபுவாதத்தை மெய்யுண்மைத் தத்துவமாகச்சித்தரித்து ஆட்சியதிகாரத்தை மக்கள்மீது திணித்தது. இன்றைய மூன்றாம் உலகத்திலும், அரசுகள், கருத்துத்திணிப்பை அடக்குமுறைக் கருவியாகப் பயன்படுத்துகின்றன. மேற்குலக 'சனநாயக' பாரம்பரியத்தையும் முதலாளித்துவ பொருளுற்பத்தி முறையையும் தழுவிக்கொண்டுள்ள இந்தியா, சிறீலங்கா போன்ற நாடுகளிலும் இதே நிலைமையைக் காணலாம்.

இந்தியாவில் பிராமணிய கருத்துலகம் மேலாண்மை பெற்று நிற்கிறது. பாரத பூமியில் ஆரியர்பாதங்களைப் பதித்த யுகத்திலிருந்து, வேதங்கள் என்றும் இதிகாசங்கள் என்றும், மனுநீதி சாஸ்திரங்கள் என்றும், மனித தர்மங்கள் என்றும் பார்ப்பானியம் படைத்துவிட்ட கருத்துலகம், பூதாகரமாக வளர்ந்து, ஆழவேரோடி, அரசியல் கிளை பரப்பி, ஒரு இந்து சாம்ராஜியமாக இன்று மேலோங்கிநிற்கிறது.

பஞ்சம், பட்டினிச்சாவு, ஏழ்மை, வறுமை, அநீதி, அடக்குமுறை, இரத்தத்தை உறுஞ்சும் சுரண்டல்முறை, - எல்லாவற்றையுமே ஏற்புடையதாக, இயல்பானதாக, சாதாரண வாழ்வின் சாதாரண நிகழ்வுகளாக, முற்பிறவி வினையாக, பிரம்மலோக தர்மமாக நியாயப்படுத்தவல்ல மாபெரும் கருத்தாதிக்க சக்தியாக பிராமணியம் செயல்படுகிறது. துறவிகளின் ஆச்சிரமத்திலிருந்து சினிமா உலகம்வரை, பத்திரிகைத்துறையிலிருந்து பல்கலைக்கழகங்கள் வரை, எல்லாவிதமான கருத்து உற்பத்தி நிறுவனங்களிலும் பார்ப்பானிய ஆதிக்கம் ஊடுருவிநின்று பரந்துபட்ட இந்திய வெகுசனம்மீது மேலாதிக்கம்செலுத்தி

*முதலாளித்துவ உற்பத்தி உலகம் தனது அநீதியான சுரண்டல் முறையை நியாயப்படுத்த மிகவும் சாதுரியமான முறையில் கருத்துலகத்தைப் படைத்திருக்கிறது. இந்த அநீதியான உலகில்தான் நீதி பற்றிய கருத்துகள் மிகவும் அழகான ஆடைகள் அணிந்து கவர்ச்சிகரமாகத் தோற்றமளிக்கின்றன.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறது. இந்த மேலாதிக்க கருத்துநிலை யானது, இந்திய மேல்தட்டுவர்க்க சக்தி களின் அதிகார உறவுகளுடன் ஒன்றிணைந் ததாக பிராமணிய ஆட்சியமைப்பு கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது. இந்தப் பிராமணிய மேலாண்மை (HEGEMONY) இந்திய தேசிய இனங்களின் தேசியவாத கருத் தோட்டங்களையும் படிப்படியாக ஏப்பம் விட்டுவருகிறது.

கருத்துலகமானது மார்க்சிய மரபுவாதி கள் கருதியதுபோல பொருளாதார அடித் தளத்திலிருந்து மேலெழும் பிரதிபிம்பங்கள் அல்ல. அன்றி, 'பனிமூட்டம்' போன்ற பொய்யான கற்பனாவாத பிரமைகளும் அல்ல. கருத்துலகமானது மனித வாழ்வை யும் சமூக இயக்கத்தையும் நிர்ணயிக்கும் ஒரு மாபெரும் சக்தி. கிராம்ஸி என்ற தத்துவ அறிஞன் கூறியதுபோல, 'ஒரு பொருளாய வரலாற்று சக்தி.' சமூக மாற் றத்தை ஏற்படுத்தவல்ல சக்தி.

பொருளாதார கட்டுமாணத்தின்மீது கருத்துலகம் கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது என்றும் பொருள் உற்பத்தி உறவுகளில் அடிப்படையான மாற்றங்கள் நிகழ்ந்து சமூக மாற்றம் ஏற்படும்பொழுது, கருத்துல கிலும் தன்ன்ச்சையாகவே மாற்றங்கள் ஏற் படுமெனவும் மரபுவாத மார்க்சீயம் கருதி யது. இது ஒரு தவறான கண்ணோட்டம் என்பதை வரலாறு நிரூபித்திருக்கிறது.

□ □

கருத்துலகமானது, சமூக உலகத்தின் ஒரு உலகமாக, சமூக வாழ்வியக்கத்துடன் பின்னிப்பிணைந்து இயங்கியபோது, அதற் கொரு தனித்துவமுண்டு. தன்னியல்பான வாழ்வுண்டு. பொருளாதார மாற்றங்களி னால் கருத்துநிலையில் தன்னிச்சையாக மாற்றம் நிகழ்வதில்லை.

கருத்துலக மாற்றம் கருத்துப் புரட்சி யால் ஏற்படுகிறது. கருத்துப் போராட்டத் தால் நிகழ்கிறது. ஆழமான விழிப்புணர் வால் ஏற்படுகிறது.

பழைய கருத்துகளுக்குப் பதிலாக புதிய கருத்துகளை திணிக்க முயல்வது கருத்துப் புரட்சி ஆகாது. அது கருத்துலக மாற்றத்தை கொண்டுவரப்போவதில்லை. சீனக் கலாச் சாரப்புரட்சி கருத்துலகை மாற்றவில்லை. எதிர்ப்புணர்வையே தோற்றுவித்தது.

புதிய கருத்துகள், புரட்சிகரமான கருத் துகள் மக்களின் மனதைப்பற்றிக்கொள்ளும் பொழுதே கருத்து மாற்றம் நிகழ்கிறது.

அந்தக் கருத்துகள், மக்களின் மண் ணுக்கு நீர்பாய்ச்சி, அவர்களின் வரலாற்று வேருக்கு உரமூட்டி, அவர்களின் சமூக பண்பாட்டு வாழ்வை மேம்படுத்தி, ஒளிமய மான எதிர்காலத்தை குறியிட்டுக்காட்டுவ தாக அமையும்பொழுதே அவை மக்களைப் பற்றிக்கொள்கின்றன.

□ □

"வெளிச்சம்"
*கலை, இலக்கிய சமூக இதழ்*

*உருவாக்கம்:*
ஆசிரியர் குழு

*இதழ் அமைப்பு:*
இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

*ஓவியங்கள்:*
தயா

*அட்டையும் அச்சமைப்பும்:*
மரியதாஸ்

*வெளியீடு:*
விடுதலைப்புலிகள்
கலை, பண்பாட்டுக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கரங்கள் உயரட்டும்

பெருமாள்

அயல் வீடுகளில்
குண்டு வீசப்படுகிறது
இடிந்த வீட்டின் அடியிலிருந்து
இரத்தம் வடிந்தோடுகிறது
உனக்கிது பொருட்டல்லவென்று
ஒய்யாரமாகத் துயில் கொள்ளாதே
உனக்கிது சுதந்திரமென நம்பாதே!

குருதி ஓடும் போது
உன் கரங்களும் உயராவிட்டால்
அடுத்தது உன் முற்றத்தில்
பூமரங்கள் சிதையும்
உனது குருதி வீணாகவடியும்
இது கண்ணறிந்த சாட்சி


'பலகரங்கள் சேர்கையில்
மதம் முற்றிவரும் யானையும்
கால்மடங்கும்'
எங்கள் வீரரின் சாவின் போதும்
இந்த நம்பிக்கை—
இந்தக்குமுறல் விளைகிறது

இளைஞனே!
இன்றே உனது கரங்கள் உயரட்டும்
இனியதொரு புதுயுகம் படைப்போம்! □□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பிய விதங்களில்
மனம் நிறைந்த வண்ணம்
அழகிய நகைகளை அணியுங்கள்
தரமான தங்கம் என்றும் மதிப்புவாய்ந்தது.

ஓடர் நகைகளுக்கும், 22 கரட் பவுணில்
புதிய டிசைன்களில் எழில்தரும் நகைகளுக்கும்



நித்திய கல்யாணி நகை மாளிகை

தங்கப்பவுண் நகை வியாபாரம்

162, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எங்கும் நிறைந்தது இசை — எதிலும்
இன்பம் தருவது இசை'

கீழைத்தேய, மேலைத்தேய
இசைக்கருவிகள் திருத்துவதில்
25 வருட அனுபவம் நிறைந்த வல்லாளர்கள்

இராசன் இசையகம்
142, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.


---

நவீன கருவிகளின் மூலம் 'வீடியோ' படம் பிடிப்பதற்கும்
கறுப்பு - வெள்ளை, கலர் புகைப்படங்களை
உடனுக்குடன் பெற்றுக்கொள்ளவும்
சிறந்த நிறுவனம்

றூபி போட்டோ
10 — 14, அருச்சுனா வீதி, [ஸ்ரான்லி வீதி]
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை வேட்கையுடன் வெளிவரும்
'வெளிச்சம்'
சிறப்புடன் வளர வாழ்த்துகின்றோம்.




# ரேஸ்ரி லைன்

14, சீனியர் லேன்,
யாழ்ப்பாணம்.

'வெளிச்சம்' இதழின்
கலை இலக்கிய முயற்சி, இந்தக்காலத்தில்
கலைப்பெறுமானச் சுவடியாக விளங்க
எமது வாழ்த்துக்கள்.



பலசரக்குப் பொருட்கள்
மொத்த விற்பனையாளர்

# கலைமகள் வர்த்தக நிலையம்

288, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிலிருந்து பரவும் "வெளிச்சம்"
இரண்டாண்டு நிறைவுக்கு எமது வாழ்த்துக்கள்.

*அச்சுக்கலையில் 45 வருட அனுபவம்!*
*அழகான பதிப்புக்கு எமது வெளியீடுகள் நிருபணம்!!*
*எங்கெல்லாம் இருந்து எம்மைத் தேடிவரும்*
*இரகசியம் இதுதான்.*

உங்கள் அச்சுப் பதிப்புத் தேவைகள் அனைத்தையும்
எழிலாகவும், விரைவாகவும் நிறைவேற்றும் நிறுவனம்

# ஏ. எஸ். ஜே. பிரின்ரிங் வேக்ஸ்

**காங்கேசன்துறை வீதி, மல்லாகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org